بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ    نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ    وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡد

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 9

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

இதழ் 19 - 20

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரி கமரி 1445 ஷவ்வால் 29-துல்கஅதா 07 ★ ஹிஜ்ரி ஷம்ஸி-1403

ஹிஜ்ரத் 09-16★ மே 09-16 2024

## அல்லாஹ்வின் கட்டளை

وَعَدَ اللّٰہُ الَّذِیۡنَ اٰمَنُوۡا مِنۡکُمۡ وَعَمِلُوا الصّٰلِحٰتِ لَیَسۡتَخۡلِفَنَّہُمۡ فِی الۡاَرۡضِ کَمَا اسۡتَخۡلَفَ الَّذِیۡنَ مِنۡ قَبۡلِہِمۡ ۪

**பொருள் :**
அல்லாஹ் உங்களுள் நம்பிக்கை கொண்டு நற்செயலாற்றுபவர்களை அவர்களின் முன்னோர்களை கலீஃபாவாக (தலைவராக) ஆக்கியது போன்று இப் பூமியில் அவர்களை கலீஃபாவாக ஆக்குவதாக வாக்குறுதி வழங்கியுள்ளான்.
(அந்நூர் : 56)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

# கிலாஃபத் அமைப்புடன் தொடர்பில் இருந்தால் மட்டுமே உலகில் அமைதியை நிலை பெறச் செய்ய முடியும்

### ஸய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் வழங்கிய வழிகாட்டல்

நான் உங்களுக்கு இந்த அறிவுரையையும் வழங்குகின்றேன். அதாவது நீங்கள் எப்போதும் அஹ்மதிய்யா கிலாஃபத் என்ற அருளுக்குரிய அமைப்புடன் தொடர்புடையவர்களாக இருந்து வாருங்கள். மேலும் நன்றியுணர்விற்கான தொடர்பை வையுங்கள். ஏனெனில், இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்கான செயலும், உலகில் அமைதியை நிலைநாட்டுதலும் கிலாஃபத் அமைப்புடன் தொடர்பில் இருந்தால் மட்டுமே நிகழ முடியும். எனவே எப்போதும் இந்த அருளுக்குரிய அந்தஸ்தை கருத்தில் கொள்ளுங்கள். மேலும், நீங்களும் உங்களுடைய எதிர்கால தலைமுறையினரும் எப்போதும் கிலாஃபத்தின் வழிகாட்டலின் நிழலின் கீழ் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். (ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் வழங்கிய தூதுச் செய்தி,ஜல்ஸா ஸாலானா 2020, சான்று, பத்ர் இதழ், பிப்ரவரி 18, 2021, பக்கம் 13)




பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ

## பதர் வார இதழ் காதியான்
## சிறப்பிதழ் : கிலாஃபத்

## இந்த இதழில்


| | இந்த இதழில் | பக்கம் |
|---|---|---|
| 1 | தலையங்கம் | 2 |
| 2 | ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் ஜுமுஆ பேருரை (மார்ச் 22, 2024) | 3 |
| 3 | கிலாஃபத் மார்க்கத்தின் நிரந்தர அமைப்பின் ஓர் அங்கமாகும். மேலும் இறைவனின் தொன்று தொட்ட நியதியின் வெளிப்பாடாகும் - (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் எம். ஏ (ரலி) அவர்கள்) | 12 |
| 4 | ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் குத்பாக்கள் மற்றும் சொற்பொழிவுகளிலிருந்து பயன்பெறுவதன் முக்கியத்துவம் | 14 |
| 5 | ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் ஜுமுஆ பேருரை (மார்ச் 29, 2024) | 18 |


## கிலாஃபத்துடனான தொடர்பும், அதன் கண்ணியமும் மிகவும் அவசியமாகும்; உலகம் அதன் மகத்துவ மிக்க அருளிலிருந்து இழப்பிற்குரியதாக இருக்கின்றது

எல்லாம் வல்ல அல்லாஹ் நம்மை முஸ்லிமாக ஆக்கியிருப்பது எத்துனை நற்பேறாகும்! ஏனெனில், நாம் வசிக்கும் நாடோ இணை வைத்தல் மற்றும் சிலை வணக்கத்தின் தலைமையகமாக இருக்கின்றது.ஒருவேளை நாம் முஸ்லிமாக இல்லையென்றால் பின்னர் நாம் எந்த தேவி, தேவர்களை வணங்கிக் கொண்டிருந்திருப்போம் என்று தெரியாது! அடுத்து, இறைவனின் கருணை மேல் கருணை என்னவென்றால், அவன் நம்மை முஸ்லிமாக ஆக்கியதற்கு பிறகு வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதி மொழி வழங்கப்பட்ட மஹ்தியின் மீது ஈமான கொள்வதற்கு நற்பேறு வழங்கிவிட்டான். மேலும் நம்மை அஹ்மதி முஸ்லிமாக ஆக்கிவிட்டான். இல்லையென்றால் நாம் 72 பிரிவுகளில் எந்த பிரிவில் சிக்கி என்னென்ன தீய சடங்குகளுக்கு இரையாகி இருப்போம் என்று தெரியாது! என்னென்ன இணை வைத்தலுக்கான செயல்கள் நம்மிடம் இருந்து வெளிப்பட்டு இருக்குமோ தெரியாது! ஒரு பிரிவோ எப்படிப்பட்டதாக இருக்கின்றது என்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த ஸஹாபா பெருமக்களைக் குறித்து சமுதாயத்திற்கு இவ்வாறு வழிகாட்டல் வழங்கியிருந்தார்களோ, அதாவது அந்த ஸஹாபிகளில் நீங்கள் எவரைப் பின்பற்றினாலும் நேர்வழி பெறுவீர்கள் என்று வழிகாட்டல் வழங்கியிருந்தார்களோ அந்த ஸஹாபிகளுடன் பகைமை கொள்வதும், அவர்களை ஏசி பேசுவதும் ஈமானின் அங்கமாகும் என்று அந்தப் பிரிவு கருதுகின்றது.(நவூதுபில்லாஹ்)

அல்லாஹ்வே! ஒரு முஸ்லிம் இப்படிப்பட்ட கொள்கை கொண்டவராகவும் இருக்க முடியுமா? என்று நமக்கோ ஆச்சரியம் ஏற்படுகின்றது. மேலும், பின்னர் வாக்களிக்கப்பட்ட மஸீஹை ஒப்புக் கொண்ட பிறகு அல்லாஹ் நம் மீது செய்த மாபெரும் கருணை இதுவும் ஆகும். அதாவது, அவன் நம்மை கிலாஃபத்துடன் தொடர்பு கொண்டவர்களாக ஆக்கியுள்ளான். ஏனெனில், நாம் வரலாற்றில் பார்க்கின்றோம். இப்படியும் பெயரளவிலான ஒரு பிரிவு இருக்கின்றது. அதாவது, அந்தப் பிரிவினர் (அதாவது லாஹூரி பிரிவினர்) கிலாஃபத்தின் கரத்தை விட்டு விலகி, ஓர் அருளுக்குரிய நகரத்தை விட்டு விட்டு ஒரு நகரத்தை தங்களது தலைமையகமாக ஆக்கிக் கொண்டனர். ஆனால், அவர்களின் பெயரும் நிலைபெறவில்லை. எந்த பிரபல்யமும் இல்லாமல் போய் விட்டது. கிளர்ச்சியாளர்களாக கிலாஃபத்தை விட்டு தனித்து சென்றுவிடும் பலரும் இருக்கின்றனர்.

رَبَّنَا لَا تُزِغْ قُلُوْبَنَا بَعْدَ اِذْ هَدَيْتَنَا وَهَبْ لَنَا مِنْ لَّدُنْكَ رَحْمَةً ۚ اِنَّكَ اَنْتَ الْوَهَّابُ۔

கிலாஃபத் ஒற்றுமை, ஒருமைப்பாடு, இறையச்சம் மற்றும் தூய்மை, இஸ்லாத்தின் முன்னேற்றம் மற்றும் அதன் உறுதிப்பாடு மற்றும் தனிப்பட்ட ரீதியிலும், ஜமாஅத் அளவிலும் ஆத்மிக வாழ்விற்கான உத்திரவாதம் ஆகும். ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு ஜமாஅத் உறுப்பினர்களுக்கு விலை மதிப்பற்ற அறிவுரைகளை வழங்கினார்கள். அவற்றில் ஓர் அறிவுரை இதுவாக இருந்தது.

அன்னார் (ரலி) கூறினார்கள்: நினைவிற் கொள்ளுங்கள்! எல்லா சிறப்புகளும் ஒற்றுமையில் இருக்கின்றன. எவருக்கு தலைவர் இல்லையோ அவர் மரணித்து விட்டவர் ஆவார். (தாரீகே அஹ்மதிய்யத், தொகுதி 3, பக்கம் 190)

எனவே ஒற்றுமையில் தான் வாழ்வு உள்ளது. மேலும் ஒற்றுமை கிலாஃபாத்தின் மூலமே உள்ளது.

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார்கள்:

ஒவ்வோர் இரவிலும் கற்பனை கண்களால் நான் எல்லா நாட்டையும் சென்றடைகின்றேன். மேலும் ஜமாஅத் உறுப்பினர்களுக்காக துஆ செய்கின்றேன்.

ஸய்யிதுனா முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும் ஒரு சந்தர்ப்பத்தில் கூறியிருந்தார்கள். ஓர் உலகத் தலைவருக்கும் கலீஃபாவிற்கும் இடையில் உள்ள வித்தியாசம் என்னவென்றால், கலீஃபா ஜமாஅத் உறுப்பினர்களுக்காக துஆ செய்கின்றார். மேலும் அவர்களின் வேதனையை தமது உள்ளத்தில் கொள்கின்றார். ஆனால் உலகத் தலைவருக்கோ அதற்கான பாக்கியம் கிடைப்பதில்லை. இன்னும் கூறப்போனால், சிலநேரங்களில் ஓர் உலகத் தலைவரோ ஆட்சி, அதிகாரத்திற்காக பொதுமக்களை அபாயகரமான சோதனைகளிலும், துன்பங்களிலும் ஆழ்த்தி விடுகின்றார்.

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு முதல் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அதில் அன்னார் (ரலி) இவ்வாறும் கூறினார்கள்:

தற்போது நீங்களோ என்னிடம் பைஅத் செய்துள்ளீர்கள். மேலும், என்னுடன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு பிறகு ஒரு தொடர்பை ஏற்பத்திக் கொண்டுள்ளீர்கள். இந்தத் தொடர்பில் நன்றியுணர்விற்கான முன்மாதிரியை காட்டுங்கள்; மேலும் என்னை உங்களது துஆக்களில் நினைவு கொள்ளுங்கள். நான் நிச்சயம் உங்களை நினைவில் கொள்வேன். ஆம்! நினைவில் கொண்டும் இருக்கின்றேன். இன்று வரை நான் செய்த துஆக்களில் ஜமாஅத்தின் உறுப்பினர்களுக்காக துஆ செய்யாமல் இருந்ததில்லை. ஆனால், இனி நான் முன்னரை விடவும் அதிகம் நினைவில் கொள்வேன். அடுத்து கேளுங்கள்! அல்லாஹ்விடம் செய்த உடன்படிக்கையை முறிக்கின்றவர்கள் செய்யும் எந்த வேலையையும் நீங்கள் செய்யாதீர்கள். நாம் முஸ்லிமாக வாழ்ந்து முஸ்லிமாக மரணிக்க வேண்டும். ஆமீன். இதுவே நமது துஆக்களாக இருக்க வேண்டும். ( ஃபஸ்லே உமர் வாழ்க்கை வரலாறு, தொகுதி 1, பக்கம் 342)

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் அகப்பார்வை மிக்க தூதுச் செய்தியில் கூறினார்கள்: நான் உங்களுக்கு அஹ்மதிய்யா கிலாஃபத் அமைப்பின் இறை அமைப்பின் முக்கியத்துவத்தின் பக்கமும் கவனமூட்டுகின்றேன். எப்போதும் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுடன் நன்றியுடையவர்களாக திகழுங்கள். மேலும் உறுதியான தொடர்பை உருவாக்கி வையுங்கள். உங்களது பிள்ளைகளுக்கும் கிலாஃபத்தின் அருட்களை தெரியப்படுத்திக் கொண்டிருங்கள். மேலும் உங்களது எதிர்கால சந்ததிகளும் கிலாஃபத்தின் வழிகாட்டல் மற்றும் அதன் அருட்களின் நிழலிலும் பாதுகாப்பிலும் இருப்பார்கள் என்ற இந்த விஷயத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் அனைவரும் MTA வை தொடர்ந்து பார்த்து வாருங்கள். மேலும் உங்களது குடும்பத்தினருக்கு குறிப்பாக பிள்ளைகளுக்கு அதற்கான அறிவுரை செய்து வாருங்கள். எனது குத்பா ஜுமுஆவை நேரலையில் கேட்பதற்கு முயற்சி செய்யுங்கள். மேலும் இதேபோன்று பல்வேறுதரப்பட்ட நிகழ்ச்சிகளில் நான் வழங்கிய சொற்பொழிவுகளையும் சிறப்பான ஏற்பாட்டுடன் கேட்டு வாருங்கள். இவ்வாறு உங்களுக்கு கிலாஃபத்துடன் ஓர் ஆழமான தொடர்பு நிலைபெற்றிருக்கும்; மேலும் ஈமானும் உறுதியாக இருக்கும். (பத்ர் இதழ், ஏப்ரல் 11, 2024, பக்கம் 16)

நாம் காலத்தின் கலீஃபாவின் கூற்றுகளை கவனத்துடன் கேட்பதற்கும், மேலும் அவற்றின்படி அமல் செய்வதற்கும், கிலாஃபத்துடனான உண்மையான தொடர்பிற்குரிய உரிமையை செலுத்துவதற்கும் எல்லாம் வல்ல அல்லாஹ் நம் அனைவருக்கும் நற்பேறு வழங்குவானாக. ஆமீன். (மன்ஸூர் அஹ்மத் மஸ்ரூர்)

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் ஞானம் நிறைந்த வழிகாட்டல்களின் ஒளியில்**
**திருக்குர்ஆனின் மேன்மைகள் & உயர் அந்தஸ்து மற்றும் மகத்துவம்**

திருக்குர்ஆனின் ஆயுதத்தை கையில் எடுங்கள்; அவ்வாறு செய்தால் உங்களுக்கு வெற்றி உள்ளது.
அந்த ஒளிக்கு முன்னால் எந்த இருளும் நிற்க முடியாது

இந்த மகத்துவ மிக்க வேதத்தை தமது செயல் திட்டமாக ஆக்கிக் கொண்டு அதன்படி அமல் செய்து தமது இம்மையையும், மறுமையையும் சீர்படுத்திக் கொள்பவர்கள் மிகவும் நற்பேறு பெற்றவர்கள் ஆவர்
உண்மையை பற்றிப் பிடித்துக் கொண்டால் மேலும் உண்மையை நிலை நின்றால் பின்னர் அல்லாஹ் தனது அடியார்களுடன் நடந்து கொள்ளும் அன்பின் நடைமுறைகளையும் அவர்கள் காண்பார்கள்

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் திருக்குர்ஆனின் ஞானத்தை பெறுவதற்காகவும் அதிலிருந்து பயன் பெற்றவாறு அதன் அருட்களை பெறுவதற்கான வழிகளை காட்டுவதற்காக எண்ணற்ற வழிகாட்டல்கள் மற்றும் எழுத்துகளை நமக்காக விட்டுச் சென்றுள்ளார்கள்
திருக்குர்ஆனின் போதனையின்படி நடப்பவர்களே வெற்றி பெறுவார்கள்
எதுவரை முஸ்லிம்களின் கவனம் திருக்குர்ஆனின் பக்கம் திரும்பாதோ அதுவரை அவர்களிடத்தில் அந்த ஈமான் பிறக்காது
அருளுக்குரிய ரமலான் மாதத்தில் தினமும் குறைந்தபட்சம் திருக்குர்ஆனின் ஒரு பாகத்தை ஓதுவதற்கான அறிவுரை

**பாலஸ்தீனம் மற்றும் சூடானில் நிகழும் போரின் தீய தாக்கங்களிலிருந்து பொது மக்கள் தப்பிப்பதற்காகவும், ஏனைய முஸ்லிம் நாடுகளில் பொதுவாகவும் பாகிஸ்தான் மற்றும் ஏமனில் குறிப்பாகவும் இறை வழி கைதிகளாக இருக்கும் அஹ்மதிகளின் விடுதலைக்காகவும் துஆ செய்வதற்கான அறிவுரை**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 22 மார்ச் 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு **அமான்** மாதம் **22ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

شَهْرُ رَمَضَانَ الَّذِيْٓ أُنْزِلَ فِيْهِ الْقُرْاٰنُ هُدًى لِّلنَّاسِ وَبَيِّنٰتٍ مِّنَ الْهُدٰى وَالْفُرْقَانِ ۚ فَمَنْ شَهِدَ مِنْكُمُ الشَّهْرَ فَلْيَصُمْهُ ۗ وَمَنْ كَانَ مَرِيْضًا أَوْ عَلٰى سَفَرٍ فَعِدَّةٌ مِّنْ أَيَّامٍ أُخَرَ ۗ يُرِيْدُ اللّٰهُ بِكُمُ الْيُسْرَ وَلَا يُرِيْدُ بِكُمُ الْعُسْرَ ۫ وَلِتُكْمِلُوا الْعِدَّةَ وَلِتُكَبِّرُوا اللّٰهَ عَلٰى مَا هَدٰىكُمْ وَلَعَلَّكُمْ تَشْكُرُوْنَ

இந்த வசனத்தின் பொருள் என்னவென்றால், ரமலான் மாதம் குறித்து திருக்குர்ஆன் இறக்கப்பட்டுள்ளது. (அந்த குர்ஆன்) எல்லா மனிதர்களுக்கும் நேர்வழி காட்டக் கூடியதாக (அனுப்பப்பட்டு) உள்ளது. அது தெளிவான சான்றுகளை தன்னகத்தே கொண்டுள்ளது. அதில் நேர்வழிகளின் விளக்கங்களும், உண்மையையும் பொய்யையும் வேறுபடுத்திக் காட்டுகின்ற விஷயங்களும் உள்ளன. எனவே உங்களுள் அம்மாதத்தைக் காண்பவர் அதன் நோன்புகளை நோற்க வேண்டும். ஆனால், நோயாளியாகவோ, பயணத்திலோ இருப்பவர் (விட்டுப்போன நோன்பை) மற்ற நாட்களில் கணக்கிட்டு (நோற்று)க் கொள்ள வேண்டும். அல்லாஹ் உங்களுக்கு எளிதை விரும்புகின்றான். உங்களுக்குக் கடினத்தை விரும்புவதில்லை. நீங்கள் எண்ணிக்கையை எளிதாக உங்களுக்குக் கடினத்தை விரும்புவதில்லை. நீங்கள் எண்ணிக்கையை எளிதாக முழுமை செய்ய வேண்டும் என்பதற்காகவும், அல்லாஹ் உங்களுக்கு நேர்வழி காட்டியதற்காக நீங்கள் அவனுடைய பெருமையை எடுத்துரைப்பதற்காகவும், நீங்கள் அவனுக்கு நன்றி செலுத்துவதற்காகவுமே (இந்த கட்டளையை அவன் பிறப்பித்துள்ளான்.) (2:186)

இந்த வசனத்தில் அல்லாஹ் ரமலான் மாதத்தின் முக்கியத்துவம் தொடர்பாக எடுத்துரைக்கும்போது, இந்த மாதத்தில் திருக்குர்ஆன் இறக்கப்பட்டுள்ளது; அது மனிதர்களுக்கு ஒரு மாபெரும் நேர்வழி என்ற வகையில் கூறியிருக்கின்றான். அல்லாஹ் இந்த வேதத்தில் எல்லா விஷயங்களை குறித்து எடுத்துக் கூறி அனைத்து வழிகாட்டல்களையும் வழங்கி மனிதன் அல்லாஹ்வின் பக்கம் முன்னேறுவதற்கான எல்லா வழிகளையும் காட்டிக் கொடுத்தவாறு ஷைத்தானுடைய எல்லா வழிகளைக் குறித்தும் எச்சரிக்கையூட்டியவாறு, நிகழ்காலத்திலும், பிற்காலத்திலும் நிகழக் கூடிய விவகாரங்களின் பக்கம் வழிகாட்டியவாறு அதன் ஆபத்துக்களை பற்றி எச்சரிக்கையூட்டியவாறு அதிலிருந்து தப்பிப்பதற்கான வழிகளை காட்டிக் கொடுத்துள்ளான்.அத்துடன் நாத்திகத்தை எதிர்கொள்வது குறித்தும், ஷிர்க்கிலிருந்து எச்சரிக்கை ஊட்டியவாறும் அதிலிருந்து தப்பிப்பதற்கான வழிகளையும் கற்றுக் கொடுத்துள்ளான். சுருக்கமாக, தற்காலத்தில் உள்ள விவகாரங்களாக இருக்கட்டும்! அல்லது கடந்த காலத்தில் உள்ளவையாக இருக்கட்டும்! அல்லது வருங்காலத்தில் நிகழக் கூடியவையாக இருக்கட்டும்! அந்த அனைத்தையும் திருக்குர்ஆனில் எடுத்துக் கூறி இறை தொடர்பில் முன்னேறுவது தொடர்பாகவும், நேர்வழியில் நிலைத்திருப்பது தொடர்பாகவும் அனைத்து வழிகளையும் எடுத்துக் கூறி இந்த இறுதியான, முழுமையான நிறைவான ஷரீஅத்தில் எடுத்துக் கூறியுள்ளான். ஆகவே எவர்கள் இந்த மாபெரும் வேதத்தை தமது செயல் திட்டமாக ஆக்கிக் கொள்வார்களோ ,அதன்படி செயல்படுவார்களோ, தம்முடைய இம்மையையும், மறுமையையும் சீர்படுத்திக் கொள்வார்களோ அவர்கள் நற்பேறு பெற்றவர்களாவார்கள். உண்மையைப் பற்றிப் பிடித்துக் கொண்டால், உண்மையில் நிலைத்திருந்தால் பிறகு அல்லாஹ் தன் அடியார்களுடன் அன்புடன் பரிமாறக் கூடிய காட்சிகளையும் காண்பார்கள்.

ஆகவே இதுதான் ரமலான் மாதத்தின் முக்கியத்துவமாகும். இந்த மாதத்தில் அல்லாஹ் முழுமையான ஷரீஅத்தை நம் மீது இறக்கியுள்ளான். அந்த வேதத்தில் நோன்பு கடமையானது குறித்தும், இறை வணக்கங்களின் வழிமுறைகளை குறித்தும் நமக்கு கற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. ரமலான் மாதத்தின் முக்கியத்துவம் என்பது அதில் நோன்பு கடமையாக்கப்பட்டுள்ளது; திருக்குர்ஆன் இறக்கப்பட்டுள்ளது என்ற அளவில் மட்டுமே நாம் புரிந்து வைத்திருந்தால் இது போதுமானதன்று. நாம் இந்த முழுமையான வழிகாட்டலை குறித்த அறிவைப் பெறாத வரை அதை நமது வாழ்வின் செயல் திட்டமாக ஆக்காத வரை இது போதுமானதன்று.

அஹ்மதிகளாகிய நாம் நற்பேறு பெற்றவர்கள் ஆவோம். ஏனெனில், இதைக் குறித்த புரிதலை நமக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை ஊழியரான மஸீஹ் மவ்வூத் மற்றும் மஹ்தி மவ்வூத் (அலை) அவர்கள் நமக்கு வழங்கியுள்ளார்கள். ஆகவே இதற்காக நாம் அன்னாருடைய நூல்களையும், விளக்கவுரைகளையும் படிக்க வேண்டியது அவசியமாகும். அதன் மூலமாக இந்த மாபெரும் வேதத்தையும், வழிகாட்டலையும் புரிந்து கொண்டு அதன்படி நாம் செயலாற்ற முடியும்.

நாளை மஸீஹ் மவ்வூத் தினமும் ஆகும். அதில் நாம் மிகவும் முறையாக கூட்டங்கள் போன்றவற்றையும் நடத்துகின்றோம் ; கொண்டாடுகின்றோம்.

பெருமானார் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பு மற்றும் அல்லாஹ்வுடைய வாக்குறுதிக்கேற்ப மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் வருகை குறித்து எடுத்துரைக்கின்றோம்; சொற்பொழிவாற்றுகின்றோம். ஆனால், இந்த அளவுக்கு மட்டுமே ஈமானுடைய முன்னேற்றம் இருப்பது போதுமானதன்று. மாறாக, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் திருக்குர்ஆன் தொடர்பாக நமக்கு எந்த கருவூலங்களை வழங்கியுள்ளார்களோ அதை படிப்பதும், அதன்படி செயலாற்றுவதும் அதை நமது வாழ்வின் அங்கமாக ஆக்குவதும் மிகவும் அவசியமாகும். அது இல்லாமல் நமது ஈமான் முழுமையாக முடியாது. அல்லாஹ் தனது ரஹ்மானிய்யத் எனும் பண்பின் கீழ் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது திருக்குர்ஆன் எனும் மாபெரும் வேதத்தை இறக்கி நம் மீது பேரருள் செய்துள்ளான் என்ற புரிதலை நமக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் வழங்கியுள்ளார்கள். இப்பொழுது இதிலிருந்து பயனடைவதும் இதை நம் வாழ்வின் அங்கமாக ஆக்குவதும் நமது வேலையாகும். ஆகவே இதன் பக்கம் நாம் சிறப்பான கவனம் செலுத்த வேண்டும். ரமலானில் நோன்பு நோற்பது அல்லது கடமையான தொழுகைகளை முறையாக நிறைவேற்றுவது அல்லது சில நஃபில்களை தொழுவது ஆகியவற்றால் ரமலானுடைய உரிமை செலுத்தப்பட்டு விடாது. மாறாக, திருக்குர்ஆன் ஓதுவதும், அதன் கட்டளைகளை தேடிப் பார்ப்பதும் மிகவும் அவசியமாகும். இது மிகவும் முக்கியமான விஷயமாகும். இந்த விஷயம் தான் அல்லாஹ்வுடைய ரஹ்மானிய்யத் எனும் பண்பின் தோற்றத்தின் மூலமாக ரஹீமிய்யத் எனும் தோற்றத்தில் இருந்தும் பயனடைய கூடியவர்களாக நம்மை ஆக்கும்.

திருக்குர்ஆனுடைய புரிதலை பெறுவது தொடர்பாகவும் அதில் இருந்து பயனடைந்தவாறு அதன் அருட்களை பெறுவதற்கான வழிகளை காட்டுவதற்காகவும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் எண்ணற்ற வழிகாட்டல்களையும், எழுத்துகளையும் நமக்கு விட்டுச் சென்றுள்ளார்கள். அதை படித்து அதன்படி செயல்பட்டால் நாம் உண்மையான முறையில் திருக்குர்ஆனில் இருந்து பயனடையக் கூடியவர்களாக ஆக முடியும். அன்னாருடைய மேற்கோளிலிருந்து சிலவற்றை நான் தற்போது எடுத்து வைக்கின்றேன். ஆனால் அதற்கு முன்பு திருக்குர்ஆன் ஓதுவதன் முக்கியத்துவம் தொடர்பாக கூற விரும்புகின்றேன். இதுவும் மிகவும் அவசியமான விஷயமாகும். ரமலானில் குறிப்பாக ஒவ்வொருவரும் இதை கருத்தில் கொள்ள வேண்டும். குறைந்தது தினந்தோறும் ஒரு பாகம் திலாவத் செய்ய வேண்டும். அதன் மூலமாக ரமலானில் திருக்குர்ஆன் ஒருமுறை முழுமையாக ஓதப்பட வேண்டும். பெருமானார் (ஸல்) அவர்களுக்கு ரமலானில் அதுவரை இறங்கிய திருக்குர்ஆனை ஜிப்ரீல் (அலை) அவர்கள் ஒருமுறை முழுமையாக ஓதிக் காட்டுவார்கள். பெருமானார் (ஸல்) அவர்களுடைய இறுதி ஆண்டில் முழு குர்ஆனும் இரண்டு முறை ஓதி காட்டப்பட்டது. ஆகவே திருக்குர்ஆன் ஓதுவதன் முக்கியத்துவத்தை ஒவ்வொருவரும் தமக்கு முன்னால் வைக்க வேண்டும். شَهْرُ رَمَضَانَ الَّذِيْٓ اُنْزِلَ فِيْهِ الْقُرْاٰنُ என்ற வசனம் தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த ஒரு வாக்கியத்தின் மூலமாக ரமலான் உடைய மகத்துவம் தெரிய வருகிறது. அதாவது அது எப்படிப்பட்ட அருளுக்குரிய மாதம் என்றால் அதில் மாபெரும் வேதம் இறங்கியது. சூஃபிமார்கள் எழுதியிருப்பது என்னவென்றால், இந்த மாதம் உள்ளத்திற்கு ஒளியூட்டுவதற்கு சிறந்த மாதமாகும். அல்லாஹ்வின் நெருக்கத்தை பெறுவதற்கு மிகச் சிறந்த மாதமாகும். அதிகமான அளவில் இதில் கஷ்ஃபுகள் ஏற்படுகின்றன. தொழுகை என்பது உள்ளத்தை தூய்மைப்படுத்துவதற்கு ஆகும். நோன்பு என்பது உள்ளத்திற்கு ஒளியூட்டுவதற்கு ஆகும். உள்ளத்தை தூய்மைப்படுத்துதல் என்பது தீமையின் பக்கம் தூண்டக் கூடிய ஆன்மாவின் ஆசைகளை விட்டு விலகிச் செல்வது ஆகும்.

உள்ளத்தில் வீணான சிந்தனைகள் வருகின்றன. பாவத்தின் சிந்தனைகள் வருகின்றன. அவற்றை விட்டு விலகிச் செல்வது ஆகும். உள்ளத்திற்கு ஒளியூட்டுவது என்பது அவர் இறைவனை பார்க்க வேண்டும் என்பதற்காக கஷ்ஃபின் வாசல்கள் அவர் மீது திறப்பதாகும். அதன் மூலமாக இறை நெருக்கம் அவருக்கு கிடைக்கின்றது.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: ஆகவே, أُنْزِلَ فِيْهِ الْقُرْاٰنُ என்பதில் இதன் பக்கம்தான் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இதில் எவ்வித சந்தேகமும் இல்லை. அதாவது திருக்குர்ஆன் படி அமல் செய்வதின் அருளினால் இறை வணக்கங்களுடன் இந்த தகுதி கிடைத்து விடுகின்றது.

திருக்குர்ஆன் ஓதுவது மற்றும் அதை புரிவதன் பக்கம் கவனமூட்டியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: நான் குர்ஆன் என்ற சொல்லை கவனமாக சிந்தித்தேன். அப்போது இந்த அருளுக்குரிய சொல்லில் ஒரு மகத்தான முன்னறிவிப்பு இருப்பது எனக்கு திறந்து தரப்பட்டது. அது என்னவென்றால், இந்த குர்ஆன்தான் படிப்பதற்கு தகுதியுடைய நூலாகும். பிறகு இன்னொரு காலத்தில் இதுதான் இன்னும் அதிகமாக படிப்பதற்கு தகுதியுள்ள வேதமாக இருக்கும். அப்போது வேறு பல நூல்களும் திருக்குர்ஆனுடன் சேர்ந்து படிக்கப்படும். இப்போது இஸ்லாத்தின் கண்ணியத்தை காப்பாற்றுவதற்கும், பொய்யை வீழ்ச்சியடைய செய்வதற்கும் இந்த ஒரு வேதம் மட்டும்தான் படிப்பதற்கு தகுதியுடைய நூலாக இருக்கும்; மற்ற நூல்கள் முற்றிலும் கைவிடப்பட்ட தகுதியுடையவையாக இருக்கும். ஃபுர்கான் என்ற சொல்லின் பொருளும் இதுவே ஆகும். அதாவது இந்த நூல் மட்டும்தான் உண்மையையும், பொய்யையும் பிரித்தறிவிக்கக் கூடியதாக திகழும். மேலும் எந்த ஒரு ஹதீஸ் புத்தகமோ அல்லது வேறு எந்த நூலோ இந்த தகுதியை பெற்றதாக இருக்காது. எனவே இப்பொழுது அனைத்து நூல்களையும் விட்டு விடுங்கள். இரவும், பகலும் இந்த வேதத்தை மட்டுமே படியுங்கள்.எவர் திருக்குர்ஆனின் பக்கம் கவனம் செலுத்தாமல் இதர நூலின் பக்கம் குனிந்தவராக இருக்கிறாரோ அவர் மிகவும் ஈமான் அற்றவர் ஆவார். நமது ஜமாஅத் திருக்குர்ஆனை படிப்பதிலும் அதில் சிந்தனை செய்வதிலும் ஈடுபட வேண்டும். ஹதீஸுகளின் ஈடுபாட்டை விட்டு விடுங்கள். மிகவும் பரிதாபத்திற்குரிய விஷயம் என்னவென்றால், எந்த அளவுக்கு ஹதீஸ்கள் படிக்கவும், புரியவும் படுகின்றனவோ அந்த அளவுக்கு திருக்குர்ஆன் படிக்கப்படுவதோ புரியப்படுவதோ இல்லை. இப்போது திருக்குர்ஆன் எனும் ஆயுதத்தை கையில் எடுங்கள். அப்பொழுது வெற்றி உங்களுக்கே. இந்த ஒளிக்கு முன் எந்த இருளும் நிற்க முடியாது. நான் உங்களுக்கு கூறுகின்றேன்; உண்மையிலேயே இந்த ஓர் ஆயுதம்தான் இப்பொழுது பயன்படக் கூடியதாகும். எப்பொழுதும் பயன்படக்கூடியதாக உள்ளது. முன்னரும் கூட முதலாமவர்களிடம் இந்த ஓர் ஆயுதம் தான் இருந்தது. பெருமானார் (ஸல்) மற்றும் ஸஹாபிகளின் கையில் இதுதான் இருந்தது. இதை மேற்கொள்வதிலும், இந்த ஏக வேதத்தை தமது அடிப்படை ஈமானாக ஆக்கிக் கொள்வதிலும் கொஞ்சம் கூட நிராகரிப்பையும் தயக்கத்தையும் வெளிப்படுத்தாத அந்த சமுதாயத்தின் மீது வாழ்த்துகள்! நூறாயிரம் வாழ்த்துகள்! மிகவும் உத்வேகத்துடனும், மகிழ்ச்சியுடனும் முன்னேறிச் சென்று இந்த ஃபுர்கான் மற்றும் ஒளிக்கு முன்னால் ஆஜராகி விட்டார்கள்.

உண்மையான தேவையுடைய காலத்தில் திருக்குர்ஆன் இறங்கியது என்பதை குறித்து எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள:

பெருமானார் (ஸல்) அவர்கள் தோன்றிய காலம் உண்மையில் எப்படிப்பட்ட காலமாக இருந்தது என்றால், அப்போது ஒரு கண்ணியமிகுந்த மாபெரும் இறை சீர்திருத்தவாதி மற்றும் விண்ணின் வழிகாட்டியின் அவசிய தேவை இருந்தது என்றால், மேலும் என்னென்ன போதனைகள் வழங்கப்பட்டனவோ அவையும் உண்மையிலேயே எவ்வாறானவையாக இருந்தன என்றால் மிகவும் தேவையுடையாக அவை இருந்தன. காலத்தின் அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்யக் கூடிய அனைத்து விஷயங்களையும் உள்ளடக்கியதாக அது இருந்தது. பிறகு அந்த போதனையும் எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தியது என்றால் லட்சக்கணக்கான உள்ளங்களை உண்மை மற்றும் நேர்வழியின் பக்கம் இழுத்துக் கொண்டு வந்தது. லட்சக்கணக்கான நெஞ்சங்களில் லாயிலாஹ இல்லல்லாஹ் உடைய அச்சை பதித்து விட்டது. மேலும் நபித்துவத்தினுடைய மையப் புள்ளியான இரட்சிப்பை எந்த அளவு முழுமை வரை கொண்டு சேர்த்தது என்றால் வேறு எந்த ஒரு நபியுடைய கையினாலும் அந்த முழுமை எந்த ஒரு காலத்திலும் ஏற்படவில்லை.

ஆகவே இந்த இறுதி ஷரீஅத் வேதம் எப்படிப்பட்ட காலத்தில் வந்தது என்றால், அதன் வருகையை சூழ்நிலை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. பிறகு அது லட்சக்கணக்கான உள்ளங்களை தூய்மைப்படுத்தியது; இன்று வரை தூய்மைப்படுத்திக் கொண்டே வருகின்றது. ஆகவே எவர் பயன்பெற விரும்புகிறாரோ அவர் பயன்பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

ஞானத்தையும், செயலையும் திருக்குர்ஆன் முழுமை வரை கொண்டு சேர்க்கக் கூடியதாக இருந்தது. இது வெறும் பேச்சுக்கள் மட்டும் கிடையாது. மாறாக, நல்ல

முஸ்லிம்களுடைய செயல்களை இன்று வரை பார்க்கும்போது அவர்கள் இதற்கு சாட்சியாக உள்ளனர்.

ஆகவே இதைக் குறித்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள:

நினைவில் கொள்ளுங்கள்! வெறும் அறிவை மட்டுமே ஒப்புக் கொள்ளக் கூடியவர் ஞானம் மற்றும் நம்பிக்கையில் குறைபாடுள்ளவராக இருப்பதை போன்றே செயலிலும், நன்றியுணர்விலும், உண்மையில் அடி எடுத்து வைப்பதிலும் குறைபாடுள்ளவராகவும், இயலாதவராகவும் இருக்கிறார். கோடிக்கணக்கான பரிசுத்தவான்களைப் போன்று அவர்கள் எந்த ஒரு முன்மாதிரியையும் நிலைநாட்டவில்லை.(அந்த பரிசுத்தவான்கள்) இறைவனுடைய நன்றி உணர்வுள்ள, ஏற்றுக் கொள்ளப்பட்ட அடியார்கள்- அவர்களின் அறிவுரை, துஆக்கள், கவனம், தோழமையின் தாக்கம் ஆகியவற்றின் மூலமாக நூற்றுக்கணக்கான மக்கள் தூய்மையடைந்து இறையடியார்களாக மாறி தன்னுடைய எஜமானனாகிய இறைவன் பக்கம் குனிந்து உலகம் மற்றும் அதில் இருப்பவற்றை பற்றி கொஞ்சமும் அக்கறை கொள்ளாதவர்களாகவும் இந்த உலகின் இன்பங்களையும், சொகுசுகளையும், மகிழ்ச்சிகளையும், புகழ்களையும், பெருமைகளையும், செல்வங்களையும், நாடுகளையும் துறந்து விட்டு, முற்றிலும் துண்டிக்கப்பட்டு, இந்த உண்மையின் வழியில் கால் எடுத்து வைத்ததன் காரணமாக பல நல்லடியார்களின் உயிர்கள் பலியாகிவிட்டன. தியாகத்தின் உணர்வு அவர்களிடத்தில் பிறந்தது. மார்க்கத்திற்காகவும், இறைவனுக்காகவும், இறைவனுடனான நன்றியுணர்வு பிறந்து, தியாக உணர்வு தோன்றியது.

கூறுகின்றார்கள்: உயிர்கள் பறிக்கப்பட்டன ; ஆயிரக்கணக்கானோரின் தலைகள் துண்டிக்கப்பட்டன; லட்சக்கணக்கான தூயவர்களின் இரத்தத்தால் பூமி நனைந்து போனது. ஆயினும் இந்த அனைத்து துன்பங்களுக்கு பிறகும் அவர்கள் எவ்வாறான உண்மையை காட்டினார்கள் என்றால், நேசிக்கக் கூடியவரை போன்று சங்கிலியில் பிணைக்கப்பட்டிருந்த போதிலும் மகிழ்ச்சி அடைந்திருந்தார்கள். சோதனைகளுக்கு ஆளாகியிருந்த போதிலும் சிரித்துக் கொண்டிருந்தார்கள். துக்கத்தை அனுபவித்துக் கொண்டிருந்த போதிலும் மகிழ்ச்சி அடைந்திருந்தார்கள். சோதனைகளில் மூழ்கியிருந்த போதிலும் நன்றி செலுத்திக் கொண்டிருந்தார்கள். அந்த ஏக இறைவனுடைய நேசத்தின் காரணமாக நாடுகளை விட்டு துரத்தப்பட்டார்கள். இழிவை மேற்கொண்டார்கள். நிம்மதியை விட்டு துன்பத்தை தலை மீது ஏந்திக் கொண்டார்கள். வளத்தை விட்டு வறுமையை ஒப்புக் கொண்டார்கள். எல்லாவித தொடர்பின் மூலமாகவும் உறவின் மூலமாகவும் ஏழ்மை, தனித்திருத்தல், இயலாத நிலையில் இருத்தல், ஆகியவற்றை பொறுத்துக் கொண்டார்கள். தமது ரத்தங்களை சிந்தியும், தமது தலைகளை வெட்ட விட்டும், தமது உயிர்களைக் கொடுத்தும் இறையிருப்பிற்கான முத்திரையை பதித்து விட்டார்கள். இறை வேதத்தை உண்மையான முறையில் பின்பற்றியதன் அருளால் அவர்களுக்கு சிறப்பான ஒளிகள் கிடைத்தன. அது அவர்களின்றி மற்றவர்களிடம் காணப்படுவது கிடையாது. இப்படிப்பட்ட மக்கள் முந்தைய காலத்தில் காணப்பட்டது மட்டுமின்றி, இந்த தூயவர்களின் கூட்டம் எப்பொழுதும் இஸ்லாத்தில் பிறந்து கொண்டே இருந்தது. எப்பொழுதும் தமது ஒளிமிக்க இருப்பால் தம் எதிரிகளுக்கு பதில் கொடுத்து வருகின்றது. ஆகவே எதிராளிகளின் மீது நமது இந்த சான்றும் முழுமை பெறுகிறது. அதாவது உயரிய ஞானத்தை கொண்ட திருக்குர்ஆன் உயரிய அந்தஸ்தை முழுமை வரை கொண்டு சேர்க்கின்றது. மேலும் இவ்வாறே உயர்வான ஞானங்களுடைய முழுமைகளும் இதன் மூலமாகவே கிடைக்கின்றன. அடையாளங்களும், ஒளிகளும் அந்த மக்கள் மீது வெளிப்படுகின்றன. எவர்கள் இந்த தூய வேதத்தை பின்பற்றி பேணி நடந்தார்களோ அவர்கள் மீது இப்பொழுதும் வெளிப்படுகின்றன. உண்மையான முறையில் இதை பின்பற்றுவீர்கள் என்றால் இந்த உயர்வு கிடைக்கும். மற்றவர்களிடத்தில் இது ஒருபோதும் வெளிப்படாது. ஆகவே உண்மையை தேடுவோருக்கு இதுவே சான்றாகும். அதை அவர் தம் கண்களால் கண்டுணர்ந்து கொள்வதற்கு இது போதுமானது. அதாவது விண்ணின் அருள்கள், இறைவனுடைய அடையாளங்கள் திருக்குர்ஆனை முழுமையாக பின்பற்றக் கூடிய மக்களிடத்தில் மட்டுமே காணப்படுகின்றன. அடையாளங்களை காண விரும்புகின்றீர்கள் என்றால் திருக்குர்ஆனை மட்டுமே முழுமையாக பின்பற்றக் கூடிய மக்களிடத்தில் காணமுடியும். உண்மையான தூய வேதத்தை விட்டு விலகி இருக்கின்ற மற்ற அனைத்து பிரிவுகளும் அது பிராணமனர்களாக இருந்தாலும், ஆரியர்களாக இருந்தாலும், கிறிஸ்தவர்களாக இருந்தாலும் இந்த உண்மையின் ஒளியில் இருந்து பங்கு பெறாதவர்களாகவும், அறியாதவர்களாகவும் இருக்கிறார்கள். ஆகவே மறுக்கக் கூடிய ஒவ்வொருவருக்கும் திருப்தி அளிப்பதற்கு நாமே பொறுப்பேற்றுக் கொள்கிறோம். ஆனால் நிபந்தனை என்னவென்றால், அவர் உண்மையான உள்ளத்துடன் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கு முயற்சி மேற்கொண்டு முழுமையான எண்ணத்துடன், உறுதித் தன்மையுடன், பொறுமையுடன் உண்மையைத் தேடுவதில் உண்மைக்காக இதன் பக்கம் துன்பத்தை பொறுத்துக் கொள்ள வேண்டும். ஆகவே எவரெல்லாம் உண்மையான உள்ளத்துடன் இந்த நேர்வழியின் பக்கம் முன்னேறுவாரோ அவருடைய ஞானம் மற்றும் செயலின் ஆற்றல்கள் அதிகரிக்கும். இது திருக்குர்ஆனுடைய வாதமாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் இந்த வாதத்தை எடுத்துக் கூறியுள்ளார்கள். பாருங்கள்! நான் உங்களுக்கு கூறுகின்றேன். இதை நீங்கள் புரியுங்கள். நான் உங்களுக்கு கற்றுக் கொடுப்பதைப் போன்று நீங்கள் என்னிடம் இருந்து கற்றுக் கொள்ளுங்கள் என்று கூறியுள்ளார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: திருக்குர்ஆன் காட்டுமிராண்டிகளை போன்று இருந்த ஓர் உலகத்தை மனிதனாகவும், மனிதனிலிருந்து இறைப் பண்புகளைப் பெற்ற மனிதனாகவும் ஆக்கியது. இஸ்லாத்தின் அடிப்படைகளை விட்டு விட்டு, திருக்குர்ஆனை விட்டு விட்டு உலகை நேசிக்கின்ற சமுதாயத்தை பின்பற்றுவது எந்த அளவு அநீதியாகும். எவர்கள் இஸ்லாத்தின் சிறப்புக்காகவும், வாழ்வுக்காகவும் மேற்கத்திய உலகத்தை கிப்லாவாக ஆக்க விரும்புகிறார்களோ, மேலும் மேற்கத்திய உலகம் பெரும் முன்னேற்றம் கண்டு விட்டது. அதை நமது வழிகாட்டியாக ஆக்க வேண்டும் என்று விரும்புகின்றார்களோ அவர்கள் வெற்றி பெற இயலாது. எவர்கள் திருக்குர்ஆனுக்கு கீழ்படிந்து செல்கிறார்களோ அவர்களே வெற்றி பெற முடியும். மேலும் இது உலகத்தின் வெற்றியும் ஆகும்;மார்க்கத்தின் வெற்றியும் ஆகும்; மறுமையின் வெற்றியும் ஆகும். உலகவாதியோ உலக வெற்றியை மட்டுமே சார்ந்து இருக்கின்றார்.நீங்கள் எல்லாவிதமான வெற்றியையும் பெற விரும்புகின்றீர்கள் என்றால் பிறகு அது திருக்குர்ஆனில் இருந்து கிடைக்கும்.

கூறுகின்றார்கள்: திருக்குர்ஆனை விட்டுவிட்டு வெற்றி கிடைப்பது என்பது சாத்தியமற்ற, இயலாத விஷயமாகும். அவ்வாறான வெற்றி கற்பனையில் இருக்கக் கூடிய வெற்றியாகும். அதை மக்கள் தேடிக் கொண்டிருக்கின்றார்கள். ஸஹாபிகளுடைய முன்மாதிரிகளை உங்களுக்கு முன்னால் வையுங்கள். பாருங்கள்! பெருமானார் (ஸல்) அவர்களை அம்மக்கள் பின்பற்றியபோது, உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கியபோது, இறைவன் அவர்களுக்கு செய்த அனைத்து வாக்குறுதிகளையும் பூர்த்தி செய்தான்.

ஆரம்ப காலத்தில் எதிரிகள் கேலிகள் செய்து கொண்டிருந்தார்கள். உங்களால் வெளியே சுதந்திரமாக செல்ல முடியவில்லை; மன்னராவோம் என்று வாதிக்கிறீர்களே! உங்களுடைய நிலை எவ்வாறு உள்ளது? என்றால் ஒளிந்து கொண்டு இறைவணக்கம் செய்கின்றீர்கள். ஆனால் நாங்கள் அரசர்கள் ஆவோம் என்று நீங்கள் வாதிக்கின்றீர்களே என்று கேலி செய்தார்கள். ஆனால் பெருமானார் (ஸல்) அவர்களை பின்பற்றுவதில் அவர்கள் மூழ்கி போனார்கள். அதன் விளைவாக நூற்றுக்கணக்கான வருடங்களாக அவர்களுக்கு கிடைக்காமல் இருந்தது கிடைத்தது. அவர்கள் திருக்குர்ஆன் மற்றும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை நேசித்தார்கள். அவர்கள் கட்டுப்படுதல் மற்றும் கீழ்ப்படிதல் ஆகியவற்றில் இரவு, பகலாக முயற்சி செய்து கொண்டிருந்தார்கள். காஃபிர்களுடைய எந்த ஒரு சடங்கு சம்பிரதாயத்தையும் அவர்கள் பின்பற்றவில்லை. அனைத்தையும் விட்டு விட்டார்கள். இஸ்லாம் இந்த நிலையில் இருந்த வரை அது ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய காலமாக இருந்தது; முன்னேற்றத்தின் காலமாக இருந்தது. இறைவன் உமக்காக ஆகிவிடும்போது வேறு என்ன கவலை இருக்க முடியும்? என்பதே இதில் உள்ள இரகசியம் ஆகும்.

கூறுகின்றார்கள்: முஸ்லிம்களின் வெற்றிகள் மற்றும் முன்னேற்றங்கள் ஆகியவற்றின் ரகசியமும் ஈமானாகவே இருந்தது.

இன்று ஈமானுடைய தரம் அவ்வாறானதாக இல்லை. வெறும் பேச்சு மட்டுமே இருக்கின்றது. இந்த அனைத்தையும் பெற வேண்டும் என்றால் பிறகு ஈமானையும் மேம்படுத்த வேண்டியது

அவசியம் ஆகும்.

கூறுகின்றார்கள்: ஸலாஹுத்தீனுக்கு எதிராக எந்த அளவு படைகள் வந்தன. ஸலாஹுத்தீன் என்ற அரசருடைய உதாரணத்தை கூறுகிறார்கள்.

அந்த அரசருக்கு எதிராக பல படைகள் ஒன்று சேர்ந்தன. ஆனால் இறுதி வரை அவரை எவராலும் கட்டுப்படுத்த முடியவில்லை. இஸ்லாத்தின் தொண்டு அந்த அரசருடைய நிய்யத் ஆக இருந்தது. பிறகு அரசர்கள் தீமைகளிலும் பாவங்களிலும் ஈடுபட்டபோது அல்லாஹ்வுடைய கோபம் விழுந்தது. கொஞ்சம் கொஞ்சமாக எவ்வாறான வீழ்ச்சி வந்தது என்றால் இப்பொழுது அதை நீங்கள் காண்கிறீர்கள். இப்பொழுது இந்த நோய் அதாவது இஸ்லாத்தின் பலவீனமான நிலை மதிப்பீடு செய்யப்படும் போது நாம் அந்த நிலைக்கு எதிராக இருக்கின்றோம். இந்த மதிப்பீட்டுக்கான சிகிச்சைக்காக நாம் மேற்கொள்ளும் முறை அதை இன்னும் அபாயத்திலும், நஷ்டத்திலும் ஆழ்த்தி விடும். இவர்கள் மதிப்பீடு செய்து விட்டு மேற்கத்திய கல்வியைப் பெற வேண்டும் என்று கூறுகின்றார்கள். ஆம்! நீங்கள் அதைப் பெற்றுக் கொள்ளுங்கள்; ஆனால் குர்ஆனை உங்களது வழிகாட்டியாக ஆக்கிக் கொள்ளுங்கள்.

கூறுகின்றார்கள்: எப்பொழுது வரை முஸ்லிம்களுடைய கவனம் திருக்குர்ஆன் பக்கம் திரும்பாதோ அப்போது வரை அவர்களிடத்தில் அந்த ஈமான் உருவாகாது; அவர்கள் சீராக மாட்டார்கள். கண்ணியமும், முன்னேற்றமும் முதலில் எந்த வழியின் மூலமாக வந்ததோ இப்பொழுதும் அதே வழியின் மூலமாகத்தான் வரும்.

ஆகவே ஈமான் மற்றும் செயல் ஆகியவற்றின் முன்னேற்றமும் உலக மக்களை பின்பற்றுவதால் கிடைக்காது. மாறாக திருக்குர்ஆனை பின்பற்றுவதால் கிடைக்கும்.

முஸ்லிம்கள் திருக்குர்ஆனை விட்டு கவனமற்று இருப்பது, அதை ஓதுவதில் சோம்பேறித்தனம் காட்டுவது ஆகியவற்றை குறித்து மிகவும் வேதனையுடன் எடுத்துரைத்தவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: அல்லாஹ் பெருமானார்(ஸல்) அவர்களை அனுப்பி வைத்தான். அவர்கள் வந்து உலகிற்கு முன்னால் மனித இயல்பு விரும்புகின்ற அந்த இறைவனை எடுத்து வைத்தார்கள். அதைப் பற்றிய முழுமையான குறிப்பு இறைவனுடைய உண்மையான வேதமாகிய திருக்குர்ஆனில் உள்ளது. முஸ்லிம் அல்லாத மக்களை இப்பொழுது ஒருபுறம் வைத்து விட்டு எவர்கள் முஸ்லிம்களாக இருக்கின்றார்களோ அவர்களைக் குறித்து நான் கொஞ்சம் கூறுகிறேன். அவர்களை விளித்து நான் கூறுகின்றேன்.

يٰرَبِّ اِنَّ قَوْمِى اتَّخَذُوْا هٰذَا الْقُرْاٰنَ مَهْجُوْرًا

என் இறைவா! என் சமுதாயத்தினர் இந்தக் குர்ஆனை கை விடப்பட்ட ஒன்றைப் போல் விட்டு விட்டனர். நினைவில் கொள்ளுங்கள். திருக்குர்ஆன் உண்மையான அருள்களின் தலையூற்றும், இரட்சிப்பின் உண்மையான வழிமுறையும் ஆகும். திருக்குர்ஆனின் போதனைகளின்படி செயல்படாமல் இருப்பது இம்மக்களின் தவறாகும். செயல்படாமல் இருப்பவர்களில் ஒரு பிரிவினர் யார்? என்றால் அவர்களுக்கு இதன் மீது நம்பிக்கையே இல்லை. அவர்கள் இதனை இறைவனின் வேதம் என்று கருதுவதுமில்லை. இந்த மக்கள் மிகவும் தொலைவில் விலகிச் சென்று விட்டனர். ஆனால், எந்த மக்கள் இது இறைவனின் வேதம் என்று நம்பிக்கை கொண்டுள்ளனரோ மேலும் இரட்சிப்பிற்கான குணம் அளிக்கக் கூடிய மருந்தாக அதை கருதுகின்றனரோ அவர்கள் இதற்கு ஏற்ப செயல்படாமல் இருப்பது எந்த அளவு வியப்பிற்குரிய, வேதனைக்குரிய விஷயமாக இருக்கின்றது. அவர்களில் பலரும் எப்படிப்பட்டவர்களாக உள்ளனர் என்றால் தங்களது முழு வாழ்நாளிலும் அவர்கள் அதை படிக்கவே இல்லை. இறைவனது வேதத்தை விட்டு இந்த அளவு கவனமற்றவராகவும் அதை பொருட்படுத்தாதவராகவும் இருக்கும் மனிதனது உதாரணமானது; ஒரு நபருக்கு இந்த நீரூற்று மிகவும் தூய்மையானதும், சுவையானதும் குளிர்ந்ததும் ஆகும் என்றும், அதன் தண்ணீர் பல நோய்களுக்கு மருந்தாகவும், நிவாரணமாகவும் இருக்கின்றது என்றும் உறுதியான அறிவு இருக்கின்றது. அப்படிப்பட்ட அறிவு இருந்தும் கூட அவர் தாகித்திருந்தும், பல நோய்கள் அவருக்கு இருந்தும் கூட அவர் அதற்கு அருகில் செல்வதில்லை.

அது எவ்வாறான நீரூற்று என்றால் அது தாகத்தையும் தணிக்கின்றது; அதில் குணமளிக்கக் கூடிய மருத்துவமும் உள்ளது. அவர் அருகில் செல்வது கிடையாது.

அப்படிப்பட்ட மனிதனுக்கு எப்படிப்பட்ட துர்பாக்கிய நிலையும், அறியாமையும் ஏற்பட்டிருக்கின்றது! அவர் அந்த நீரூற்றில் தமது வாயை வைத்திருக்க வேண்டும். தாகம் தீரும் அளவுக்கு தண்ணீரை குடித்து அதன் சுவையிலிருந்தும் குணமளிக்கக் கூடிய அந்த தண்ணீரை குறித்தும் இன்பத்தை பெற்றிருக்க வேண்டும். அறிவு இருந்தும் கூட அறிவற்றவரைப் போன்று அவர் அதை விட்டும் தூரத்தில் விலகி இருக்கின்றார். மரணம் வந்து அவரை முடித்து விடும் வரையில் அவர் அதனை விட்டும் தூரத்தில் விலகி இருக்கின்றார்.

சிலருக்கு மரணமே வந்து விடுகிறது. ஆனால் அவர் திருக்குர்ஆனின் பக்கம் கவனம் செலுத்துவது கிடையாது.

இத்தகைய நபரின் நிலை படிப்பினைப் பெறத்தக்கதும் அறிவுரை பெறத்தக்கதும் ஆகும். தற்போது முஸ்லிம்களின் நிலையும் இப்படித்தான் ஆகிக் கொண்டிருக்கின்றது. எல்லாவித முன்னேற்றமும் வெற்றிகளின் திறவுகோலும் இந்த திருக்குர்ஆன் தான் என்பது அவர்களுக்கு தெரியும். அதன்படி நாம் செயல்பட விரும்புகின்றோம். ஆனால், அது பொருட்படுத்துவதே கிடையாது. ஒருவர் மிகவும் அனுதாபத்துடனும் நலன் நாடியும் - அனுதாபம் மட்டுமின்றி இறைக் கட்டளைக்கேற்பவும், விருப்பத்திற்கேற்பவும் இதன் பக்கம் அழைக்கும்போது அவர் பொய்யர் என்றும் தஜ்ஜால் என்றும் கூறப்படுகிறார். இதைவிட இந்த சமுதாயத்தின் மீது மிகவும் பரிதாபமான நிலை வேறு என்ன இருக்க முடியும்?

அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களை திருக்குர்ஆனுடைய போதனையைப் பரப்புவதற்காக இறைவன் இந்த காலத்தில் அனுப்பி வைத்துள்ளான். அவர்கள் பொய்யர் என்று அழைக்கப்படுகின்றார்கள்; பித்தலாட்டக்காரர், ஏமாற்றுக்காரரர் என்று கூறப்படுகின்றார்கள். அவர்கள் ஏசப்படுகின்றார்கள். மக்கள் எதிர்ப்பில் முன்னேறிக் கொண்டே செல்கின்றனர். இப்பொழுது இந்த மக்களின் இந்த நிலையை விட மிகவும் பரிதாபத்திற்குரிய நிலை வேறு என்ன இருக்க முடியும்?

முஸ்லிம்களுக்கு இது அவசியமானதாகும்; இப்போது அவர்களுக்கு இதுவே அவசியமானதாகும். அவர்கள் நீரூற்றை மகத்தான அருளாக கருத வேண்டும். அதற்கு மதிப்பளிக்க வேண்டும். அதற்கு மதிப்பளிப்பது என்பது, அதற்கேற்ப செயல்படுவதாகும். பிறகு அல்லாஹ் அவர்களது துன்பங்களையும், துயரங்களையும் எப்படி அகற்றுகின்றான் என்பதை அவர்கள் பார்க்கட்டும்! அல்லாஹ் முஸ்லிம்களுக்காக ஒரு நல்ல வழியை உருவாக்கியுள்ளான்; அதில் சென்று அவர்கள் பயனடைய வேண்டும் என்பதைக் குறித்து அவர்கள் புரிந்து, அதைப் பற்றி அவர்கள் சிந்தனை செய்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: நிச்சயமாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்! எவர் உண்மையான உள்ளத்துடன் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்கிறாரோ, அவனுடைய தூய வேதத்தின்படி அமல் செய்கிறாரோ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பின்பற்றுகிறாரோ, அவருக்கு அல்லாஹ் முடிவடையாத அருள்களிலிருந்து பங்கு கொடுக்கின்றான். அவருக்கு எப்படிப்பட்ட அருள்கள் கொடுக்கப்படுகின்றன என்றால் அது இவ்வுலக அருட்களை விட எவ்வளவோ அதிகமாக இருக்கின்றது. அவற்றுள் ஒன்று பாவம் மன்னிக்கப்படுதலும் ஆகும். அதாவது அவர் பாவ மன்னிப்பு கேட்கும் போது, தவ்பா செய்யும்போது இறைவன் அவருடைய பாவத்தை மன்னித்து விடுகின்றான். மற்ற மக்கள் இந்த அருளை விட்டு முற்றிலும் அறியாதவர்களாக இருக்கின்றனர். ஏனென்றால் தவ்பா செய்வதால் பாவங்களும் மன்னிக்கப்பட்டு விடும் என்ற விஷயத்தின் மீது அவர்கள் நம்பிக்கை வைப்பதே கிடையாது. அவர்களில் சிலரோ எவ்வாறான கொள்கையை வைத்திருக்கின்றனர் என்றால், என்ன நிகழ்ந்தாலும் நாம் நரகத்தில் நுழைந்தே தீர வேண்டும் என்று கருதுகின்றனர்.

அதாவது இந்துக்களில் சிலருடைய கொள்கையே இதுவாக உள்ளது. அதாவது மன்னிப்பு கிடைக்கவே முடியாது என்று அவர்கள் கருதுகின்றனர்.

கிறிஸ்தவர்களின் போதனையின்படி, (இயேசு) மஸீஹின் இரத்தத்தின் மீது ஒருமுறை நம்பிக்கை கொண்ட பிறகு பாவம் செய்து விட்டால் பிறகு மஸீஹின் சிலுவை எந்த பயனும் அளிக்க முடியாது. ஏனெனில், இயசு இருமுறை சிலுவையில் அறையப்பட மாட்டார். ஆக, இந்த இருவருக்கும் மன்னிக்கப்படுதல் மற்றும் இரட்சிப்பிற்கான வழி அடைக்கப்பட்டுள்ளது என்ற இந்த விஷயம் தெளிவாகவில்லையா என்ன? ஏனெனில் பாவத்தின் வெளிப்பாடு நிற்பதில்லை. அது நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. மனிதன் சில தடுமாற்றத்தை அடைந்து கொண்டே இருக்கின்றான். இறைவனுடைய ஏதேனும் அருளுக்கு நன்றி செலுத்தவில்லை என்றால் அதுவும் பாவமாகும். கவனமற்று இருந்தால் அதுவும் பாவமாகும். இந்த பாவங்களுக்காகவும்

நரகத்திற்கு செல்ல வேண்டும் அல்லது இயேசுவுக்கு மீண்டும் சிலுவை கொடுக்கப்படாது. ஆகவே அந்த மனிதர் முழுமையாக நிராசை அடைந்து விட வேண்டியதுதான். பிற மார்க்கங்களில் பாவம் நிகழ்ந்து விட்டால் பின்னர் நிராசை தான். மன்னிப்பிற்கான எந்த வழிமுறையும் இல்லை. ஆனால், அல்லாஹ் முஸ்லிம்களுக்கு இந்த போதனையை வழங்கவில்லை. அவர்களுக்கு எல்லா நேரமும் தவ்பாவிற்கான வாசல் திறந்துள்ளது. மனிதன் இதன் பக்கம் திரும்பினால் தனது முந்தைய பாவங்களை ஒப்புக் கொண்டு மன்னிப்பிற்கான கோரிக்கையை வைத்தால் வரக் கூடிய காலத்தில் நன்மைகளில் நிலைத்திருக்கக் கூடிய உறுதி கொண்டால் அல்லாஹ் அவனை மன்னித்து விடுகின்றான். ஆகவே நான் கூறுகிறேன். எனது விஷயங்களை கவனமாக கேளுங்கள். இவ்விஷயங்கள் உங்களுடைய காதுகள் வரை மட்டுமே சென்று நின்று விடக் கூடாது. நீங்கள் அதிலிருந்து எவ்வித பயனும் பெற முடியாமல் போய் விடக் கூடாது. விஷயங்கள் உங்களது உள்ளம் வரை சென்றடையாமல் இருந்து விடக் கூடாது. ஆகவே இந்த விஷயங்களைக் கேளுங்கள். இதை உங்களுடைய உள்ளங்கள் வரை கொண்டு சேருங்கள். இவை அனைத்தையும் காதுகளுக்கு மட்டுமே வைத்து விட வேண்டாம்.

கூறுகின்றார்கள்: அவ்வாறன்று. மாறாக, முழுமையான கவனத்துடன் கேளுங்கள். அவற்றிற்கு உள்ளத்தில் இடம் கொடுங்கள். நீங்கள் அவற்றை மேலோட்டமாக கேட்கவில்லை என்பதையும், அவற்றினுடைய தாக்கம் அந்த நொடிப் பொழுதுக்கு மட்டும் இல்லை என்பதையும் - மாறாக ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதையும் உங்களது செயலால் நிரூபித்துக் காட்டுங்கள். இங்கு உட்கார்ந்து கொண்டு குத்பாவை கேட்கும் வரை மட்டுமே தாக்கம் இல்லை. மாறாக,அதன் பிறகும் அதன்படி அமல் செய்ய வேண்டும். அதனுடைய அமல் என்பது இதுவே ஆகும். அதாவது திருக்குர்ஆனை படியுங்கள்; ரமலானில் அதற்கான பழக்கத்தை ஏற்படுத்துங்கள்; பிறகு நிரந்தரமாக வாழ்வின் அங்கமாக ஆக்குங்கள். பிறகு இந்த போதனைப்படி நாம் அமல் செய்யக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

அஹ்மதிகள் மீது சுமத்தப்படுகின்ற ஆட்சேபனை என்னவென்றால், நவூதுபில்லாஹ் நாம் திருக்குர்ஆனில் மாற்றங்களை செய்கின்றோம் என்று கூறுகின்றார்கள். பாகிஸ்தானில் தற்போது இந்த சட்டத்தின் அடிப்படையில்தான் அஹ்மதிகள் மீது மௌலவிகள் சார்பாக வழக்குகளும் தொடரப்படுகின்றன. அதைக் குறித்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் சொற்களில் நான் எடுத்துக் கூறுகின்றேன். அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

திருக்குர்ஆன் வானத்தின் சட்டமும், இரட்சிப்பின் வழிமுறையும் ஆகும். அதில் நாம் மாற்றம் செய்தால் அது மிகப் பெரிய பாவமாகும். நாம் யூதர்கள் மீதும் கிறிஸ்தவர்கள் மீதும் ஆட்சேபனை செய்து கொண்டு பிறகு திருக்குர்ஆனுக்கு அதையே ஆகுமானதாக கருதுவது வியப்பாக உள்ளது. கிறிஸ்தவர்களுடைய வேதங்கள் உண்மையாகவே மாற்றப்பட்டு விட்டன. மாற்றப்பட்டது நிரூபிக்கப்படக் கூடாது என்று அவர்கள் முயற்சி செய்கிறார்கள். ஆனால் நாமோ மாற்றம் செய்வதற்கான கவலையில் இருப்பது எனக்கு இன்னும் வியப்பாகவும், பரிதாபத்திற்குரிய விஷயமாகவும் தெரிகிறது. அதாவது எவர்களுடைய வேதங்கள் மாற்றப்பட்டு விட்டனவோ, (பழைய ஷரீஅத்துகள் மாற்றப்பட்டு விட்டன) அவர்களோ மாற்றம் செய்யப்படவில்லை என்று கூறுகின்றனர். ஆனால் நமது சில செயல்கள் எவ்வாறு உள்ளன என்றால், சில விஷயங்கள் எவ்வாறு உள்ளன என்றால், நாமே மாற்றம் செய்து கொண்டிருக்கின்றோம்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: பாருங்கள்! அவதூறு சுமத்துவது தீய மனிதனுடைய வேலையாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் தமது நுட்பமான கண்ணோட்டத்தை கூறுகின்றார்கள். திருக்குர்ஆனில் மாற்றம் நிகழ்ந்து விட்டது என்று நீங்கள் கூறுகின்றீர்கள். அவதூறு சுமத்தக் கூடியவன் தீயவனும், விஷமியும் ஆவான். இறை வேதத்தில் மாற்றம் செய்வதும் அவதூறு ஆகும். இதில் இருந்து தப்பித்துக் கொள்ளுங்கள்.

ஆகவே திருக்குர்ஆனில் எல்லாவகை மாற்றத்தில் இருந்தும் தப்பித்து இருக்க வேண்டும் என்பதே எங்களுடைய போதனை ஆகும். ஏனெனில், மாற்றம் செய்யக் கூடியவன் தீயவனும், விஷமியும் ஆவான் என்று அன்னார் (அலை) கூறியுள்ளார்கள். ஆகவே எங்கள் மீது ஆட்சேபனை செய்யக் கூடியவர்கள் அறிவை பயன்படுத்த வேண்டும். மாற்றம் செய்து நாம் நம்மை தீயவர்களுடனும், விஷமிகளுடனும் இணைத்துக் கொள்கிறோமா? அல்லது இணைத்துக் கொள்ள விரும்புகிறோமா? என்று பார்க்க வேண்டும்.

திருக்குர்ஆன் முழுமையான வேதமாக உள்ளது என்பதை குறித்து அன்னார் வழங்கிய வழிகாட்டல் என்னவென்றால் அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: திருக்குர்ஆனிற்கும், திருக்குர்ஆனுடைய கட்டளைகளுக்கும் தொண்டு செய்வதிலும், பெருமானார் (ஸல்) அவர்களுடைய தூய மார்க்கத்திற்கு தொண்டு செய்வதிலும் நான் மும்முரமாக ஈடுபட்டுள்ளேன். நான் எனது உயிரை கூட இந்த வழியில் ஈடுபடுத்தி விட்டேன். எனது முழுமையான நம்பிக்கை என்னவென்றால், முழுமையான, நிறைவான வேதமாகிய திருக்குர்ஆனை முழுமையாகப் பின்பற்றாமலும் பெருமானார் (ஸல்) அவர்களை பின்பற்றாமலும் இரட்சிப்பு கிடைப்பது சாத்தியமன்று. திருக்குர்ஆனில் கூட்டல் குறைத்தல் செய்யக்கூடியவர்கள் பெருமானார் (ஸல்)அவர்களுக்கு கட்டுப்படுவதை தமது கழுத்தில் இருந்து இறக்கி வைக்கக் கூடியவர்கள் காஃபிரும், முர்த்தத்தும் ஆவர் என்று நான் உறுதி கொள்கிறேன்.

ஆகவே எங்கள் மீது சுமத்தப்படுகின்ற அனைத்து ஆட்சேபனை மற்றும் கேள்விகளுக்கான பதில் இதுவாகும். அன்னார் (அலை) கூறினார்கள்: திருக்குர்ஆனுடைய போதனையின் மூலமாக இரட்சிப்பிற்கான வழியும், ஒளியும் கிடைக்கின்றது. கூறுகின்றார்கள்: இந்த வேதத்தை தவிர எந்தவொரு நூலாலும் இந்த ஒளியை கொடுக்க முடியாது;நேர்வழியை கொடுக்க முடியாது.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: உண்மையான வழிகாட்டி திருக்குர்ஆன் ஆகும். அதை பின்பற்றுவதால் இவ்வுலகிலேயே இரட்சிப்பின் ஒளிகள் காட்டப்படுகின்றன. மாபெரும் நற்பேறு வரை கொண்டு சேர்க்கின்றது.

وَمَنْ كَانَ فِيْ هٰذِهٖٓ اَعْمٰى فَهُوَ فِي الْاٰخِرَةِ اَعْمٰى وَاَضَلُّ سَبِيْلًا

எவர் இவ்வுலகில் குருடராக இருப்பாரோ அவர் மறுவுலகிலும் குருடராகவே இருப்பார். மேலும் அவர் (மற்றெல்லாரையும் விட) மிகவும் வழி தவறியவராக இருப்பார்.

وَمَنْ كَانَ فِيْ هٰذِهٖٓ اَعْمٰى فَهُوَ فِي الْاٰخِرَةِ اَعْمٰى وَاَضَلُّ سَبِيْلًا

கூறுகின்றார்கள்: எவர் உண்மையான ஞானத்தை பெறுவதற்காக முழுமையாக முயற்சி செய்வாரோ, வெறும் பேச்சுகளில் மட்டுமே சிக்கி இருக்க மாட்டாரோ அப்படிப்பட்ட நபர் மீது, உட்புற அருள்களை பெறுவதற்கு இந்த ஒரு வழி மட்டுமே உள்ளது என்பது தெளிவாக்கப்பட்டு விடும். அதாவது ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா (ஸல்) அவர்களை பின்பற்றுதல் மற்றும் திருக்குர்ஆனுடைய போதனையை தமது வழிகாட்டியாக ஆக்கிக் கொள்ளும் வழியாகும்.

அன்னார் (அலை) இங்கு அரபிச் சொல்லை பயன்படுத்தி இருக்கின்றார்கள்.கூறுகின்றார்கள்: அவர் முழுமையாக முயற்சிக்க வேண்டும் ; அவர் பேச்சுகளில் சிக்கி விடக் கூடாது. அதாவது ஹதீஸ்களுடைய சான்றுகளை காட்டிக் கொண்டிருக்கக் கூடாது. உட்புற அருள்களை பெறுவதற்கு ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா (ஸல்) அவர்களுக்கு கட்டுப்படுவது மற்றும் திருக்குர்ஆனுடைய போதனையை தமது வழிகாட்டியாக ஆக்கிக் கொள்வது என்ற வழி மட்டுமே உள்ளது அவர் மீது தெளிவாக்கப்படும். இதன் காரணமாகத்தான் இந்துக்கள் மற்றும் கிறிஸ்தவர்களில் பலர் முயற்சி செய்தபோதிலும், தவமிருந்து உழைத்தபோதிலும், (அதன் காரணமாக அவர்களின் உடல்கள் காய்ந்து விடுகின்றன.) வருட கணக்கில் காடுகளில் அவர்கள் வாழ்கிறார்கள்; கடுமையான முயற்சிகளை மேற்கொள்கிறார்கள்; இனிமையான விஷயங்களை விட்டு அவர்கள் முற்றிலும் விலகி விடுகின்றார்கள். அவ்வாறு இருந்தும் அவர்களுக்கு சிறப்பான ஒளிகள் கிடைப்பதில்லை. ஆனால், முஸ்லிம்களோ குறைவான முயற்சியே மேற்கொள்ளும்போதிலும், துறவறத்தை புறக்கணித்து விடும்போதிலும் அவர்களுக்கு அந்த சிறப்பான ஒளிகள் கிடைக்கின்றன. அந்த சிறப்புகள் பிற மக்களுக்கு கிடைப்பதில்லை. ஆனால் திருக்குர்ஆனின்படி அமல் செய்தால் அவை கிடைக்கின்றன.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: இதிலிருந்து தெளிவாக வெளிப்படுவது என்னவென்றால் திருக்குர்ஆன் போதிக்கின்ற வழிதான் நேரான வழியாகும். ஒருவர் கலப்பற்ற தவ்பாவை மேற்கொண்டால் 10 நாட்கள் வரை திருக்குர்ஆனுடைய

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

எதிர்பார்ப்புக்கு ஏற்ப ஈடுபட்டிருந்தால் தமது உள்ளத்தில் ஒளி இறங்குவதை காண்பார். இது சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட உண்மையான விஷயம் ஆகும். இந்த சிறப்பு இஸ்லாமிய மார்க்கத்தில் காணப்படுகிறது. வெறும் பேச்சை மட்டும் பேசுகிறது. எவ்வித தேர்வும் வைக்கவில்லை என்பது கிடையாது. மாறாக நூற்றுக்கணக்கான தூய உள்ளங்கள் இந்த வழியில் பயனடைந்துள்ளன. எவ்வளவோ முன்னுதாரணங்கள் உள்ளன. எவர்களெல்லாம் இதன்படி அமல் செய்தார்களோ அவர்கள் பயன் அடைந்தார்கள். வெறும் வெற்று வாதம் அல்ல. மாறாக எவர்கள் செயல் பட்டார்களோ அவர்கள் பயன் அடைந்துள்ளார்கள். ஆயிரக்கணக்கான உதாரணங்கள் உள்ளன.

ஆகவே நாமும் இதன் பக்கம் முன்பை விடவும் அதிக கவனம் செலுத்த வேண்டும். மேலும் நம் சந்ததிகளிடத்திலும் இதன் முக்கியத்துவத்தை உருவாக்க வேண்டும். மனிதர்களுக்கு இறைவன் மீது உண்மையான ஈமான் இல்லை. மாறாக ஈமானுக்குரிய வாதம் செய்யும் அம்மக்களுடைய நிலை இப்பொழுதும் பலவீனமானதாக உள்ளது என்ற விஷயத்தை எடுத்துரைக்கும்போது திருக்குர்ஆனின் சான்றின் ஒளியில் மனிதனுடைய உளவியலை முன் நிறுத்தியவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

நண்பர்களே! பாவத்தை விட்டு அச்சமற்று போனதற்கு காரணம் கவனமற்று இருக்கும் மனிதனுக்கு இறைவன் மீதும் உறுதியான நம்பிக்கை இல்லை ; அவனது தண்டனையின் மீதும் உறுதியான நம்பிக்கை இல்லை என்பதே ஆகும். ஏனெனில், மனிதனோ கோழையாக இருக்கின்றான்.

அதாவது மனிதன் தன்னைப் பொறுத்தவரை பெரும் கோழையாக இருக்கின்றான்.

அன்னார் (அலை) உதாரணத்தை எடுத்துரைத்தவாறு கூறுகின்றார்கள்: பாருங்கள்! ஒரு வீட்டில் கூரையின் கீழ் சில நபர்கள் அமர்ந்திருக்கின்றார்கள். திடீரென்று கடுமையான நிலநடுக்கம் வருகிறது. அப்பொழுது அனைவரும் வெளியே நோக்கி ஓடிச் செல்வார்கள். இதற்குரிய காரணம் என்னவென்றால் இன்னும் சில நொடிகள் கூரையின் கீழ் அமர்ந்திருந்தால் மரணத்திற்கு பலியாகி விடுவோம் ; கூரை கீழே விழுந்து விடும் என்று அவர்களுக்கு நம்பிக்கை இருக்கின்றது. ஆனால் பாவம் செய்யக் கூடியவர்களுக்கு இறைவன் மீதும் நம்பிக்கையில்லை ; அவனது தண்டனையின் மீதும் நம்பிக்கையில்லை. ஆகவே அந்த மக்கள் துணிவுடன் பாவம் செய்கின்றனர்.

கூறுகின்றார்கள்: எவர்கள் பொய்யான முறையிலும் செயற்கையான முறையிலும் இரட்சிப்பை தேடுகின்றார்களோ அவர்கள் பாவத்தில் இன்னும் துணிந்து விடுகின்றனர். ஏனெனில், பொய்யான வழிமுறை எவ்வித உறுதித் தன்மையும் வழங்குவதில்லை. ஆனால் உண்மையிலேயே இறைவன் இருக்கின்றான்; அவன் பாவம் செய்யக் கூடியவர்களை தண்டனை வழங்காமல் விடுவதில்லை என்று எவருக்கு உறுதியான அறிவு இருக்குமோ ; சம்பிரதாய அடிப்படையில் இருக்கக் கூடாது. சந்தேகத்திற்கு இடம் இன்றி அந்த நபர் பாவத்தின் வழிகளில் இருந்து தம்மை காப்பாற்றிக் கொள்வார். இரட்சிப்பின் உண்மையான தத்துவம் திருக்குர்ஆன் நம் மீது வெளிப்படுத்தியதே ஆகும். விரும்பினால் ஏற்றுக் கொள்ளுங்கள்.

ஆகவே அல்லாஹ்வின் கட்டளைகளின்படி செயல்பட்டு அவன் மீதுள்ள நம்பிக்கையில் முழுமைத் தன்மை பெறுவதற்கு முயற்சி செய்தால்தான் இரட்சிப்பு கிடைக்கும். இல்லையெனில் மிகவும் கஷ்டம் ஆகும்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: எவர்கள் இறைவனுக்காக தமது நஃப்ஸுடன் போர் செய்கிறார்களோ அவர்கள் அருளுக்குரியவர்கள் ஆவார்கள். எவர்கள் தமது நஃப்ஸுக்காக இறைவனிடம் போர் செய்கிறார்களோ அவர்கள் பேறிழந்தவர்கள் ஆவர். அவர்கள் அந்த இறைவனுடன் பொருத்தத்தை மேற்கொள்வது கிடையாது. எவர் தன் நஃப்ஸுக்காக இறை கட்டளைகளை தள்ளிப்போடுகிறாரோ அவர் ஒருபோதும் விண்ணில் நுழைய முடியாது. ஆகவே நீங்கள் முயற்சி செய்யுங்கள். அதாவது அவ்வாறான மக்கள் அல்லாஹ்வுடைய நெருக்கத்தை பெற முடியாது. ஆகவே நீங்கள் முயற்சி செய்யுங்கள். திருக்குர்ஆனின் ஒரு புள்ளியோ, ஒரு சுழியோ கூட உங்களுக்கு எதிராக சாட்சி கூற வேண்டாம். அதனால் நீங்கள் பிடிக்கப்பட்டு விட வேண்டாம். ஏனெனில், ஓர் அணு அளவு தீமையும் தண்டனைக்குரியதாக உள்ளது. நேரம் குறைவாக உள்ளது ; வாழ்க்கை நிச்சயமற்றதாக உள்ளது ; வேகமாக அடி எடுத்து வையுங்கள்; மாலை அருகில் வந்து விட்டது; எதை எடுத்து வைக்க வேண்டுமோ அதை மீண்டும் மீண்டும் பாருங்கள்; ஏதேனும் விடுபட்டு விடக் கூடாது ; அது நஷ்டத்திற்கான வழி வகுத்து விடக் கூடாது அல்லது அனைத்து செல்வமும் அசுத்தமானதாகவும், செல்லா காசாகவும் இருந்து விடக் கூடாது.

அல்லாஹ் உண்மையான முறையில் திருக்குர்ஆனுடைய போதனையை புரிந்து அதன்படி செயல்படக் கூடிய நல்வாய்ப்பை நமக்கு வழங்குவானாக. நாம் எப்பொழுதும் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தக் கூடியவர்களாக, அவன் என்ன வழிகாட்டலை வழங்கினானோ அதிலிருந்து பயன் பெறக் கூடியவர்களாக இருப்போமாக. ஈமானிலும், நம்பிக்கையிலும் அல்லாஹ்வின் மீதான அச்சத்திலும் அல்லாஹ் நம்மை முன்றேச் செய்வானாக. ரமலானில் மட்டுமின்றி நாம் எப்பொழுதும் திருக்குர்ஆனுடைய போதனைக்கேற்ப நமது வாழ்வை கழிக்க கூடியவர்களாக இருப்போமாக! இவை நிகழும் என்றால் அப்பொழுதுதான் நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் பைஅத்தின் உரிமையை செலுத்துவதற்கு முயற்சி செய்தோம் என்று நாம் கூற முடியும். அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் சேவகத்தில் இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்காக அனுப்பப்பட்டுள்ளார்கள். திருக்குர்ஆனுடைய ஆட்சியை நமது கழுத்துகளில் இடுவதற்காக அனுப்பப்பட்டுள்ளார்கள். அல்லாஹ் இந்த ரமலானிலும் அதற்குப் பிறகும் எப்பொழுதும் திருக்குர்ஆனுடைய போதனைகளில் இருந்து பயன்பெறக் கூடிய நல்வாய்ப்பை நமக்கு வழங்குவானாக!

பாலஸ்தீனர்களையும் துஆக்களில் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்! போர் மட்டும் இன்றி பசியாலும், நோயினாலும் இப்பொழுது குழந்தைகள் மற்றும் அப்பாவிகளின் உயிர்கள் வீணாகி கொண்டிருக்கின்றன. இது மனிதனால் உருவாக்கப்பட்டுள்ள பஞ்சமும், பசியும் அழிவும் ஆகும். இஸ்ரேலிய அரசாங்கத்தின் கடுமை மற்றும் பிடிவாதத்தின் காரணமாக இது உருவாகிக் கொண்டிருக்கிறது என்று இப்பொழுது ஐ.நா சபையும் கூற ஆரம்பித்து விட்டது. வழிகள் திறந்து விடும் என்றால், உதவிகள் விரைவாக சென்றடைந்து விடும் என்றால் இப்பொழுதும் கூட சீரமைப்பு ஏற்பட முடியும். அதேபோன்று சூடானுடைய பொதுமக்களுக்காக துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களின் தலைவர்களுக்கும், அதிகார பலம் கொண்டவர்களுக்கும் அறிவை வழங்குவானாக. அங்கும் பசி மற்றும் நோயினால் மக்கள் இறந்து கொண்டிருக்கின்றார்கள். அந்நாட்டு மக்களே தம் மக்கள் மீது அநீதி இழைத்துக் கொண்டிருக்கின்றார்கள். இந்த அனைத்தும் ஏன் நிகழ்கிறது என்றால், உலக ஆசைகளின் காரணமாக ஆகும். திருக்குர்ஆனுடைய போதனையை மறந்து விட்டார்கள். அல்லாஹ்வின் சார்பாக இந்தக் காலத்தில் அனுப்பப்பட்டவரை ஏற்றுக் கொள்ள மறுத்து கொண்டிருக்கின்றார்கள். இதேபோன்று இன்னும் பல முஸ்லிம் நாடுகளின் நிலைகளும் உள்ளன. அங்கும் பெரும் துன்பத்தின் நிலை காணப்படுகின்றது. அரசாங்கங்கள் தம் குடிமக்களின் மீது அநீதி இழைத்துக் கொண்டிருக்கின்றன. பரஸ்பரம் மக்கள் சண்டையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அல்லாஹ் அவர்கள் மீது கருணை காட்டுவானாக. பாகிஸ்தானில் உள்ள நமது அஹ்மதி சிறைவாசிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். ஏமனில் உள்ள சிறைவாசிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். பாகிஸ்தானுடைய பொதுவான நிலைகளுக்காகவும் துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் அஹ்மதிகளை பாதுகாப்பானாக.

தொழுகைக்குப் பிறகு நான் சில ஜனாஸா காயிப் தொழுகைகளை தொழ வைப்பேன். அவர்களின் நற்குறிப்பை இப்பொழுது எடுத்துக் கூறிவிடுகின்றேன்.

முதலாவது நற்குறிப்பு அமெரிக்காவைச் சார்ந்த டாக்டர் ஸஹீருத்தீன் மன்ஸுர் அஹ்மத் ஸாஹிப் அவர்களுடையதாகும். கடந்த நாட்களில் இவர்கள் மரணமடைந்து விட்டார்கள்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

இவர்கள் ஸாஹிப்ஸாதி அமத்துர் ரஷீத் பேகம் ஸாஹிபா மற்றும் மியான்(ன்) அப்துர் ரஹீம் அஹ்மத் ஸாஹிப் ஆகியோரின் மகன் ஆவார்கள். தாய் வழி சார்பாக இவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹக்கீம் மௌலவி நூருத்தீன் ஸாஹிப் (ரலி) ஆகியோரின் கொள்ளுப் பேரரும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் பேரரும் ஆவார்கள். தந்தை வழி சார்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் ஸஹாபியான ஹஸ்ரத் புரஃபஸர் அலி அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களின் பேரர் ஆவார்கள். இவர்கள் மெடிக்கல் துறையில் டிகிரி பெற்றார்கள். அதற்கு பிறகு ராணுவத்திலும் பணியாற்றியுள்ளார்கள். பிறகு ரப்வாவில் தமது கிளினிக்கை

திறந்தார்கள். அக்கம் பக்கத்தில் உள்ள ஏழைகளுக்கு எவ்வளவோ உதவி செய்துள்ளார்கள். இவருடைய கிளினிக்கில் இருந்து மக்கள் முழுமையாக பயனடைந்தனர். முஹ்தமிம் மற்றும் காயித் ஆகிய பொறுப்புகளில் குத்தாமுல் அஹ்மதிய்யா மற்றும் அன்ஸாருல்லாஹ் ஆகியவற்றிலும் தொண்டாற்றக் கூடிய நல்வாய்ப்பு இவர்களுக்கு கிடைத்துக் கொண்டிருந்தது. அமெரிக்கா சென்ற பிறகிலிருந்து அங்கு நேஷனல் செகரட்டரி தஃலீமுல் குர்ஆன் உடைய தொண்டு அவர்களுக்கு கிடைத்தது. கிலாஃபத்துடனும் நிகரற்ற தொடர்பு கொண்டிருந்தார்கள். அது கட்டுப்படுதல் மற்றும் நேசத்தின் தொடர்பாக இருந்தது. நானும் அதைக் கண்டுள்ளேன். என்னுடன் மிக அதிகமாக தொடர்பு வைத்திருந்தார்கள். கலீஃபா ஆன பிறகு அதை அவர்கள் வெளிப்படுத்தி இருக்கின்றார்கள். எப்பொழுதும் துஆவுக்காக எழுதுவார்கள். ஒவ்வொரு வேலையையும் தொடங்குவதற்கு முன்பும் துஆவுக்காக கடிதம் எழுதி வந்துள்ளார்கள். தஃலீமுல் குர்ஆன் துறைக்காகவும் அவர்கள் பெரும் உழைப்பு மற்றும் ஈடுபாட்டுடன் பணியாற்றி இருக்கின்றார்கள்.

அவர்களின் மனைவி ரிஸ்வானா ஸாஹிபா கூறுகின்றார்கள்: திருக்குர்ஆனுடன் அளவற்ற நேசம் இருந்தது. மிகவும் முறையாக திருக்குர்ஆனை ஓதி வந்தார்கள். காரில் செல்லும்போது பயணத்திலும் அவர்கள் திலாவத் செய்வார்கள்; அல்லது குழந்தைகள் மூலமாகவோ அல்லது பிறர் மூலமாகவோ திருக்குர்ஆன் ஓதச் செய்து கேட்பார்கள். பிறகு திலாவத்தில் உள்ள திருத்தத்தையும் கூறுவார்கள்.

மகள் ஸல்மானா கூறுகின்றார்: திருமணத்திற்கு பிறகும் தந்தை எனக்கு முறையாக ஃபோன் செய்து திருக்குர்ஆனுடைய மொழியாக்கத்தை கற்றுக் கொடுத்தார்கள். விடுமுறை நாட்களில் தம் பேரக் குழந்தைகளுக்கும் அவர்களே திருக்குர்ஆன் கற்றுக் கொடுத்தார்கள். பிறகு அவர்களிடம் காணப்பட்ட மற்றொரு தனிச் சிறப்பு என்னவென்றால், எந்தவொரு சிறிய தவறாக இருந்தாலும் அல்லது பெரிய தவறாக இருந்தாலும் உடனே மன்னிப்பு கேட்டு விடுவார்கள். புதிதாக பைஅத் செய்தவர்களையும் தம் மகிழ்ச்சியில் இணைப்பதற்கு சிறப்பான ஏற்பாடு மேற்கொள்வார்கள். குழந்தைகளுக்கும் அதைப் பற்றி வலியுறுத்தி வந்தார்கள்.

மர்ஹூமுடைய மருமகன் மிர்ஸா நபீல் அஹ்மத் கூறுகின்றார்: ஒவ்வொருவரையும் மிக அதிக அன்பு, நேசத்துடன் சந்திப்பார்கள். தொழுகைகளை ஜமாஅத்துடன் தொழுவதை கடைபிடித்து வந்தார்கள். திருக்குர்ஆன் திலாவத் செய்வதை முறையாக பேணி வந்தார்கள் ; எங்களுக்கும் அதைப் பற்றி வலியுறுத்தி வந்தார்கள். கோவிட் உடைய நாட்களில் தம் வீட்டில் அனைவரையும் ஒன்று கூட்டி தொழுகை நடத்தி வந்தார்கள். ஏதேனும் விஷயம் என்றால் கலீஃபாவுக்கு கடிதம் எழுதுங்கள் என்று எப்பொழுதும் கூறி வந்தார்கள்.

அவருடைய மகள் முஃப்லிஹா எழுதுகிறார்: சிந்தனை உறுதியானதாக இருக்க வேண்டும் ; அல்லாஹ்வின் மீது திடமான நம்பிக்கை வைக்க வேண்டும்; மக்கள் மீது நல்லெண்ணம் வைக்க வேண்டும்; பணிவை மேற்கொள்ள வேண்டும் ; தவறுகளை ஒப்புக் கொள்ள வேண்டும் என்று எப்பொழுதும் எங்களிடம் கூறுவார்கள்.

அதேபோன்று மர்ஹூமுடைய சகோதரியின் மகளும் அவர்களின் இதே விஷயத்தை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அத்துடன் இரங்கல் தெரிவிக்க வந்த ஒவ்வொரும் அவர்களை குறித்து, அவர்கள் மிகவும் மென்மையாக பேசக் கூடியவர் என்றும் பரிவுக் காட்டக் கூடியவர் என்றும் கூறினார்கள்.

முரப்பி ஃபர்ஹாத் ரானா ஸாஹிப் அவர்கள் கூறுகிறார்கள்: 15 வயதிலிருந்து அவர்களுடன் எனக்கு தொடர்பு உள்ளது. அவர்கள் தான் என்னை ஜமாஅத்துடன் இணைத்தார்கள். இன்னும் கூறுவதென்றால், அவர்களின் காரணமாகவே நான் வக்ஃபும் செய்தேன்.

சவ்த்ரி வஸீம் அஹ்மத் ஸாஹிப் எழுதுகிறார்கள்: 1974 இல் ஒருமுறை ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் எங்களுக்கு ஒரு வேலையை கொடுத்திருந்தார்கள். மர்ஹூம் அவர்கள் மிக உழைப்புடனும், பணிவுடனும் வேலை செய்து வந்தார்கள். சில சமயங்களில் முழு இரவும் பணியாற்றுவார்கள். நோயாளிகளுக்கு மிகுந்த தொண்டாற்ற கூடியவராகவும் அவர்களை கருத்தில் கொள்ளக் கூடியவராகவும், அவர்களின் சிகிச்சை மட்டுமின்றி தம் சார்பாக அவர்களுக்கு பொருளாதார உதவி செய்யக் கூடியவராகவும் இருந்தார்கள். நோயாளிகளுக்கு மருந்துகளை வாங்கிக் கொடுப்பார்கள். ஏழைகளை பராமரிக்கக் கூடியவர் ; விருந்தோம்பல் செய்வதில் சிறப்பானவராக இருந்தார்கள். இவர்கள் எனது தாயினுடைய சகோதரியின் மகனும் ஆவார்கள். நானும் அவர்களை அவர்களின் வீட்டில் கண்டுள்ளேன் ; மாநாட்டின் நாட்களிலும் இவர்களின் தாய் தந்தையை கண்டுள்ளேன். தாயும், தந்தையும் நன்மையில் நிலைத்து இருந்தால் அது குழந்தைகளுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும். விருந்தோம்பல் அவர்களின் சிறப்பு பண்பாக இருந்தது. மாநாட்டின் நாட்களில் தம் வீட்டை காலி செய்து கொடுத்து விட்டு அவர்கள் வெளியே டெண்ட் அமைத்து தங்கிக் கொள்வார்கள். முழு வீடும் விருந்தினர்களால் நிறைந்து காணப்படும். ஆகவே இந்த நல்லியல்பே மர்ஹூமிடத்து வந்துள்ளது.

இரண்டாவது நற்குறிப்பு சிரியாவை சார்ந்த மதிப்பிற்குரிய ஹஸன் ஆப்தீன் ஆஃப்கா ஸாஹிப் அவர்களுடையதாகும்.தற்போது இவர்கள் கனடாவில் வசித்து வந்தார்கள். கடந்த நாட்களில் 80 வயதில் இவர்கள் மரணமடைந்து விட்டார்கள்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

மர்ஹூமுடைய மகன் அப்துல் காதர் ஸாஹிப் எழுதுகிறார்கள்:எனது தந்தை சுன்னத் ஜமாஅத்சை சேர்ந்த குடும்பத்தில் பிறந்தார்கள். அதற்கு பிறகு ஷியா மார்க்கத்தை மேற்கொண்டார்கள்.

பிறகு அவர்களின் அண்ணன் பஷீர் ஆப்தீன், அவர்களுக்கு MTA மூலமாக ஜமாஅத்தை பற்றி அறிமுகம் கிடைத்தது. பல்வேறு விஷயங்கள் தொடர்பாக ஜமாஅத்தினுடைய விளக்கவுரைகள், விளக்கங்கள் ஆகியவற்றால் தாக்கத்திற்கு ஆளானார்கள். அஹ்மதிய்யத்தின் உண்மையை ஒப்புக் கொண்டார்கள். பிறகு அவர்கள் வீட்டில் பேச்சை ஆரம்பித்தார்கள்.

கூறுகிறார்கள்: இரண்டு மாதங்கள் வரை எனக்கும் எனது தந்தைக்கும் எனது சகோதரனுக்கும் இடையில் விவாதங்கள் தொடர்ந்து கொண்டிருந்தன. எந்த அளவுக்கு என்றால் நாங்களும் திருப்தி கொண்டு விட்டோம். பைஅத் படிவத்தை நிரப்பினோம். எனது தந்தையின் தாக்கம் சகோதரிகளின் மீதும் இருந்தது. அவர்களின் காரணமாக சகோதரிகளும் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார்கள். முழு குடும்பத்தினரும் அஹ்மதிகளாகிவிட்டனர்.

பிறகு அவர்களின் வீடு ஜமாஅத்தினுடைய தலைமையகமாக ஆகி இருந்தது. அங்கு அஹ்மதிய்யத்தின் தப்லீஃகும் நடக்கும். தொழுகைகளும் தொழப்படும். ஜுமுஆ தொழுகையும் நடக்கும். சிரியாவில் ஹல்ஃப் ஜமாஅத்தின் தலைவராக தொண்டாற்றும் நல்வாய்ப்பும் கிடைத்தது. தொழுகையை முறையாக பேணி வந்தார்கள். ஜமாஅத் நூல்களை மிகவும் முறையாக படிக்க கூடியவராக இருந்தார்கள். உயர்ந்த நற்பண்புகளுக்கு சொந்தக்காரராக இருந்தார்கள். கிலாஃபத்துடன் பெரும் நேசத்தின் தொடர்பிருந்தது. முரப்பிகளுக்கு கண்ணியம், மரியாதை அளித்து வந்தார்கள். மிகவும் எளிய வாழ்வை வாழக் கூடியவர்களாகவும் விருந்தோம்பல் செய்யக் கூடியவர்களாக இருந்தார்கள்.

மர்ஹூமுடைய மனைவி ஸுபைதா ஸாஹிபா கூறுகிறார்கள்: மேலான நல்லொழுக்கங்களுக்கு சொந்தக்காரராக திகழ்ந்தார்கள். மிகவும் நல்ல கணவராக இருந்தார்கள். வீட்டு வேலைகளில் எனக்கு உதவி செய்து வந்தார்கள். என் சகோதர, சகோதரிகள் மற்றும் உறவினர்களுடன் மிக நேசத்துடன் பழகி வந்தார்கள். உண்மை பேச வேண்டும் என்பதை எப்பொழுதும் குழந்தைகளுக்கு வலியுறுத்தி வந்தார்கள். நேர்மையாக இருக்க வேண்டும்; மக்களை நேசிக்க வேண்டும் ; விருந்தோம்பல் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி வந்தார்கள். மிக அதிகமாக தஹஜ்ஜுத் தொழக் கூடியவராக இருந்தார்கள். சந்தா கொடுப்பதில் எப்பொழுதும் முறையாக இருந்துள்ளார்கள்.

மர்ஹூமின் மகன் வழிப்பேரன் ஜாமிஆ அஹ்மதிய்யாவில் படித்து வருகிறார். அவர் கூறுகிறார்: எனது பாட்டனார் மிகவும் பணிவுள்ள, பொறுமையான போதுமென்ற மனம் உள்ள மனிதராக இருந்தார்கள். எப்பொழுதும் தஹஜ்ஜுதை முறையாக பேணக் கூடியவராக நான் அன்னாரைக் கண்டுள்ளேன். திருக்குர்ஆனை எப்பொழுதும் திலாவத் செய்யக் கூடியவராக இருந்தார்கள். அனைத்து மக்களையும் நேசிக்கக் கூடியவராக இருந்தார்கள். மன்னிக்கும் பண்பும், கண்டும் காணாமல் இருக்கும் பண்பும் அவர்களிடத்தில் காணப்பட்டது.

முரப்பி முஸ்லிஹ் ஷமூது ஸாஹிப் கூறுகின்றார்கள்: போதும் என்ற மனம் அவர்களிடத்தில் மிகவும் அதிகமாக காணப்பட்டது. பொருளாதார கஷ்டங்கள் இருந்தபோதிலும் எவரிடத்திலும் உதவி கேட்க மாட்டார்கள். மாறாக, இருக்கக் கூடிய கொஞ்ச நஞ்ச பணத்தையும் சந்தாவாக கொடுத்து விடுவார்கள். பிறருடைய தேவையை சார்ந்து இருப்பதை விரும்ப மாட்டார்கள். எங்கேயாவது செல்ல வேண்டுமென்றால் கடையிலிருந்து பொருட்களை வாங்கி வர வேண்டும் என்றால் நடந்தே செல்வார்கள். நாங்கள்

பலமுறை அவரிடம் நாங்கள் உங்களை வண்டியில் அழைத்துச் செல்கிறோம் என்று கூறி இருக்கிறோம். ஆனால் குளிர்காலத்திலும் நடந்துதான் செல்வார்கள். எந்த அளவுக்கு என்றால் கடைசி காலத்தில் நடந்து செல்வது கஷ்டமாக இருந்தபோதிலும் குளிர் காலத்திலும் கூட அவர்கள் நடந்து கடைகளுக்கு செல்வதை கண்டுள்ளோம். பிறரை சார்ந்து இருப்பதை விரும்ப மாட்டார்கள். மிகவும் நன்றி செலுத்தக் கூடிய மனிதராக திகழ்ந்தார்கள்.

ஹாஃபிழ் அப்துல் வஹீது பட்டி ஸாஹிப் கூறுகின்றார்கள்: மர்ஹூம் அவர்களை பார்க்கும்போதெல்லாம்

يَدْعُوْنَ لَكَ صُلَحَاءُ الْعَرَبِ وَاَبْدَالُ الشَّامِ

என்ற ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் இல்ஹாம் நிறைவேறுவது எனக்கு தென்படும். (அதாவது உமக்காக அரபு நாட்டின் சான்றோர்களும், சிரியா தேசத்தின் நல்லடியார்களும் பிரார்த்தனை செய்கிறார்கள் என்பதாகும்.)

அவர்கள் முலாகாத் செய்யும்போது நான் உங்களை நேசிக்கின்றேன்; ஏனெனில் நீங்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுடைய சமுதாயத்தைச் சார்ந்தவராக இருக்கிறீர்கள் என்று கூறுவார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் குறிப்பு கூறப்படும்போதெல்லாம் தன்னையுமறியாமல் மீண்டும், மீண்டும் அலைஹிஸ் ஸலாம் என்று கூறிக் கொண்டே இருப்பார்கள்; அவர்களின் கண்கள் நனைந்து விடும். இப்பொழுது எல்லா புறமும் புகை சூழ்ந்துள்ளது. இந்த காலத்தில் உண்மையான இஸ்லாத்தைக் குறித்து நமக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஒளியூட்டி உள்ளார்கள் என்று கூறுவார்கள். கிலாஃபத்துடன் எல்லையற்ற நேசம் இருந்தது. அல்லாஹ் அவர்களுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அந்தஸ்துகளை உயர்த்துவானாக.

அடுத்த நற்குறிப்பு உஸ்மான் ஹுஸைன் முஹம்மது கைர் ஸாஹிப் அவர்களுடையதாகும். இவர்கள் கடந்த நாட்களில் 60-வது வயதில் மரணமடைந்து விட்டார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْن

இவர்கள் சவுதி அரேபியாவில் தங்கி இருந்தார்கள். 2007-ம் ஆண்டில் அங்கு MTA மூலமாக அவர்களுக்கு ஜமாஅத்தின் அறிமுகம் கிடைத்தது. பிறகு பைஅத் செய்து விட்டார்கள். பிறகு அவர்கள் சூடான் திரும்பி விட்டார்கள். வீட்டில் MTA டிஷ் அமைத்தார்கள். குடும்பத்தினருக்கும் சகோதர, சகோதரிகளுக்கும் தப்லீஃக் செய்ய ஆரம்பித்தார்கள். அவர்களுடைய குடும்பத்தில் உள்ள மூன்று சகோதரர்கள் மற்றும் ஒரு சகோதரி, மனைவி, மக்களும் மற்றவர்களும் அஹ்மதி ஆகிவிட்டனர். முதலில்,அன்னாரது பைஅத் ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கான கடிதம் அன்னாருக்கு கிடைக்காமல் இருந்தது. எனவே அன்னார் தம் சகோதர சகோதரிகளுடன் மீண்டும் பைஅத்துடைய கடிதத்தை எழுதினார்கள். பைஅத்துடைய கடிதம் கிடைத்த பெற்ற பிறகுதான் அவர்களுக்கு நிம்மதி கிடைத்தது. சூடானில் அவர்களின் வீடு ஜமாஅத்தினுடைய சென்டராக இருந்தது. அங்குதான் ஜுமுஆ தொழுகை தொழப்பட்டு வந்தது. எம்.டி.ஏ பார்ப்பது, தர்ஸ் கொடுப்பது, தஃப்ஸீரே கபீர் வாசிப்பது போன்றவை அங்குதான் நடந்தது. ஜமாஅத்துக்காக செலவழிப்பதில் எப்பொழுதும் தாராள மனப்பான்மை கொண்டவராக இருந்தார்கள். அஹ்மதிகள் வருவதால் மிகுந்த மகிழ்ச்சி அடைவார்கள். அவர்கள் எப்பொழுதும் ஜமாஅத்திடம் இருந்து எந்தவொரு செலவுக்காகவும் வேண்டியது கிடையாது. தம் சார்பாக செலவழித்து வந்தார்கள். அதேபோன்று எப்பொழுதும் ஜமாஅத்துடைய பொறுப்புகளை கேட்டது கிடையாது. இந்த வேலையை நீங்கள் ஏற்றுக் கொள்ளுங்கள் அல்லது இந்த பொறுப்பை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று கூறப்படும்போது இளைஞர்களுக்கு அதை கொடுத்து விடுவார்கள்; அதன் மூலமாக அவர்கள் அதிகமான வேலைகளை கற்றுக் கொள்ளலாம் என்று கூறுவார்கள். மர்ஹூமுடைய மனைவி மக்களும் அவர்களைப் போலவே தொண்டாற்ற கூடியவர்களாக இருக்கிறார்கள். ஒரு மகள் டாக்டராக இருக்கிறார். மகனும் மால் துறையில் டியூட்டி கொடுத்து வருகிறார். தற்போது வரை மர்ஹூமுடைய வீடு ஜமாஅத் உடைய சென்டர் ஆக பயன்பட்டு வந்தது. ஆனால் உள்நாட்டு போருக்கு பிறகு இந்த மக்கள் பல்வேறு பகுதிகளுக்கு சென்று விட்டார்கள். தொடர்புகள் முறிந்து விட்டன. அவர்களின் சூழ்நிலைகள் சரியாகுவதற்காகவும் மீண்டும் அவர்கள் ஒன்றிணைந்து வாழ்வதற்காகவும் துஆ செய்யுங்கள் என்று முன்பும் நான் கூறியிருந்தேன்.

மனைவி மட்டுமின்றி இரு மகன்களையும் மகள்களையும் பின்னால் விட்டுச் சென்றுள்ளார்கள்.

அடுத்த நற்குறிப்பு அல்ஜீரியாவைச் சேர்ந்த முஹம்மது ஸஹ்ராபி ஸாஹிப் அவர்களுடையதாகும். இவர்களும் கடந்த நாட்களில் 48 வயதில் மரணமடைந்து விட்டார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْن

ஜமாஅத் தலைவர் கூறுகிறார்கள்: மர்ஹூம் அவர்கள் கேன்சர் நோயாளியாகக இருந்தார்கள். ஜமாஅத்தின் மீது அதிக நேசம் வைத்திருந்தார்கள். பெரும் விருந்தோம்பல் செய்யக் கூடியவராகவும், கிலாஃபத்திற்கு கட்டுப்பட கூடியவராகவும் இருந்தார்கள். ராணுவத்தில் பணியாற்றி வந்தார்கள். நண்பர்கள் அவருடைய வீட்டுக்கு செல்லும்போது மிகுந்த மகிழ்ச்சி அடைவார்கள். ஏழையாக இருந்தபோதிலும் அதிகமாக விருந்தோம்பல் செய்து வந்தார்கள். நீதிமன்ற வழக்குகளை அவர்கள் எதிர் கொள்ள நேர்ந்தது. அப்பொழுது மர்ஹூமைப் பார்த்து, உங்களைப் போன்ற அல்ஜீரியாவைச் சேர்ந்த ஒருவர் ஓர் இந்திய மனிதரை எவ்வாறு பின்பற்ற முடிகிறது? என்று நீதிபதி கேட்டபோது, அல்ஜீரியா போன்ற நாடு இந்திய நாட்டைச் சார்ந்த ஒருவரைக் கண்டு எப்படி பயப்பட முடிகிறது? என்று இவர்கள் கேட்டார்கள்.

அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களை அற்பமாக நினைக்கிறீர்கள் என்றால் இந்த அளவு பயப்பட வேண்டிய தேவை என்ன? இதுவே இன்று முல்லாக்கள் உடைய நிலையாக உள்ளது. அவர்களுக்கு பயம் இல்லை என்றால் பிறகு பகிரங்கமாக நம்மை பேச ஏன் விடுவதில்லை? தப்லீஃகில் ஏன் தடைகளை ஏற்படுத்துகிறார்கள்? நம்முடைய விஷயங்களைக் கண்டு அவர்களுக்கு அச்சம் உள்ளது. ஏனெனில், இவர்கள் உண்மையாளர்கள்; மக்கள் இவர்களை ஏற்றுக் கொள்வார்கள் என்று பயந்து பொய்யான தவறான விஷயங்களை ஜமாஅத்தின் பக்கம் சுட்டி காட்டுகிறார்கள்; ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் பக்கம் சுட்டிக் காட்டுகிறார்கள்.

கிலாஃபத்துடன் உள்ள தொடர்பை குறித்து இவர்கள் எழுதுகிறார்கள்: அல்ஜீரியாவில் அவர்களிடம் தொண்டு நிறுவனமாக ரிஜிஸ்ட்ரேஷன் செய்யுங்கள் என்று நான் கூறிய போது சில மக்களின் சிந்தனைகளில், இவ்வாறு செய்யக் கூடாது என்று இருந்தது. அப்போது மர்ஹூம் அவர்கள் கலீஃபாவிடம் இருந்து கட்டளை வந்த பிறகு விவாதங்களை நிறுத்துங்கள்; வேலை செய்யுங்கள் என்று கூறிவிட்டார்கள். அத்துடன் ஜமாஅத் தலைவரை பார்த்து நாங்கள் உங்களுடன் இருக்கிறோம் ; நீங்கள் முன்னே அடி எடுத்து வையுங்கள் என்று கூறினார்கள்.

பிறகு அடுத்த நற்குறிப்பு ரப்வாவைச் சேர்ந்த அப்துல் ஹய் வடாயிச் ஸாஹிப் அவர்களின் மகனாகிய ஸயீது அஹ்மத் வடாயிச் ஸாஹிப் அவர்களுடையதாகும். கடந்த நாட்களில் இவர்கள் மரணமடைந்து விட்டார்கள். இவர்களின் தந்தை வழி கொள்ளுத் தாத்தா மூலமாக இவர்களின் குடும்பத்தில் அஹ்மதியத் வந்தது. அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் ஸஹாபி ஆவார்கள். நஸாரத் உமூரே ஆமாவுடைய அறிக்கையில், இவர்கள் மீது வழக்குகளும் தொடரப்பட்டிருந்ததாக உள்ளது. நபித்துவத்தை அவமதித்தல் என்ற அடிப்படையற்ற அவதூறு சுமத்தப்பட்டு இருந்தது. அவர்கள் கைது செய்யப்பட்டார்கள். எவ்வாறு இருப்பினும் அந்த வழக்கு தொடர்ந்தது. கண்ணியத்துடன் அவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். 3 வருடங்களும் 2 மாதங்களும் சிறைவாசத்தை அனுபவிக்க கூடிய நல்வாய்ப்பு பெற்றார்கள். ஆனால் எதிர்ப்பு எந்த அளவு அதிகமாக இருந்தது என்றால் நிரபராதியாக இருந்தபோதிலும் தம் வீட்டுக்கு செல்ல முடியாத சூழ்நிலை இருந்தது. பிறகு இவர்கள் ரப்வாவிலேயே இருந்து விட்டார்கள்.

அடுத்த நற்குறிப்பு அஹ்மது கான் ஃகோந்தல் ஸாஹிபுடைய மகனாகிய ஷெஹ்பாஸ் ஃகோந்தல் ஸாஹிப் அவர்களுடையதாகும். இவர்களும் ரப்வாவை சார்ந்தவர்கள்தான். தற்போது ஹாலந்தில் வசித்து வந்தார்கள். இவர்களும் கடந்த நாட்களில் ஹாலந்திலேயே மரணமடைந்து விட்டார்கள்.

اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْن

இவர்களின் குடும்பத்திலும் இவர்களின் தந்தை வழிப்பாட்டனார் குஷி முஹம்மது ஸாஹிப் நவாப் ஷாஹ் அவர்களின் மூலமாக அஹ்மதியத் வந்தது. அவர்கள் இரண்டாவது கிலாஃபத்துடைய காலகட்டத்தில் பைஅத் செய்தார்கள். 1992-ல் மர்ஹூம் அவர்களுக்கு இறைவழியில் கைதாகக் கூடிய கண்ணியம் கிடைத்தது. கோட்டரியிலிருந்து அவர்கள் கைது செய்யப்பட்டார்கள். நபித்துவத்தை அவமதித்தல், தப்லீஃக் போன்ற அடிப்படையற்ற அவதூறுகள் சுமத்தப்பட்டன. அவர்களுடைய வழக்கு பத்து வருடங்கள் வரை நடந்தது. ஜாமீனும் கிடைத்துவிட்டிருந்தது. 2,3 மாதங்கள் சிறைவாசத்தில் இருந்த பிறகு ஜாமீன் கிடைத்து விட்டது. ஆனால், எவ்வாறு இருப்பினும் வழக்கு பத்து வருடங்கள் வரை

நடந்து கொண்டிருக்கிறது. ஜவேளை தொழுகைகளை பேணக் கூடியவராகவும், தஹஜ்ஜுத் தொழக் கூடியவராகவும் இருந்தார்கள். ஜமாஅத் பணிகளில் எப்பொழுதும் முன்னணியில் இருப்பார்கள். எந்த வேலையை கொடுத்தாலும் மிக மகிழ்ச்சியுடன் அழகிய முறையில் அதை செய்வார்கள்.

அல்லாஹ் இந்த அனைத்து மர்ஹூம்களுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அவர்களின் அந்தஸ்துகளை உயர்த்துவானாக. தொழுகைக்குப் பிறகு இவர்கள் அனைவரின் ஜனாஸா தொழுகையையும் தொழ வைப்பேன்.

தமிழாக்கம்
மவ்லவி APA. தாரிக் அஹ்மத்

* * * * *

**24-ம் பக்கத்தொடர்ச்சி...(குத்பாபேருரை 29.3.24)**

மீதான ஈமானே அகன்று விடுகின்றது.

ஆக, இவை துஆ செய்யாததனால் ஏற்படக் கூடிய பல்வேறு நிலைகள் ஆகும். பிறகு படிப்படியாக மனிதனுக்கு முதலில் துருப்பிடிக்கின்றது. பிறகு கடினம் உருவாகின்றது. பிறகு இறை மறுப்பு உருவாகி விடுகின்றது. பிறகு பகைமை மற்றும் எதிர்ப்பில் மனிதன் முன்னேற ஆரம்பித்து விடுகின்றான். இப்படிப்பட்ட சிந்தனைகளும் வர ஆரம்பித்து விடுகின்றன.

பிறகு ஈமான் வீணாகி விடுகின்றது. பிறகு மனிதன் இறைமறுப்பானாக ஆகிவிடுகின்றான். எனவே, அவசியம் துஆவின் பக்கம் வாருங்கள். பிறகு, ஈமான் வீணாகி விட்டால் மனிதன் உலகம் மற்றும் மறுமை ஆகிய இரண்டும் சீர்கெட்டு விடுகின்றன.

அடுத்து, எப்படிப்பட்ட துஆ இஸ்லாத்தின் பெருமை என்பதை எடுத்துரைத்தவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: துஆ இஸ்லாத்தின் ஒரு சிறப்பான பெருமிதம் ஆகும். முஸ்லிம்கள் இதன் மீது பெரும் கர்வம் கொள்கின்றார்கள். ஆனால், வாயால் மீண்டும் மீண்டும் கூறுவதற்கு இந்த துஆ என்று பெயர் அல்ல என்பதை நினைவிற் கொள்ளுங்கள். மாறாக, இது எத்தகைய விஷயம் என்றால் உள்ளம் இறைவன் மீதான அச்சத்தால் நிறைந்து விடுகின்றது.

துஆ செய்யக் கூடியவரின் ஆன்மா தண்ணீரைப் போன்று உருகி இறைவனின் சன்னிதியில் விழுகின்றது. மேலும் தன்னுடைய பலவீனங்கள் மற்றும் சருக்கல்களுக்காக ஆற்றலும், வல்லமையும் படைத்த இறைவனிடம் ஆற்றலையும், வல்லமையையும், பாவமன்னிப்பையும் அது வேண்டுகிறது. இது எப்படிப்பட்ட நிலை என்றால், இதனை வேறு சொற்களில் மரணம் என்று கூறலாம்.

இந்த நிலை உருவாகி விடும் பொழுது, ஏற்றுக் கொள்ளப்படுதல் என்ற கதவு அவருக்காக திறக்கப்படுகிறது என்று உறுதியாகப் புரிந்து கொள்ளுங்கள். இப்பொழுது துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான கதவு திறந்து விட்டது. மேலும் தீமைகளில் இருந்து தவிர்ந்திருப்பதற்கும் நன்மைகளில் உறுதியாக நிலைத்திருப்பதற்கும் ஒரு சிறப்பான ஆற்றல், அருள் மற்றும் உறுதித் தன்மை கிடைத்து விடுகின்றது.

இந்த வழிமுறை எல்லாவற்றையும் விட அருமையானதாகும். ஆனால், மிகப் பெரும் சிரமம் என்னவென்றால், மக்கள் துஆவின் உண்மைத் தன்மை மற்றும் நிலையை முற்றிலும் அறியாதவர்களாக இருக்கின்றார்கள். இதன் காரணமாகவே இந்தக் காலத்தில் பல மக்கள் இதை நிராகரிப்பவர்களாக ஆகிவிட்டனர். ஏனெனில், அவர்கள் அந்தத் தாக்கங்களைக் காணப் பெறுவதில்லை.

அவர்கள் நிராகரிக்கக் கூடியவர்களாக ஆகுவதற்கு ஒரு காரணம் இதுவும் ஆகும். அதாவது, என்ன நடக்க வேண்டுமோ? அது நடக்கத்தான் போகின்றது. அதே நியதி பற்றிய விஷயம், பிறகு துஆவின் தேவை என்ன? என்று அவர்கள் கேட்கிறார்கள். ஆனால், இது வெறும் சாக்குப் போக்காகும் என்பதை நான் அறிவேன். அவர்களுக்கு துஆவைப் பற்றி அனுபவம் இல்லை ; அதனுடைய தாக்கத்தைப் பற்றி அவர்கள் அறிந்திருப்பதில்லை. எனவே இவ்வாறு கூறிவிடுகின்றார்கள்.

இல்லையென்றால், அவர்கள் இப்படியே தவக்குல் வைக்கக் கூடியவர்கள் என்றால், பிறகு நோய்வாய்ப்பட்டு ஏன் சிகிச்சை செய்து கொள்கிறார்கள்? மற்ற விஷயங்களில் தாக்கங்கள் உள்ளன எனும் பொழுது, பிறகு அக உலகில் தாக்கங்கள் இல்லாமல் இருப்பதற்கு காரணம்தான் என்ன? அதாவது, ஆன்மிக உலகம், அக உலகம் இருக்கின்றது. அதில் தாக்கங்கள் எப்படி இல்லாமல் போகும்? அவற்றில் துஆ ஓர் அருமையான விஷயமாகும்.

எனவே துஆவில் தாக்கங்கள் இருக்கின்றன. ஆனால், எவர்கள் அல்லாஹ்வுடைய கட்டளைகளின்படி செயல்படக்கூடியவர்களோ அல்லாஹ்வுக்கான உரிமைகள் மற்றும் அடியார்களுக்கான உரிமைகளை நிறைவேற்றுவதற்கான உரிமையை செலுத்தக் கூடியவர்களோ நிரந்தரத் தன்மையோடு செலுத்திக் கொண்டே இருக்கின்றார்களோ அவர்களுடைய துஆக்களில் (தாக்கங்கள்) இருக்கின்றன.

அல்லாஹ் எந்த விஷயங்களை செய்ய கட்டளை இட்டுள்ளானோ அவற்றை செய்யக் கூடியவர்கள் ஆவார்கள். எவற்றிலிருந்து தடுத்துள்ளானோ அவற்றிலிருந்து தவிர்ந்து இருக்கக் கூடியவர்கள் ஆவார்கள். பிறகு, அவர்களுடைய ஈமானில் சற்றும் சருக்கல் ஏற்படக் கூடாது. ஈமானில் முன்னேறிக் கொண்டே செல்லக் கூடியவர்களாக அவர்கள் இருக்க வேண்டும். பிறகு, இந்த நிலையும் உருவாகி விடுகின்றது.

பிறகு, நிரந்தர தன்மையோடு துஆ செய்து கொண்டே செல்வது பற்றி அன்னார் (அலை) கூறுகிறார்கள்:

துஆ செய்யும் பொழுது, மனவெழுச்சி இல்லாமலும், பதற்றத்துடனும் செயல்படக் கூடாது. விரைவாகவே களைத்துப் போய் அமர்ந்து விடக் கூடாது. மாறாக, துஆ தன்னுடைய முழுமையான தாக்கத்தை காட்டிவிடாத வரை நகரக் கூடாது. எந்த மக்கள் களைத்து விடுகின்றார்களோ, பதற்றம் அடைந்து விடுகின்றார்களோ அவர்கள் தவறிழைக்கின்றார்கள். ஏனெனில், இது இழப்பிற்குரியவராக ஆகிவிடுவதற்கான அடையாளமாகும்.

எனது பார்வையில் துஆ மிகவும் உன்னதமான விஷயமாகும். மேலும், இது கற்பனையான விஷயம் அல்ல என்று நான் என்னுடைய அனுபவத்தால் கூறுகின்றேன். எந்த சிரமம் ஏதாவது ஒரு திட்டத்தால் தீர்வதில்லையோ அதை அல்லாஹ் துஆவின் மூலமாக எளிமையாக்கி விடுகின்றான். நான் உண்மையாகவே கூறுகின்றேன். துஆ மிகவும் அருமையான தாக்கம் கொண்டுள்ள விஷயமாகும். அதன் மூலமாக நோயிலிருந்து குணம் கிடைக்கின்றது. உலக நெருக்கடிகள், சிரமங்கள் இதன் மூலமாக அகன்று விடுகின்றன. உலக நெருக்கடிகளும், சிரமங்களும் கூட இதன் மூலமாக அகன்று விடுகின்றன. பகைவர்களின் சதித் திட்டங்களிலிருந்து இது காப்பாற்றி விடுகின்றது.

துஆவால் கிடைக்காதது என்று என்னதான் இருக்கின்றது? எல்லாவற்றையும் விடப் பெரிய விஷயம் என்னவென்றால், இது மனிதனைத் தூய்மையாக்கி விடுகின்றது. மனிதனைத் தூய்மையாக்கி விடுகின்து என்பது எல்லாவற்றையும் விடப் பெரிய விஷயம் ஆகும். மேலும், இதுவே ஒரு மனிதனின் நம்பிக்கை கொண்டவரின், இறை வணக்கம் செய்யும் ஒருவரின் அசல் நோக்கமாக இருக்க வேண்டும். மேலும், இது இறைவன் மீது உயிருள்ள ஈமானை வழங்குகிறது. பாவங்களிலிருந்து ஈடேற்றம் அளிக்கின்றது. இதன் மூலமாக நன்மைகள் மீது உறுதிப்பாடு உருவாகின்றது.

எந்த நபருக்கு துஆவின் மீது ஈமான் இருக்கின்றதோ அவர் மிகவும் நற்பேறு பெற்ற மனிதர் ஆவார். ஏனெனில், அவர் அல்லாஹ்வின் வினோதத்திலும் வினோதமான ஆற்றல்களைப் பார்க்கின்றார். மேலும், இறைவனைப் பார்த்து அவன் ஆற்றலும், வல்லமையும் மிக்க இறைவன் என்று ஈமான் கொள்கின்றார்.

துஆ ஏற்றுக் கொள்ளப்படுதல் இல்லாத போது முறையிடக் கூடிய மக்களுக்கு பதில் அளித்தவாறு அன்னார் (அலை) ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: பல மக்கள் அல்லாஹ்வின் மீது பழியைப் போடுகின்றார்கள். நாங்கள் தொழவும் செய்தோம் ; துஆவும் செய்தோம் ; ஆனால் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை என்று தம்மைத் தாமே குற்றமற்றவர்களாகக் கருதுகின்றார்கள். இது அந்த மக்களின் சுய தவறாக இருக்கின்றது. மனிதன் கவனமின்மை மற்றும் பெரும்பான்மையை விட்டு விடாத வரை தொழுகையும், துஆவும் ஏற்றுக் கொள்ளப்படுதலுக்குத் தகுதியானவையாக ஆகுவதில்லை. **(தொடரும்....)**

தமிழாக்கம்
மவ்லவி அதாவுல் முஃக்னீ

* * * * *

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**கிலாஃபத் மார்க்க அமைப்பின் நிரந்தர அங்கமாகும். மேலும் எல்லாம் வல்ல இறைவனின் தொன்றுதொட்ட ஓர் வலிமையான வெளிப்பாடாகும்**

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் எம். ஏ (ரலி) அவர்கள்)

உலகில் இரண்டு விதமான பொருட்கள் காணப்படுகின்றன என்று அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறியுள்ளான். ஒன்று, தற்காலிகமான மற்றும் குறிப்பிட்ட சூழல்களின் விளைவாகவும் இருப்பவை ஆகும். மேலும் இதில் மனித இனத்தின் எந்தவோர் பகுதியினருக்கும் எவ்வித உண்மையான பயனும் நோக்கமாக இருக்காது. இரண்டாவது பொருள், உலக அமைப்பின் பகுதியாக இருக்கின்றது. மேலும் மக்களுக்கு அதில் ஏதேனும் ஒரு பயனின் அம்சம் நோக்கமாக இருக்கின்றது. முதலில் கூறப்பட்ட அந்தப் பொருள் உலகத்தில் நுரையைப் போன்று எழுகின்றது. மேலும் நுரையைப் போன்று முடிந்து விடுகின்றது. ஆனால், இரண்டாவதாக கூறப்பட்ட விஷயம் உறுதியாக நிலைபெற்று வருகின்றது. அதற்கு உலகத்தில் நிலைத்து நிற்கும் தன்மை கிடைக்கின்றது. எனவே அல்லாஹ் கூறுகின்றான்: فَأَمَّا الزَّبَدُ فَيَذْهَبُ جُفَاءً وَأَمَّا مَا يَنفَعُ النَّاسَ فَيَمْكُثُ فِي الْأَرْضِ

(திருக்குர்ஆன் 13:18)

நுரை போன்ற பொருள் உடனடியாக காணாமல் போய்விடுகின்றது. ஆனால், பயன் தரும் பொருள் நிலைத்து நின்று வாழ்ந்து பயன் தருகின்றது. இந்த அடிப்படை கருத்தை வைத்து இயற்கையை உற்று நோக்கினால் நமக்கு உலகத்தில் எந்த பொருளாவது எவ்வகையிலும் பயன் தர வல்லது என்றால் அல்லாஹ் அதை நிலைபெறச் செய்ய ஏதாவது ஒரு அமைப்பை உருவாக்கி உள்ளான் என்ற நுட்பமான ஞானம் தென்படுகின்றது. எதுவரை என்றால், மிகச் சிறிய உயிரினம் மேலும், மிகவும் ஏளனமாக பார்க்கப்படும் செடி, கொடிகள் கூட பரிணாம வளர்ச்சிக்கான ஏற்பாடுகளை கொண்டுள்ளது. மேலும் இயற்கையின் மறைவான இருப்பு தனது வலுவான கையால் அதை அழிவில் இருந்தும் காப்பாற்றிக் கொண்டிருக்கின்றது. மேலும் அதாவது எந்த அளவிற்கு ஏதாவது ஒரு பொருள் மனித இனத்திற்கு பயனுள்ளதாக இருக்கிறதோ அந்த அளவிற்கு இறைவன் புறமிருந்து அதை பாதுகாப்பதற்கான ஏற்பாடு மிகவும் வலுவான மற்றும் மிகவும் பரந்த முறையில் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதை அண்ட சராசரத்தையும் மிகவும் ஆழ்ந்து கவனிக்கும்பொழுது இந்த விஷயம் ஒருபோதும் மறைவானதாக இருப்பதில்லை.

திருக்குர்ஆனில் பாதுகாப்பு தொடர்பான வாக்குறுதியும் இந்த விதியின் கீழ் தான் உள்ளது. அல்லாஹ் கூறுகின்றான்: إِنَّا نَحْنُ نَزَّلْنَا الذِّكْرَ وَإِنَّا لَهُ لَحَافِظُونَ

(அல்ஹிஜ்ர்: 10)அதாவது திருக்குர்ஆனுடைய இறை வெளிப்பாடுகள் எப்பொழுதும் ஒரு அடையாளமாக நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. மேலும் இறைவனுடைய நோக்கம் என்னவென்றால் மறுமை நாள் வரை மக்களை விழிப்புடன் வைப்பதற்கான வழிவகையாக இது இருக்க வேண்டும் என்பதற்காக இறைவனே இதற்கான பாதுகாவலனாக இருக்கின்றான். மேலும் எப்பொழுதும் எவ்வாறான விஷயங்களை உருவாக்குகின்றான் என்றால் அது வெளிப்படையான மற்றும் பொருள் வடிவில் இரண்டு நிலையிலும் இதை பார்த்துக் கொண்டிருக்கின்றது. அதாவது திருக்குர்ஆனுடைய பாதுகாப்பின் காரணம் திக்ர் என்ற சிறிய சொல்லில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இதே நிலைதான் நுபுவ்வத் தொடர்பாக உள்ளது. இறைவன் உலகத்தை ஒரு மாபெரும் குழப்பத்தில் சிக்கிக் கொண்டு இருப்பதை பார்த்து அதை சீர்திருத்த வேண்டும் என்பதற்காக ஒரு நபரை தன் புறமிருந்து ரஸூல் அல்லது நபியாக ஆக்கி அனுப்புகின்றான். ஆனால், நபி மனிதராக இருக்கின்ற காரணத்தினால் மனித படைப்பின் விஷயங்கள் அனைத்தும் அவருடைய வாழ்வின் அங்கமாக இருக்கின்றன. இதன் அடிப்படையில் சில எண்ணக் கூடிய ஆண்டுகளை விட அதிகமாக அவருக்கு அந்த வாழ்க்கை ஒத்துழைப்பு தருவதில்லை. இவ்வாறான நிலையில் அல்லாஹ் அந்த நபியுடைய மிஷனை வெற்றி பெறச் செய்ய மேலும் அதன் உச்சத்தை அடைய வைப்பதற்காக அவருடைய மரணத்திற்கு பிறகு ஏதாவது ஒரு ஏற்பாடு செய்ய வேண்டும்.அதன் மூலமாக நபியினால் விதைக்கப்பட்ட விதை தன்னுடைய உச்சத்தை அடைவது அவசியமாக இருக்கின்றது. மேலும் நபியை அனுப்பி எந்த சீர்திருத்தத்தை உருவாக்க வேண்டும் என்று அல்லாஹ் விரும்புகின்றானோ அது உலகத்தில் நிலைபெற்று பரவ வேண்டும். இந்த இறைவனுடைய ஏற்பாடு அதாவது நுபுவ்வத்தின் முழுமைத்துவம் என்று சொல்ல வேண்டும். அது கிலாஃபத் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது. அல்லாஹ்வுடைய நடைமுறை என்னவென்றால், ஒவ்வொரு மாபெரும் நபிக்குப் பிறகும் அவருடைய பணியை முழுமைப்படுத்துவதற்காக கிலாஃபத் தொடரை நிலைநாட்டுகின்றான். இந்த கலீஃபாக்கள் பொதுவாக நபி அல்லது இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்டவர் இல்லை. ஆனால், நபியுடைய தர்பிய்யத்தை பெற்று அவருடைய இறை நோக்கமான மிஷனை புரிந்தவாறு மேலும் அதை முன்னோக்கி வழிநடத்துவதற்கான தகுதி பெற்றவராக இருக்கின்றார். இந்த அடிப்படையில் அவர் இறைவனுடைய வஹீயின் மூலமாக நிற்பதில்லை. ஆனால், இறைவன் தன்னுடைய சிறப்பான நியதிக்கு உட்பட்டவாறு எவ்வாறான விஷயங்களை வெளிப்படுத்துகின்றான் என்றால் நபியின் மறைவிற்குப் பிறகு அந்த மக்கள் கிலாஃபத் அரியணையில் இறைவனின் விருப்பத்தின் அடிப்படையில் அமர்ந்து விடுகின்றார்கள். எனவே இறைவனுடைய மறைவான கதிர்கள் நம்பிக்கையாளர்களுடைய உள்ளத்தில் ஊடுருவி விடுகின்றது. மேலும் தாமாகவே கிலாஃபத்திற்கு தகுதியான நபரின் பக்கம் அவர்களை திருப்புகின்றது. இதனால் ஒரு தூதர் இல்லாத கலீஃபா மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றார். இஸ்லாம் இவ்வாறான போதனையை வழங்குகின்றனது; மேலும் திருக்குர்ஆன் இந்த உண்மைத்துவத்தை தெளிவான சொற்களில் இவ்வாறு கூறுகின்றது: கலீஃபாவை இறைவன் உருவாக்குகின்றான். வெளிப்படையாக பார்க்கும்பொழுது இந்த வார்த்தைகள் எதிர்மறையாக தென்படுகின்றது. அதாவது ஒரு நபர் பெரும்பாலான மக்களின் கருத்து அல்லது ஒருமித்த கருத்தின் அடிப்படையில் கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்படும்போது இறைவனுடைய மறைவான கரம் வேலை செய்கின்றது. மேலும் எந்த நபரை இறைவன் விரும்புகின்றானோ அவர் தான் கிலாஃபத்திற்கு தகுதியுடையவராக ஆகிவிடுகின்றார். அவரைத் தவிர வேறு எவருக்கும் கிலாஃபத்தின் அரியணையில் அமர்வதற்கான தைரியம் எழுவதில்லை. இதுதான் ஓர் ஆழமான உண்மைத்துவமாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்தக் கூற்றில் அது புதைந்துள்ளது.

அன்னார் (ஸல்) தம்முடைய மரணத்திற்கு சிறிது காலத்திற்கு முன்னர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தொடர்பாக கூறினார்கள்:.

நான் எனக்குப் பிறகு அபூபக்ரை கலீஃபாவாக ஆக்க விரும்பினேன். ஆனால், இது இறைவனுடைய பணி அல்லவா? என்று பின்னர் எனக்கு தோன்றியது. அல்லாஹ் அபூபக்ரை தவிர்த்து வேறு ஒருவரை கலீஃபாவாக தேர்ந்தெடுக்க மாட்டான். மேலும் இறைவனுடைய நோக்கத்தின்படி நம்பிக்கையாளர்களின் ஜமாஅத் அபூபக்ரை தவிர்த்து வேறு ஒருவர் கலீஃபாவாக ஆகுவதை ஒருபோதும் விரும்பாது. (புஹாரீ,கிதாபுல் அஹ்காம்)

அல்லாஹ்! அல்லாஹ்! ஒரு சிறிய வாக்கியத்தில் கிலாஃபத் அமைப்பைக் குறித்து எவ்வளவு விரிவான கருத்து கூறப்பட்டிருக்கின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: எனக்குப் பிறகு வெளிப்படையாக முஸ்லிம்களுடைய பெரும்பான்மை கலீஃபாவாக அபூபக்ரை தேர்ந்தெடுக்கும். ஆனால் இந்த ஆலோசனைக்கு பின்னால் வல்லமை மிக்க இறைவனுடைய தொன்று தொட்ட நியதி வேலை செய்கின்றது. மேலும் இறைவன் யாரை விரும்புகின்றானோ அவர்தான் அதற்காக தேர்ந்தெடுக்கப்படுகின்றார். மேலும் அவரை தவிர்த்து வேறும் எவரும் இருக்கமாட்டார். இந்த அடிப்படையில் அவ்வாறுதான் நிகழ்ந்தது. மேலும் உள்ளுக்குள்ளே அன்ஸார் ஸஹாபிகள் தங்களில் வேறு ஒரு நபரை நிறுத்த வேண்டும் என்று எண்ணினார்கள். மேலும் வெளிப்படையில் அரேபியாவின் பல்வேறு கிராம கோத்திரங்கள் கிளர்ச்சி செய்து கிலாஃபத் அமைப்பை அழித்து விட வேண்டும் என்று திட்டம் தீட்டினர். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இறைவனால் நியமிக்கப்பட்ட கலீஃபாவாக இருந்தார்கள். அதனால் அவரை பின்பற்றுபவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தபோதிலும் அதிகமான எண்ணிக்கையில் எதிரிகள் இருந்தும் கடல் நீர் தன்னுடைய நுரையை தின்பது போன்று அது தின்று விட்டது.

பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களிடம் கூறிய அந்த சொற்கள் இவையாகும். அதாவது அன்னார் (ஸல்) கூறினார்கள்:

இறைவன் உங்களுக்கு ஓர் ஆடை அணிவிப்பான். மேலும் மக்கள் அதை கழற்ற வேண்டும் என்று நினைப்பார்கள்.

ஆனால் நீங்கள் அதை கழற்றாதீர்கள். (திர்மிதீ)

இதுவும் அந்த தொன்றுதொட்ட இறைவனின் நடைமுறையை சுட்டிக்காட்டியவாறு கூறப்பட்ட விஷயம் ஆகும். அதாவது கலீஃபாவை இறைவன் உருவாக்குகின்றான். மேலும் தேர்ந்தெடுக்கக் கூடிய அந்த மக்கள் ஒரு திரையைப் போன்று இருக்கின்றார்கள். மேலும் ஒரு கருவியை விட வேறு எந்தவொரு மகத்துவமும் அதற்கு இல்லை. எவ்வாறெனில், இறைவன் தன்னுடைய நியதியை நிலைநாட்டுவதற்காக தன்னுடைய கரத்தை பயன்படுத்துகின்றான். இந்த சொற்களை நன்கு கவனித்துப் பார்த்தோம் என்றால் இறைவன் எவ்வாறான அழகு மற்றும் ஞானத்துடன் செயல்பட்டிருக்கின்றான் என்பது தெரிய வரும். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) கலீஃபாவை உருவாக்க வேண்டிய பணி இறைவனுடையது என்று கூறுகின்றார்கள். மேலும் சில ஆபத்திலிருந்து வெளியேற்றுகின்ற முயற்சி மனிதனுடைய கையில் உள்ளது என்று கூறியுள்ளார்கள். அதாவது வெளிப்படையாக என்ன விஷயம் நமக்கு தென்படுகின்றதோ அதற்கு எதிர்மறையாக அன்னாருடைய கூற்று உள்ளது. கிலாஃபத்தை வெளிப்படையில் மனிதர்கள் தேர்ந்தெடுக்கின்றார்கள். மேலும் இறைவனுக்கு வெளிப்படையில் எந்த தொடர்பும் இல்லை. ஆனால், இவ்வாறு இருந்தும் ஹஸ்ரத் நபிகள் நயாகம் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: இது இறைவனுடையதாகும். இருப்பினும் சிலநேரங்களில் மக்கள் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த கலீஃபாவை அகற்ற வேண்டும் என்று முயற்சிகளை நிச்சயம் செய்வார்கள். இது எத்தகைய மகத்துவ மிக்க ஒரு நுட்பமான விஷயமாகும். இதை புரிந்து கொண்ட பிறகு எந்தவொரு நபரும் இறைவனுடைய அருளாக இருக்கக் கூடிய கிலாஃபத் விவகாரத்தில் ஒருபோதும் வழிதவற மாட்டார். ஆனால், உலகத்தினுடைய அனைத்து அமைப்பும் ஒரு குறிப்பிட்ட காலத்துடன் தொடர்புடையதாக உள்ளது. மேலும் பொதுவாக காலகட்டங்களில் பிரித்து வைக்கப்பட்டிருக்கின்றது. ஆகையால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களை எச்சரிக்கை செய்தவாறு இந்த விஷயத்தை வெளிப்படுத்திக் கூறியுள்ளார்கள்: அதாவது எனக்குப் பிறகு என்னை தொடர்ந்து தொடர்ச்சியாக கிலாஃபத்தே ஹக்கா என்பதன் காலகட்டம் வெறும் 30 ஆண்டு காலம் வரை மட்டுமே இருக்கும். அதற்குப் பிறகு கொடுங்கோலர்கள் தங்களுடைய கைகளில் ஆட்சியை எடுத்துக் கொள்வார்கள். மேலும் அதற்குப் பிறகு காலத்தின் சூழலுக்கு ஏற்றவாறு ஆன்மிக கிலாஃபத்தின் காலகட்டம் வர ஆரம்பிக்கும். எதுவரை என்றால், இறுதியாக மஹ்தி, மஸீஹ் அவர்களுடைய வெளிப்பாட்டிற்கு பிறகு நபித்துவத்தின் அடிப்படையில் கிலாஃபத் நிலைநாட்டப்படும். (முஸன்னத் அஹ்மத்)

கிலாஃபத் அமைப்பு நபித்துவ அமைப்பின் பகுதியாகும். மேலும் அதன் முழுமைத்துவமாகவும், நபித்துவத்திற்கு தொண்டு ஆற்றுவது மற்றும் முழுமைப்படுத்துவதற்காகவும் உருவாக்கப்பட்டுள்ளது. அல்லாஹ் இதற்காக திருக்குர்ஆனில் இஸ்திக்லாஃபத் வசனத்தை எவ்வாறான அடையாளமாக வெளிக்காட்டி இருக்கின்றான் என்றால் உண்மையான மற்றும் பொய்யான கிலாஃபத்திற்கு இடையில் பகலைப் போன்ற வெளிச்சம் வித்தியாசமாக தென்படுகின்றது.

وَعَدَ اللّٰهُ الَّذِيْنَ اٰمَنُوْا
مِنْكُمْ وَعَمِلُوا الصّٰلِحٰتِ لَيَسْتَخْلِفَنَّهُمْ فِي
الْاَرْضِ كَمَا اسْتَخْلَفَ الَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ ۪
وَلَيُمَكِّنَنَّ لَهُمْ دِيْنَهُمُ الَّذِي ارْتَضٰى لَهُمْ
وَلَيُبَدِّلَنَّهُمْ مِّنْ بَعْدِ خَوْفِهِمْ اَمْنًا ؕ
يَعْبُدُوْنَنِيْ لَا يُشْرِكُوْنَ بِيْ شَيْـًٔا ؕ وَمَنْ كَفَرَ
بَعْدَ ذٰلِكَ فَاُولٰٓئِكَ هُمُ الْفٰسِقُوْنَ

(அந்நூர்: 56)

அதாவது இறைவனுடைய உறுதியான வாக்குறுதி என்னவென்றால், எவர்கள் நற்செயல் செய்கின்றார்களோ அவ்வாறான நம்பிக்கையாளர்களுடைய சமூகத்தில் கலீஃபா நிர்ணயிக்கப்படுவார். (இதற்கு எந்த நம்பிக்கையாளர் எல்லாம் நற்செயல் செய்வாரோ அவர் நிச்சயமாக கலீஃபா ஆவார் என்று பொருள் கிடையாது) மாறாக, இதில் இடம்பெற்றுள்ள செய்தி என்னவென்றால், எவர் ஆகின்றாரோ அவர் நிச்சயமாக நம்பிக்கையாளராகவும், நற்செயல் புரியக் கூடியவருமாக இருப்பார்)இந்த கலீஃபா முந்தைய சமுதாயத்தில் நிர்ணயிக்கப்பட்ட அதே தொன்று தொட்ட நடைமுறைக்கு ஏற்றவாறு நிர்ணயிக்கப்படுகின்றார். மேலும் இறைவன் இந்த மார்க்கத்தை அதை தனக்கு விருப்பமானதாக ஆக்கிக் கொண்டுள்ளான். அதன் மூலமாக உலகத்தில் உறுதிப்பாட்டை உருவாக்குவான். மேலும் (ஒவ்வொரு மாற்றத்தின் நேரத்திலும் ஓர் அச்சத்தின் நிலை உருவாகி விடுகின்றது) அல்லாஹ் அவருடைய அச்சத்தின் நிலையில் தன்னுடைய அருளின் மூலமாக அமைதியில் மாற்றிக் கொடுக்கின்றான். இந்த மக்கள் அவனுடைய உண்மையான அடியாளர்களாக இருக்கின்றார்கள். மேலும் அவனைத் தவிர வேறு எவருக்கும் (மறைமுகமாகவே, அல்லது வெளிப்படையாகவோ) தலை சாய்ப்பதில்லை. மேலும் எந்த நபர் இவ்வாறான உதவி மற்றும் ஒத்தாசையை பார்த்ததன் பிறகு இந்த கிலாஃபத் அமைப்பிற்கு எதிராக குழப்பவாதியாக ஆகின்றாரோ அவர் நிச்சயமாக இறைவன் பார்வையில் குற்றவாளியாகவும், வழிகெட்டவராகவும் கருதப்படுவார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் இந்த வசனம் தெளிவாக கிலாஃபத் அமைப்பு தொடர்பாக உள்ளது என்று கூறுகின்றார்கள். தன்னுடைய சுருக்கமான சொற்களில் மிக விரிவான கருத்தை தன்னுள் இது கொண்டுள்ளது. மேலும் அந்த வரைபடத்தை மிக அழகாக வரைந்து காண்பித்திருக்கின்றது. அது ஏறக்குறைய ஒவ்வொரு புது கிலாஃபத் நிலைநாட்டப்படும் பொழுது உலகத்திற்கு முன்பு வெளிக்கொணர்ந்து காண்பிக்கின்றது. ஒவ்வொரு நபி அல்லது கலீஃபாவின் மரணம் ஒரு மாபெரும் நிலநடுக்கத்தை போன்றதாக இருக்கின்றது. மேலும் எதிர்காலத்தில் வரவிருக்கின்ற கலீஃபா இதுபோன்ற சூழலில் கிலாஃபத் அரியணையில் அமர்கின்றார். அப்பொழுது மக்களுடைய உள்ளம் துக்கத்தாலும் அச்சத்தாலும், இப்பொழுது என்ன நடக்கும்? என்று இருக்கின்றது. ஆனால் மக்கள் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுது இறைவன் தன்னுடைய இந்த வசனத்தில் வழங்கிய வாக்குறுதிக்கு ஏற்றவாறு தன்னுடைய நியதியின் படி மறைவான கதிர்களை ஈர்க்க ஆரம்பிக்கின்றான். மேலும் அச்சத்தின் நாட்களை அமைதியில் மாற்றி சிறிது சிறிதாக பலவீனமான ஜமாஅத்தை வலுவானதன் பக்கமும் அல்லது வலுவான நிலையில் இருந்து மேலும் வலுவானதன் பக்கமும் ஈர்க்க ஆரம்பித்து விடுகின்றார். மேலும் அந்த கலீஃபா தன்னுடைய மார்க்க நிலை மற்றும் மார்க்கத் தொண்டு மூலமாக இந்த விஷயத்தில் முத்திரை பதிக்க ஆரம்பித்து விடுகின்றார். மேலும் இறைவனுடைய நேசம் மற்றும் இறைவனுடைய உதவியின் கரம் அவருடன் இருக்கின்றது. இந்தத் தொடர் வெளிப்படையாக எப்பொழுது வரை செல்கின்றது என்றால் நபி கொண்டு வந்த மார்க்கத்தை உறுதிபடுத்தி அவருடைய மிஷனை முழுமை அடைய செய்ய இறைவனின் ஞானம் விரும்பும் வரை அது நடக்கின்றது.

நான் மேலே கூறியதற்கு ஏற்ப கிலாஃபத் அமைப்பு உண்மையில் நபித்துவத்தின் ஒரு பகுதியும் அதன் முழுமையும் ஆகும். ஒவ்வொரு மாபெரும் நபியுடைய காலத்திலும் மிகத் தெளிவாக இது தென்படுகின்றது. எவ்வாறெனில், ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்குப் பிறகு அன்னாருடைய பணியை முழுமை செய்வதற்காக ஹஸ்ரத் யூஷா கலீஃபாவாக ஆனார். மேலும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்குப் பிறகு பித்ரஸ் கலீஃபா ஆனார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய மிஷன் மற்ற அனைத்து நபிமார்களை விட மிகவும் வல்லமை மிக்கதாகவும்,விரிவானதாகவும் இருப்பதன் காரணத்தினால் அன்னாருக்குப் பிறகு கிலாஃபத் அமைப்பு மிகவும் வெளிப்படையாகவும், வலுவான நிலையிலும் அமைந்தது. அதனுடைய கதிர் வீச்சு இன்று வரை உலகத்திற்கு பயன் தந்து கொண்டிருக்கின்றது. உண்மை என்னவெனில், நபித்துவத்துடன் கிலாஃபத் அமைப்பு இணையவில்லை என்றால் நவூதுபில்லாஹ் இறைவன் மீது ஒரு பயங்கரமான குற்றச்சாட்டு எழுந்து விடும். அதாவது அவன் உலகத்தில் சீர்திருத்தத்தை உருவாக்க வேண்டும் என்று விரும்பினான். ஆனால், அந்த சீர்திருத்தத்திற்காக ஒரே ஒரு நபரை சில ஆண்டுகளுக்கான வாழ்க்கையை தந்து பிறகு மரணத்தை தந்து மேலும் அந்த சீர்திருத்த அமைப்பை தன்னுடைய கைகளினால் அழித்து விட்டான். அதாவது இது ஒரு நீர் குமிழியாகும். அது கடலின் கரையில் வெளிப்பட்டது. பிறகு நிரந்தரமாக அழிந்து கடல் நீரின் அலைகளில் மறைந்து விட்டது. .

நம்முடைய நுட்பமான ஞானமும், அறிவும் கொண்ட இறைவன் எப்படிப்பட்ட இறைவன் என்றால், ஒரு மிகவும் அற்பத்திலும் அற்பமான பயன் தரக்கூடிய பொருளை கூட உலகத்தில் நிலைபெறச் செய்கின்றான். அது நிலை பெறுவதற்கான காரணிகளையும் ஏற்பாடு செய்கின்றான். அவ்வாறிருக்கும்போது நபித்துவம் போன்ற பொக்கிஷம் மேலும் ஒரு தூதர் கொண்டு வந்த சீர்திருத்தம், ஒரு வசந்தம் வீசிய தோட்டத்தை போன்று உருவானது.ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் உலகத்தில் ஒரு மாபெரும் மிஷன் கொண்டு வந்துள்ளார்கள். மேலும் தம்முடைய இருப்பின் அடிப்படையில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் நிழல் மற்றும் சாயலாக இருக்கின்றார்கள்.

தமிழாக்கம் மவ்லவி ஷஹாபுதீன்

## ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் குத்பாக்கள் மற்றும் சொற்பொழிவுகளிலிருந்து பயன் பெறுவதன் முக்கியத்துவமும் &அருட்களும்

(மவ்லானா முனீர் அஹ்மத் காதிம் ஸாஹிப், அடிஷனல் நாஸிர் இஷ்லாஹ் வ இர்ஷாத்,காதியான் -காதியான் ஜல்ஸா சொற்பொழிவு)

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
يٰٓأَيُّهَا الَّذِينَ اٰمَنُوا اسْتَجِيبُوا لِلّٰهِ
وَلِلرَّسُولِ إِذَا دَعَاكُمْ لِمَا يُحْيِيكُمْ

நம்பிக்கை கொண்டவர்களே! (அல்லாஹ்வின் தூதராகிய) அவர் உங்களுக்கு உயிர் கொடுப்பதற்காக அழைத்தால் நீங்கள் அல்லாஹ்வுக்கும், அவனது தூதருக்கும் பதில் அளியுங்கள். (8: 25)

لِلَّذِينَ اسْتَجَابُوا لِرَبِّهِمُ الْحُسْنٰى ۚ وَالَّذِينَ لَمْ يَسْتَجِيبُوا لَهُ لَوْ أَنَّ لَهُمْ مَا فِي الْأَرْضِ جَمِيعًا وَمِثْلَهُ مَعَهُ لَافْتَدَوْا بِهِ ۚ أُولٰٓئِكَ لَهُمْ سُوٓءُ الْحِسَابِ ۙ وَمَأْوٰىهُمْ جَهَنَّمُ ۖ وَبِئْسَ الْمِهَادُ

தங்கள் இறைவன் கூறுவதை ஏற்றுக் கொண்டவர்களுக்கு (நிலையான) நன்மை உண்டு. மேலும் அவன் கூறுவதை ஏற்றுக் கொள்ளாதவர்கள் பூமியிலுள்ளவை அனைத்தும் இன்னும் அவற்றிற்கு சமமானவையும் அவர்களுக்கு இருந்து, அவர்கள் அப்பொருள்களையெல்லாம் தங்களுக்கு ஈடாகக் கொடுத்தாலும் அவர்களுக்குத் தீய (முடிவைக் கொண்ட) கேள்விக் கணக்கு உள்ளது. அவர்களின் தங்குமிடம் நரகமாகும்.அது மிகக் கெட்ட இடமாகும். (13: 19)

மதிப்பிற்குரியவர்களே, நாம் நற்பேறு பெற்ற ஜமாஅத் ஆவோம். அல்லாஹ்வின் அருளால் இக்காலக்கட்டத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குக் கட்டுப்பட்டு இமாம் மஹ்தி மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொள்ளவும், நபித்துவத்தின் வழியில் வந்த கிலாஃபத்திற்கு கீழ்படிந்து இறைவனின் மகத்துவம் வாய்ந்த ஆன்மிக, பௌதீக அருட்களை பெறுவதற்கான நற்பேறை பெற்று வருகின்றோம். இமாம் மஹ்தி (அலை) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஒப்பாக இருப்பார் என்று அல்லாஹ் கூறியிருக்கின்றான். அல்ஜுமுஆ என்ற அதிகாரத்தில் அல்லாஹ் கூறுகின்றான். هُوَ الَّذِي بَعَثَ فِي الْأُمِّيِّينَ رَسُولًا مِّنْهُمْ يَتْلُوا عَلَيْهِمْ اٰيٰتِهِ وَيُزَكِّيهِمْ وَيُعَلِّمُهُمُ الْكِتٰبَ وَالْحِكْمَةَ ۚ وَإِنْ كَانُوا مِنْ قَبْلُ لَفِي ضَلٰلٍ مُّبِينٍ

அவனே எழுதப்படிக்கத் தெரியாத மக்களுக்கு - அவர்கள் இதற்கு முன்னர் தெளிவான வழிகேட்டில் இருந்தபோதிலும் - அவனது கட்டளைகளைப் படித்துக் காட்டி அவர்களைத் தூய்மைப்படுத்தி அவர்களுக்கு வேதத்தையும், நுட்பமான அறிவையும் கற்றுக் கொடுக்கும் ஒரு தூதரை அவர்களிலிருந்தே அனுப்பினான். (62: 03)

இதற்கு அடுத்த வசனத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோற்றம் முன்னவர்களுக்கிடையில் ஏற்பட்டதைப் போன்றே பின்னவர்களுக்கு மத்தியிலும் உவமை வடிவில் நிகழும். இதில் அவர்களுக்கு இதே பணிகள் தான் இருக்கும் என்று கூறுகின்றான்.

மேலும் இதுவரை அவர்களுடன் சேராத மற்றவர்களுக்கிடையிலும் (அவரை எழுப்புவான்). அவன் வல்லமைமிக்கவனும், நுண்ணறிவுள்ளவனுமாவான். (62: 04)

அதாவது, இமாம் மஹ்தி மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தோற்றம் உண்மையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் தோற்றமாகும். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முதலாம் தோற்றத்தில் அவர்களுக்கு வழங்கப்பட்ட அதே பொறுப்புகள் தான் இமாம் மஹ்தி மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவை இறைவனின் வசனங்களை ஓதிக்காட்டுதல், அவர்களின் உள்ளங்களை தூய்மைப்படுத்துதல், இறை வேதத்தைக் கற்பித்தல் மற்றும் அதிலுள்ள கட்டளைகளை எடுத்துரைத்தல் ஆகியவையே அந்த பணிகள். முந்தைய சான்றோர்களும் இதனை விளக்கி எழுதுகையில் வரவிருக்கும் மஹ்தியிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒளிகள் பிரதிபலிக்கும் என்று எழுதியுள்ளார்கள்.

ஹஸ்ரத் ஷாஹ் வலியுல்லாஹ் ஸாஹிப் தஹ்லவி(ரஹ்) அவர்கள் அல்கைருல் கஸீர் என்ற தமது நூலில் முன்னறிவிப்பு செய்தவாறு எழுதுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஆன்மிக ஒளிகள் பிரதிபலிப்பதற்கு வாக்களிக்கப்பட்ட மஸீஹே அதிக உரிமை படைத்தவர் ஆவார். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் இந்த சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு சாதாரண மனிதராக இருப்பார் என்று பொதுமக்கள் கருதுகின்றனர். அவ்வாறல்ல. மாறாக, அவர் முஹம்மத் என்ற பெயரின் உண்மையான விளக்கமாகவும், பிரதிபலிப்பாகவும் இருப்பார். (ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் ஏப்ரல் 5, 1985- அன்று ஆற்றிய உரை)

மதிப்பிற்குரியவர்களே! வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் காலத்தின் இமாமாக தோன்றுகின்றவர்களிடம் இருக்கும் ஆற்றலைக் குறிப்பிட்டு கூறும் இடத்தில் பஸத் ஃபில் இல்மி என்பதும் ஒன்று என்றார்கள். அதாவது அல்லாஹ் அனுப்பவிருக்கின்ற தன் பிரதிநிதிக்கு ஆன்மிக மற்றும் பௌதீக அறிவுகளின் விசாலத்தை வழங்குகின்றான்.

இதை விளக்கியவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

மூன்றாவது திறன் அறிவில் மேன்மை வகிக்கும் திறனாகும். இது இமாமத்திற்காக மிகவும் இன்றியமையாத ஒரு சிறப்புத் திறனாகும். இமாம் என்ற சொல்லின் உட்பொருள் எல்லா நுட்பங்கள், ஞானங்கள், அன்பின் இன்றியமையாதவை, உண்மை மற்றும் விசுவாசம் ஆகியவற்றில் முந்திச் செல்வதை எதிர்பார்க்கின்றது. ஆகையால் அவர் தன் பிற எல்லாத் திறன்களையும் இதிலேயே ஆக்கிக் கொள்கின்றார். மேலும்,

رَبِّ زِدْنِي عِلْمًا

(20: 115) என்ற துஆவில் எப்போதும் மூழ்கி இருக்கின்றார். முன்னதாகவே அவருடைய இயல்பும், உணர்வுகளும் இந்த அம்சங்களுக்காக அற்புதமான முறையில் தகுதி வாய்ந்துள்ளன. ஆகவே இறைவனின் அருளால் இறைஞானத்தில் அவருக்கு ஒரு மேன்மை வழங்கப்படுகின்றது. மேலும் அவருடைய சமகாலத்தில் அவருக்கு நிகராகத் திருக்குர்ஆன் ஞானங்களை அறிந்தவர்; முழுமையான பயனளிப்பவர் மற்றும் அத்தாட்சிகளை நிறைவு செய்பவர் யாரும் இருப்பதில்லை. அவரது சீரிய கருத்துகள் பிறருடைய அறிவிலுள்ள பிழைகளைத் திருத்துகின்றன. மார்க்க ஞானங்களை எடுத்துரைப்பதில் எவருடைய கருத்தும் இவருடைய கருத்திற்கு எதிராக இருக்குமாயின் உண்மை இவர் பக்கமே இருக்கும். ஏனெனில், உண்மையான நுண்ணறிவைத் தெரிந்து கொள்வதில் அவருடைய முற்போக்கு சிந்தனையின் ஒளி அவருக்கு உதவுகின்றது. பிரகாசமான கதிர்களைக் கொண்ட அந்த ஒளி பிறருக்கு வழங்கப்படுவதில்லை.

وَذٰلِكَ فَضْلُ اللّٰهِ يُؤْتِيهِ مَنْ يَّشَآءُ

(62:05). கோழி, முட்டைகளைத் தன் சிறகுகளுக்குள் வைத்து அடைகாத்து, குஞ்சு பொரிக்கின்றது. பிறகு அந்தக் குஞ்சுகளை சிறகுகளுக்குள் வைத்து தன் திறமைகளை அவற்றிற்கு ஊட்டுகின்றது. அதேபோன்று இமாமும் தம் ஆன்மிக ஞானங்களால் தம்முடன் இருக்கும் மக்களுக்கு ஆன்மிக அறிவில் வளர்ச்சியை ஏற்படுத்திக் கொண்டே இருக்கின்றார்.

இந்த தோட்டத்திற்கு அவர் இறைவனின் சார்பாக தோட்டக்காரராக அமர்த்தப்படுகின்றார். எல்லாவித ஆட்சேபனைகளைப் போக்குவதும் ஆட்சேபனை செய்பவர்கள் அனைவரது வாயை அடைப்பதும் அவரது கடமையாகும். ஆட்சேபனைகளைப் போக்குவது மட்டும் அவரது கடமையல்ல. கூடுதலாக, இஸ்லாத்தின் அழகையும் அதன் பொலிவையும் உலகுக்கு எடுத்துக் காட்டுவதும் அவரது கடமையாகும். ஆகவே அப்படிப்பட்ட நபர் மிகவும் மரியாதைக்குரியவரும், போற்றத்தக்கவரும் ஆவார். ஏனெனில், அவருடைய இருப்பினால் இஸ்லாத்தின் வாழ்வு வெளிப்படுகின்றது.அவர் இஸ்லாத்தின் பெருமிதம் ஆவார். அவர் அனைத்து மக்களுக்கும் இறைவனால் சான்று பூர்த்தியாக்கப்பட்டவர் ஆவார். அவரை விட்டு விலகியிருப்பது யாருக்கும் தகுந்ததன்று. ஏனெனில், அவர் இறைவனின் விருப்பம் மற்றும் கட்டளையால் இஸ்லாத்தின் கண்ணியத்தை வளர்ப்பவரும் எல்லா முஸ்லிம்களின் மீதும் அனுதாபம் கொண்டவரும், மார்க்க ஞானங்களை ஒரு வளையத்தைப் போன்று சூழ்ந்தவருமாவார். இஸ்லாம் மற்றும் நிராகரிப்பின் ஒவ்வொரு மல்யுத்த மைதானத்திலும் அவரே

பதிலளிக்கின்றார். அவருடைய தூய மூச்சுக் காற்றே நிராகரிப்பை முற்றிலும் அழிக்கின்றது. அவரே எல்லாமாகவும், அவரைத் தவிர மற்றவர்கள் அவரது அங்கமாகவும் பாவிக்கப்படுகின்றனர். (இமாமின் தேவை எனும் நூல், ரூஹானீ கஸாயீன், தொகுதி 13, பக்கம் 479 - 481)

இதிலிருந்து இக்காலக்கட்டத்தில் நபித்துவ வழியில் தோன்றிய கிலாஃபத்தின் மூலம் தரப்படுகின்ற கட்டளைகளுக்கு இருக்கும் மதிப்பை நாம் புரிந்து கொள்ள முடிகின்றது.

இந்த மகத்துவம் வாய்ந்த கிலாஃபத்தைக் குறித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த கிலாஃபத் நபித்துவத்தின் வழியில் தோன்றும் என்று கூறினார்கள். இதன்படி இந்த கிலாஃபத்தின் மகத்துவம் மற்றும் மேன்மையை பொருத்த வரை நபித்துவத்தின் அருள்களை தன்னகத்தே கொண்டுள்ளது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த கிலாஃபத்தைக் குறித்து இது அல்லாஹ்வின் இரண்டாவது வல்லமை என்று குறிப்பிடுகின்றார்கள்:

அந்த இரண்டாவது வல்லமையைக் காண்பதும் உங்களுக்கு அவசியமாகும். மேலும், அது வருவது உங்களுக்கு சிறந்ததாகும். ஏனெனில், அது நிரந்தரமானதாகும். அதன் தொடர் மறுமை வரை அறுந்து விடாது. மேலும் நான் செல்லாத வரை அந்த இரண்டாவது வல்லமை வர முடியாது. ஆனால், நான் சென்று விட்டால் இறைவன் உங்களுக்காக அந்த இரண்டாவது வல்லமையை அனுப்புவான். அது எப்போதும் உங்களுடனிருக்கும். இறைவனின் வாக்குறுதி பராஹீனே அஹ்மதிய்யாவில் குறிப்பிட்டுள்ளது. மேலும் வாக்குறுதி என்னைப் பற்றி அல்ல. மாறாக, உங்களைப் பற்றியதாகும். நான் உம்மை பின்பற்றும் ஜமாஅத்தை மறுமை வரை மற்றவர்களின் மீது மேலோங்கச் செய்வேன் என இறைவன் கூறியுள்ளான். ( அல்வஸிய்யத், உயில் பக்கம் - 12 -13)

அஹ்மதிய்யா கிலாஃபத் இறைவனின் இரண்டாவது வல்லமையாகும். இதன் அருளால் கிலாஃபத்திற்காக தம் உயிரையும் தியாகம் செய்பவர்களுக்காக கியாமத் வரை நிரந்தர வெற்றிக்கான வாக்குறுதியை இறைவன் வழங்கியுள்ளான். இந்த வெற்றியை அடைவதற்காக காலத்தின் கலீஃபாவின் கட்டளைகளைக் கேட்டு கட்டுப்படுவோம். அதன்படி உளப்பூர்வமாக செயல்படுவோம் என்ற நிபந்தனை நமக்கு விதிக்கப்பட்டுள்ளது. ஏனெனில், இதுவே வானத்திலிருந்து இறங்கிய பால் ஆகும். இதனை உள்ளத்திலும், மனதிலும் பாதுகாத்து வைத்துக் கொள்ளுங்கள் என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இல்ஹாம் இறங்கியது.

(தத்கிரா, பக்கம் 558)

இதனை விளக்கியவாறு இது ஞானம் மற்றும் நுட்பமான அறிவு எனும் பாலாகும் என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) கூறினார்கள்:

يا احمد فَاضَتِ الرحمة على شفتيك

كلام أُفصحت من لدن ربّ كريم

(தத்கிரா : 558)

அஹ்மதே! உமது உதடுகளிலிருந்து இறைவனின் கருணை வெளிப்படுகின்றது. உமது சொற்கள் இறைவனால் செரிவூட்டப்பட்டுள்ளன.

இதுவே அந்த ஆன்மிகப் பால் மற்றும் கருணையாகும். இது இன்று இறை வல்லமையின் இரண்டாம் தோற்றத்தை வெளிப்படுத்துபவர்கள் மூலம் நமக்கு கிடைத்துக் கொண்டிருக்கின்றது.

இந்த வானத்தின் பால் நூற்றி இருபத்து ஐந்து வருடங்களாக நம்மவர்கள் மீதும் பொழிந்து கொண்டே இருக்கின்றது. அஹ்மதிய்யா கிலாஃபத்தின் வரலாற்றை நாம் ஆய்வு செய்தால் ஒவ்வொரு கிலாஃபத்தின் காலகட்டத்திலும் அந்தந்த காலத்திற்கு தகுந்தார் போல் தேவைக்கு ஏற்ப முழு உலகத்திற்கும் வான் மழையாய் பயனளித்திருக்கின்றது என்பதை நாம் தெளிவாக உணர முடிகிறது.

இந்த மழை சர்வதேச அளவிலும் ஆட்சி செய்வதற்கான ஒழுங்குமுறைகளை அரசுகளுக்கு கற்பித்திருக்கின்றது. இஸ்லாமிய போதனைகளின் ஒளியில் அரசுகளுக்கு அதன் கடமைகளை உணர்த்தியிருக்கின்றது. இன்னொரு பக்கம், உலகின் அனைத்து துறைகளைச் சார்ந்த வல்லுநர்களுக்கும் அவர்கள் பொருளாதார வல்லுநர்களாக இருந்தாலும் சமூக அறிவியலின் வல்லுநர்களாக இருந்தாலும், அறிவியல் வல்லுநர்களாக இருந்தாலும், மருத்துவத் துறையில் வல்லுநர்களாக இருந்தாலும் அல்லது புவியியல் துறை வல்லுநர்களாக இருந்தாலும் அல்லது வரலாற்றுத் துறை வல்லுநர்களாக இருந்தாலும் அல்லது ஆன்மிக அறிஞர்களாக இருந்தாலும் அனைவருக்கும் மிகச் சிறந்த முறையில் வழிகாட்டியுள்ளார்கள். எல்லாருடைய தவறுகளையும், குற்றங்களையும் சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் எழுதிய தஸ்தீக் பராஹீனே அஹ்மதிய்யா மற்றும் தர்ஸுல் குர்ஆன் மற்றும் அன்னாரின் மருத்துவம் தொடர்பான நூல்கள், மேலும் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் அரசியல் தலைவர்களுக்கு வழங்கிய ஆலோசனைகள், பொருளாதாரம் சம்பந்தமாக அன்னார் வழங்கிய உரைகள், அரசியல் அறிவில் ஆழ்ந்த கருத்துகளைக் கொண்ட தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன் எனும் நூல், தஃப்ஸீரே கபீர், இஸ்லாத்தின் பொருளாதார அமைப்பு, அஹ்மதிய்யத் என்றால் உண்மை இஸ்லாம், தஃவத்துல் அமீர் போன்ற நூல்கள் மற்றும் பேருரைகள் போன்றவை இதற்கு சான்றாகும்.

ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் அல்லாஹ்வின் ஆலயம் கட்டப்படுவதன் நோக்கம் குறித்து உலக மக்களுக்கு எடுத்துரைத்த வழிகாட்டல்கள், பொருளாதார வீழ்ச்சிக்கு தீர்வு குறித்து வழங்கிய குத்பாக்கள் மற்றும் பாகிஸ்தானிய அரசியல்வாதிகள் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு எதிராக நிறைவேற்றிய இஸ்லாம் விரோத தீர்மானங்களைக் குறித்து அவர்களுக்கு கொடுத்த வழிகாட்டல்கள், எதிர்காலத்தில் அந்த அரசுக்கு ஏற்படவிருக்கும் அவலநிலைகள் குறித்த எச்சரிக்கைகள். இதனை அந்நாட்டின் அறிஞர்கள் இன்று ஏற்றுக் கொண்டுள்ளனர். மார்க்க அறிவுகள் சார்ந்த தஃஸீக் மற்றும் தர்பிய்யத் குத்பாக்கள். மேலும் ஒவ்வொரு கருத்தைக் குறித்தும் அவர்களுக்கு இருந்த ஆழமான பார்வையும், விளக்கங்களும் இவற்றுக்கு சான்றுகளாகும்.

மேலும் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் நவீன விஞ்ஞான வளர்ச்சிக்கு ஏற்ப திருக்குர்ஆனுக்கு வழங்கிய விளக்கவுரை இது தொடர்பாக உலகின் முன் மஜ்லிஸே இர்ஃபான் மூலம் பல்வேறு தலைப்புகளில் விரிவாக நிகழ்த்திய கருத்துப் பரிமாற்றங்கள், ஹோமியோபதி சிகிச்சை முறையின் மீது விரிவான ஆய்வுகளும் அதன் மூலம் உலகிற்கு செய்த உன்னத பலன்களும் இதற்கு சான்றாகும்.

மேலும் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுக்கு இஸ்லாமிய வரலாற்றின் மீது இருக்கும் ஆழமான அறிவு மற்றும் ஈமானை வலுவூட்டும் குத்பாக்கள் மற்றும் அவற்றை எடுத்துரைப்பது உலக நாடுகளின் தலைவர்களுக்கு கடிதங்கள் மூலமும் சொற்பொழிவுகள் மூலமும் உலக அமைதிக்காக இஸ்லாம் கூறும் போதனைகளை எடுத்துரைத்தல், கல்வி, தர்பிய்யத் மற்றும் தஃஸீக் மற்றும் நிர்வாகம் ஆகியவை சார்ந்த குத்பாக்களின் மூலம் ஜமாஅத் உறுப்பினர்களுக்கு தர்பிய்யத் வழங்கி பைஅத்தின் நோக்கத்தை அடைவது, வழிகாட்டல் ஆகிய இவையனைத்தும் அந்த ஆன்மிக பாலாகும். இதனைக் குறித்து தான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இறைவன் இல்ஹாம் அறிவித்தான்.

வானத்திலிருந்து அதிகமாக பால் இறங்கியுள்ளது; பாதுகாத்துக் கொள்ளுங்கள் என்று இறைவன் கூறினான். இறைவனின் முதல் தோற்றத்தின் வெளிப்பாட்டின் மூலமாக இறைவனின் இந்த கருணை இறங்கியது. அதன் பின் தோன்றிய கலீஃபாக்களிடமிருந்தும் இந்த அருள் இறங்கிய வண்ணம் உள்ளது.

மதிப்பிற்குரியவர்களே! இறை வல்லமையின் முதல் தோற்றமாகிய வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) மற்றும் இறைவனின் இரண்டாவது வல்லமையாகிய கிலஃபத்தின் காலத்திலும் இரவு பகலாக பொழிந்து கொண்டிருக்கும் இறைவனின் தூய ஆவி நமது ஆன்மிக மற்றும் பௌதீக வாழ்வுக்கு மிகவும் இன்றியமையாததாக இறைவன் ஆக்கியுள்ளான். மேலும் அல்லாஹ்வும் அவனது தூதரும் உங்களுக்கு உயிர் கொடுப்பதற்காக அதாவது ஆன்மிக உயிர் கொடுப்பதற்காக அழைத்தால் அதற்கு செவிசாய்க்கவும் அதற்கு பதிலுரைக்கவும் அறிவுரை வழங்கியுள்ளான்.

அவர்களின் கருத்துகளுக்கு உங்கள் உள்ளத்திலும் மூளையிலும் இடமளியுங்கள்.

இறைவன் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

தங்கள் இறைவன் கூறுவதை ஏற்றுக் கொண்டவர்களுக்கு (நிலையான) நன்மையுண்டு. மேலும் அவன் கூறுவதை ஏற்றுக் கொள்ளாதவர்கள், பூமியிலுள்ளவை அனைத்தும் இன்னும் அவற்றிற்கு சமமானவையும் அவர்களுக்கு இருந்து, அவர்கள் அப்பொருள்களை எல்லாம் தங்களுக்கு ஈடாகக் கொடுத்தாலும், அவர்களுக்குத் தீய (முடிவைக் கொண்ட) கேள்விக் கணக்கு உள்ளது. (13: 19)

இந்தத் தீய முடிவு அவர்களை மட்டும் பின்தொடர்வதில்லை. மாறாக, அவர்களின் சந்ததிகளையும் பின் தொடரும்.

காலத்தின் கலீஃபாவின் கட்டளையைக் கேட்பதும், அதனை கேட்பதற்காக நிம்மதியிழந்தவாறு இருப்பதும்

ஒவ்வொரு நம்பிக்கையாளரின் நடைமுறையாகும். இறுதியில் இந்த நடைமுறை நிரந்தர மகிழ்ச்சிக்கும், நிரந்தர மனஅமைதி தரும் வாழ்வுக்கும் வாரிசாக்குகின்றது. இதன் மூலம் நம்பிக்கையாளரின் வருங்கால சந்ததிகளும் பயனடைந்து கொண்டே செல்கின்றனர்.

காலத்தின் கலீஃபாவின் கட்டளைகளை கேட்பது தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் கூற்றை நாம் எப்போதும் நினைவில் வைத்திருக்க வேண்டும்.

அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: இறைவன் யாரை கிலாஃபத்திற்காக நிறுத்துகின்றானோ அவருக்கு காலத்திற்கு ஏற்ப பல அறிவுகளையும் அவருக்கு தன் பண்புகளையும் வழங்குகின்றான். (அல் ஃபுர்கான் இதழ், மே ஜுன் 1967, குத்பாத்தே மஸ்ரூர் தொகுதி 1)

கலீஃபாவின் வாயிலிருந்து ஏதாவது சொல் வெளிவந்து விட்டால் அப்போதே மற்றெல்லா திட்டங்களையும் அனைத்து ஆலோசனைகளையும் பரிசீலனைகளையும் தூக்கி வீசிவிட வேண்டும் என்பது தான் கிலாஃபத் என்பதற்கு அர்த்தமே ஆகும். இனி காலத்தின் கலீஃபாக்களிடமிருந்து கட்டளையாக கிடைத்த திட்டமும், தீர்மானமும் தான் பயனுள்ளதாக இருக்கும் என்று நம்பிக்கை கொள்ள வேண்டும். ஜமாஅத்தில் இந்த ஆன்மா உருவாகாத வரை அனைத்து குத்பாக்களும் வீண். எல்லாத் திட்டங்களும் வீண். எல்லா ஆலோசனைகளும் தோல்வியே.

(குத்பா ஜுமுஆ ஜனவரி 24, 1936)

காலத்தின் கலீஃபாவின் கட்டளைகள் நம்பிக்கையாளர்களின் உயிராகும். அவற்றுக்கு செவிமடுப்பதும் அதன்படி செயல்படுவதுமே அவர்களின் வாழ்க்கையாகும். இதன் மூலமே அவர்களுக்கு நிரந்தர மகிழ்ச்சிகரமான வாழ்வு கிடைக்கின்றது.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இந்தியாவைச் சேர்ந்த நமக்கு நான்கு முக்கிய அம்சங்கள் அடங்கிய திட்டத்தை செயல்படுத்துமாறு கட்டளை வழங்கியுள்ளார்கள். நாம் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் ஜுமுஆ குத்பாக்களை நேரடி ஒளிபரப்பு மூலம் கேட்பது மட்டுமின்றி நமது பிள்ளைகளையும் கேட்கச் செய்ய வேண்டும் என்பது அதில் ஓர் அம்சமாகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இல்ஹாமில் உள்ளதற்கு ஏற்ப ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் குத்பாக்கள் அல்லாஹ் வானத்திலிருந்து இறக்கிய பால் ஆகும். அல்ஹம்துலில்லாஹ். இந்த ஆன்மிக பால் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நம்பிக்கையாளர்களின் வீடுகளில் இறங்குகின்றது. இது தொடர்பாக ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார்கள்:

தொலை தூரத்தில் இருந்தாலும் கூட MTA-வின் மூலம் ஜமாஅத் மற்றும் கிலாஃபத்தின் தொடர்பை இணைத்து வைத்துள்ளது என்பது அல்லாஹ்வின் கருணையாகும். எனவே எனது குத்பாக்களையும் எனது பல்வேறு நிகழ்ச்சிகளையும் கண்டிப்பாக கேளுங்கள். சில பொறுப்பாளர்கள் கூட குத்பாக்களை ஒழுங்காக கேட்பதில்லை என்று நான் ஆய்வு செய்ததில் தெரிய வருகின்றது. இந்த குத்பாக்களை நான் காலத்தின் தேவைக்கு ஏற்ப கொடுக்க முயற்சி செய்கின்றேன். எனவே உங்களை இத்துடன் கண்டிப்பாக இணைத்துக் கொள்ளுங்கள். இதனால் உலகம் முழுவதும் அஹ்மதிய்யத்தின் போதனைகளில் இருக்கும் ஒற்றுமை முழு உலகிற்கும் தெரியட்டும். (குத்பா ஜுமுஆ, செப்டம்பர் 27, 2013)

இந்த குத்பாக்களில் தர்பிய்யத் மற்றும் நல்லொழுக்க அம்சங்கள் உள்ளன. இவற்றில் இறை வணக்கம் செய்யும் வழிமுறைகள் கற்பிக்கப்படுகின்றன. இறை வணக்கத்தில் நிரந்தரத் தன்மை உருவாக்க அறிவுரை வழங்கப்படுகின்றது. பள்ளிவாசல்களின் முக்கியத்துவம், ஆணவத்திலிருந்து தவிர்ந்திருத்தல், மென்மையை கடைபிடித்தல், விருந்து உபசரிப்பின் வழிமுறைகள், பொறுமையை கைகொள்வதன் பயன்கள், இறைவனை நம்பியிருப்பதை சரியாக புரிந்து கொள்ளுதல், அமைதி, நல்லிணக்கம் மற்றும் சகோதரத்துவம் சார்ந்த இஸ்லாமிய போதனைகள், கிலாஃபத்தின் மதிப்பும், அதன் அருட்களும், பைஅத்தின் நோக்கங்கள். கட்டுப்படுதலின் அருட்கள், பொருள் தியாகத்தின் முக்கியத்துவமும் அதன் பலன்களும், அன்பு, நேசம் மற்றும் ஒற்றுமையுடன் வாழ்வதற்கான போதனை, இறைப் பண்புகளை குறித்த அறிவுப்பூர்வமான உரைகள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் மீது செய்யப்படும் ஆட்சேபனைகளுக்கு பதில்கள், அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கொள்கை கோட்பாடுகள், சோதனைகளின்போது அஹ்மதிய்யா ஜமாஅத் காட்டி வரும் சிறந்த செயல்பூர்வமான முன்மாதிரிகள், அல்லாஹ்வின் பால் மக்களை அழைக்கும் வழிமுறைகள், உலகளாவிய அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உயிர் மற்றும் பொருள் தியாகங்களின் ஈமானை வலுவூட்டும் சம்பவங்கள், உலகம் முழுவதும் நடக்கின்ற ஆண்டு மாநாடுகளின் சம்பவங்கள், ஜமாஅத்தின் நிர்வாக அமைப்பை பற்றிய விரிவான குத்பாக்கள், பொறுப்பாளர்களுக்கு அறிவுரைகள், துஆவின் முக்கியத்துவம் மற்றும் அதன் பலன்கள் போன்றவை இதற்கு சான்றுகளாகும்.

ஜுமுஆ குத்பாக்கள் தவிர அவர்களின் பிற சொற்பொழிவுகளின் வடிவிலும் இந்த ஆன்மிக பால் இறங்குகின்றது. இதில் அவர்கள் நம்மவர்களுக்கும், மற்றவர்களுக்கும் சரிசமமாக இஸ்லாத்தின் பலன்களை வழங்குகின்றார்கள். இந்த சொற்பொழிவுகளின் வரிசையில் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் பல்வேறு நாடுகளின் அரசியல் தலைவர்களுக்கும், பிரபலங்களுக்கும் வழங்கிய உரைகளும் அடங்கும். இந்த சொற்பொழிவுகளில் அவர்கள் உலகத்தில் அமைதியை நிலைநாட்டுவதற்கும், ஒற்றுமையை உருவாக்குவதற்கான இஸ்லாமிய வழிமுறைகளும் நீதியை நிலைநாட்டுவதற்கான அழகிய இஸ்லாமிய போதனைகள் போன்றவற்றை எடுத்துரைத்துள்ளார்கள். இந்த குத்பாக்கள் பிறருக்கு பலனளிக்கின்றது போன்றே அஹ்மதிகளாகிய நமக்கும் முக்கியமாகும். இவற்றை ஆழமாக படித்து பிறருக்கும் எடுத்துச் சொல்ல முயற்சி செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) கூறுகின்றார்கள்:

இறைவனுக்கு கிலாஃபத்துடன் ஒரு தொடர்பு இருக்கின்றது. அறிவுகளின் ஆன்மாவை இறைவன் கலீஃபாக்களுக்கு வழங்குகின்றான். காலத்தின் சூழ்நிலைக்கு ஏற்ப கலீஃபாக்களுக்கு எச்சரிக்கை செய்கின்றான். கலீஃபாக்கள் முழு உலகத்தின் தேவையையும் பார்க்கின்றார்கள். எந்த அறிவுகளின் விளக்கம் தேவைப்படுகிறதோ இறைவன் அதை கலீஃபாக்களுக்கு வழங்கி விடுகின்றான். இறைவன் தன் கலீஃபாக்களுக்கு ஒளியை வழங்குகின்றான். அதுபோன்ற அறிவை எந்த ஒரு துறையிலும் எவ்வளவுதான் சிறந்த அறிவாளியாக இருந்தாலும் அதுபோன்ற அறிவை வேறு யாருக்கும் ஒருபோதும் கிடைக்கவே கிடைக்காது. இது அல்லாஹ்வின் அருள் கொடையாகும். அல்லாஹ்வுக்கு தன்னுடைய மார்க்கத்தின் தேவை நன்றாகத் தெரியும். ஒரு வேலையை அவன் யாரிடம் ஒப்படைக்கின்றானோ அவருக்கு அதன் தேவைகளையும் வெளிச்சமிட்டுக் காட்டுகின்றான். (ஜுமுஆ குத்பா, 26, பிப்ரவரி 1988)

காலத்தின் கலீஃபாவுக்கு இறைவன் மார்க்கப் பணிகளைப் பற்றி புரிய வைக்கின்றான். அவற்றை பிறருக்கு எடுத்துரைக்கும் தன்மைகளையும் வழங்குகின்றான். இதில் இருக்கின்ற அளவுக்கு ஆழமான உண்மை வேறு எதிலும் இருப்பதில்லை. இதில் நல்ல விளைவுகள் ஏற்படுகின்றன.

ஒவ்வொரு காலத்தின் கலீஃபாவிடமும் அந்தந்த காலத்தின் சூழ்நிலைக்கு ஏற்ப வழங்கப்படும் அறிவுரை கண்டிப்பாக மற்ற எல்லா அறிவுரைகளையும் விடவும் நிச்சயமாக சிறந்த தாக்கத்தை விளைவிக்கக் கூடியதாக இருக்கும். இறைவனுக்கு அந்த கலீஃபாவுடன் இருக்கும் தொடர்பின் காரணமாகவும் இறைவன் அந்த கலீஃபாவிடம் சுமத்தியுள்ள பொறுப்புகளின் காரணமாகவும் அவனே அதற்கான ஒளியையும் வழங்குகின்றான். (ஜுமுஆ குத்பா 5, நவம்பர் 1991)

இந்த சந்தர்ப்பத்தில் நான் மற்றொன்றையும் கூறிக் கொள்கிறேன்.

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் ஜுமுஆ குத்பாக்களும், சொற்பொழிவுகளும் மட்டும் அஹ்மதிகளாகிய நமக்கு முக்கியத்துவம் வாய்ந்ததல்ல. மாறாக, அவர்களின் மஜ்லிஸே இர்ஃபான் மற்றும் அவர்கள் நிகழ்த்துகின்ற பிற உரையாடல்கள் மற்றும் பல்வேறு கேள்விகளுக்கு அவர்கள் வழங்குகின்ற பதில்களும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். இவற்றின் மூலம் நாம் நமது தனிநபர் மற்றும் ஜமாஅத்தின் தர்பிய்யத்திற்கான பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக பலன் பெற முடிகின்றது. தஃவத்தே இலல்லாஹ் சார்ந்த கருத்துகளை மஜ்லிஸே இர்ஃபானில் கேட்டு அதனை குறிப்பு எடுத்து, சிந்தித்து செயல்பட்டும், உலக மக்களுக்கு முன் எடுத்து வைத்தும் வருவது அஹ்மதிகளாகிய நமக்கு மிகவும் அவசியமாகும்.

இந்த மஜ்லிஸே இர்ஃபான் அவைகளில் தொழுகை, நோன்பு போன்றவற்றின் முக்கியத்துவம், இமாமுக்குக் கட்டுப்படுவதின் முக்கியத்துவம், பொருள் தியாகத்தின் பரக்கத்துகள் இன்னும் மார்க்கத்தின் பிற விவரங்களைப் பற்றிய மிகவும் தெளிவான விளக்கங்கள் நமக்கு கிடைக்கின்றன. காலத்தின் கலீஃபாவின் மூலம் இறையடியார்களின்

உரிமைகளை நிறைவேற்றுவதன் முழு உலக அளவிலான காட்சிகளும் காணக் கிடைக்கின்றன. பின்தங்கிய அல்லது உலகளவில் கீழ்நிலையில் உள்ள சமுதாயங்களுக்கு ஆறுதல் அளிக்கவும், சமூகநீதியின் எதிர்பார்ப்புகளை கவனத்தில் கொண்டு அவர்களின் உரிமைகளை நிலைநாட்டுவதற்கான எச்சரிக்கை மற்றும் அறிவுரைகள் உலகத்தின் செவிகளைத் தட்டுகின்றன.

ஹஸ்ரத் அமீருல் மூமினீன் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் 6 ஜூன் 2014-ல் கூறினார்கள்:

இறையடியார்களின் உரிமைகளை நிலைநாட்டுவதன் பால் கவனமூட்டுவதும் கிலாஃபத்தின் நோக்கங்களும் ஒன்றாகும். இந்த உரிமைகளை அங்கீகரிக்கச் செய்வதும் அவற்றை நிலைநாட்டுவதும் அனைவரும் ஒற்றுமையாக இருந்து அந்த உரிமைகளை நிறைவேற்ற முயற்சி செய்து வருவதும் கிலாஃபத்தின் நோக்கங்களும் ஒன்றாகும்.

அன்பிற்குரியவர்களே, நம்பிக்கைக்கு வலுவூட்டுகின்ற ஓர் உண்மையை நான் இப்போது எடுத்துரைக்கின்றேன்;

காலத்தின் கலீஃபாவின் குத்பாக்கள் மற்றும் சொற்பொழிவுகள் உலகில் அனைவருக்கும் சமமாக தம் பலன்களை பொழிந்து கொண்டிருக்கின்றன. அத்துடன் இந்த காலத்தில் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் தூய போதனைகள் தான் உலகம் முழுவதையும் ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தின் ஒரே சரடில் பிணைத்து வைத்திருக்கின்றது.

சற்று சிந்தித்துப் பாருங்கள்! ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் உலகம் முழுவதும் அனைத்து நாடுகள் மற்றும் அதில் வசிக்கும் அனைத்து கருப்பர்கள், வெள்ளையர்கள், பணக்காரர்கள், ஏழைகள், வெவ்வேறு மொழிகள் பேசுபவர்கள், வெவ்வேறு கலாச்சாரத்தை கடைபிடிப்பவர்கள், படித்தவர்கள், படிக்காதவர்கள் என அனைவரும் சரிசமமாக ஒரே நேரத்தில் அல்லாஹ்வின் கலீஃபாவுடைய குத்பாவை காது கொடுத்துக் கேட்பதற்காக அமர்கின்றார்கள். இவ்வாறு முழு உலக அளவில் ஓர் ஒற்றுமை மற்றும் சமத்துவத்தின் வியக்க வைக்கும் காட்சி உலகத்தில் தென்படுகின்றது. சூரியன் கிழக்கில் தோன்றி மேற்கில் மறையும் வரை மேலும் இரவு இருட்டும் நேரம் வரை உலகம் முழுவதிலும் குத்பா கேட்கப்படுகின்றது. சற்று சிந்தித்துப் பாருங்கள்! அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கலீஃபாவைத் தவிர வேறு யாருடைய குரலுக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்ற உணர்வுடன் முழு உலகிலும் ஒரே நேரத்தில் கேட்கப்படுகிறது? இது ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) மற்றும் அஹ்மதிய்யா கிலாஃபத்தின் உண்மைத்துவத்திற்கான மகத்துவம் வாய்ந்த சான்றாகும். உலகில் வேறு எங்காவது இப்படியொரு முன்னுதாரணம் யாருக்கும் கிடைத்தால் அதை முன்வைத்தவாறு நாம் அறைகூவல் விடுக்கின்றோம். ஆனால், யாரும் இதற்கு ஓர் உதாரணத்தை கூட காட்ட முடியாது என்பதையும் நாம் அறைகூவலாக கூறிக் கொள்கிறோம்.

இது தவிர, நம்பிக்கையை வலுவூட்டும் மற்றோர் உண்மையும் உண்டு. இன்றைய நாளுக்கு முன் இது வரை உலக வரலாறு கண்டிராத உண்மை. உலகம் முழுவதும் அஹ்மதிய்யா பள்ளிவாசல்களில் ஒவ்வொரு வாரமும் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் முந்தைய வார ஜுமுஆ குத்பாவின் சுருக்கமும் வாசிக்கப்படுகின்றது. முழு உலகிலும் உள்ள அஹ்மதிய்யா பள்ளிவாசல்களில் கிழக்கிலும், மேற்கிலும் கருப்பரும், வெள்ளையரும் எல்லா நாடுகளிலும் வசிக்கும் அஹ்மதிகள் தத்தமது பள்ளிவாசல்களிலும் மிஷன் ஹவுஸ்களிலும் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் முந்தைய ஜுமுஆ குத்பாவை அனைவரும் ஒன்றாக செவிமடுத்து கேட்கின்றனர். இந்த குத்பாக்களைக் கேட்டு அஹ்மதிகள் அதன்படி செயல்பட முற்படுகின்றபோது இந்த உலகளாவிய சக்தியில் காலத்தின் கலீஃபாவுடைய துஆவும் இறைவனின் பேருதவியும் இதற்கு ஆதரவளிக்கின்றன. பலவீனமாக இருந்தும் ஒவ்வொரு மைதானத்திலும் இவ்வுலகம் பரக்கத்துகளையும் வெற்றிகளையும் பார்க்கின்றது. இதற்கு முன்னர் இவ்வுலகம் இப்படி ஓர் உலக ஒற்றுமையின் காட்சிகளைப் பார்த்ததுண்டா? இஸ்லாமிய உலகிற்கும் இஸ்லாம் அல்லாத உலகிற்கும் இப்படி ஓர் உலகளாவிய அழகும் ஒற்றுமையும் காணக் கிடைத்திருக்கின்றதா? கிடைக்கவில்லை என்றால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த பாதுகாப்பு அரணை நோக்கி விரைந்து வாருங்கள்!

உண்மையுடன் என் அருகில் வாருங்கள். இதில்தான் நன்மை இருக்கிறது.

எல்லா பக்கங்களிலும் விலங்குகள் இருக்கின்றன. நான் பாதுகாப்பு அரண் ஆவேன்.

இந்த குத்பாக்கள் மற்றும் சொற்பொழிவுகளால் உலகம் முழுவதும் உள்ள இலட்சக்கணக்கான மக்கள் இஸ்லாத்தின் அமைதி நிறைந்த போதனைகளை ஏற்றுக் கொண்டுள்ளனர். இவர்களைப் பற்றிய நம்பிக்கையை வலுவூட்டும் நற்குறிப்புகள் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் குத்பாக்களிலும் ஜமாஅத்தின் இதழ்களிலும் காணப்படுகின்றன.

உண்மையின் இந்த ஆன்மிக குரலை செவிமடுக்கின்ற நற்பாக்கியம் நமக்கு கிடைத்திருக்கின்றது என்ற வகையில் அஹ்மதிகளாகிய நாம் மிகவும் நற்பேறு பெற்றவர்களாக இருக்கின்றோம். இறைவன் காலத்தின் கலீஃபாவின் மூலம் நம்மை ஓர் உலகளாவிய சமுதாயமாக ஆக்கியிருக்கின்றான். இறைவன் நமக்கு காலத்தின் கலீஃபாவின் மூலம் ஆன்மிக மற்றும் பௌதீக அறிவுகளால் நிரப்பியுள்ளான். காலத்தின் கலீஃபாவின் அருளால் உலகிற்கு இஸ்லாத்தின் அமைதி தரும் போதனைகளை கற்பித்துள்ளான். பிறரையும் அதன் அருகில் கொண்டு வருவதற்கான நல்வாய்ப்பையும் வழங்கியுள்ளான். ஆகவே இந்த அருட்கொடையை மதிப்பதும் இந்த கட்டளைகளை நுட்பமாக கவனிப்பதும் அதன்படி செயல்படுவதும் மேலும் நமது அடுத்த தலைமுறையை இதன்படி செயல்படுவதற்காக ஆயத்தமாக்குவதும் மிக அவசியமாகும்.

ஹஸ்ரத் அமீருல் மூமினீன் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்:

இன்றைய நாட்களில் கிலாஃபத்துடன் உள்ள தொடர்புக்காக அல்லாஹ் நமக்கு MTA-வையும் ஓர் ஊடகமாக ஆக்கியுள்ளான். இவ்வாறே அல் இஸ்லாம் வலைதளமும் இருக்கின்றது. இவற்றுடனும் இணைந்திருப்பதற்கான அவசியம் உள்ளது. ஒவ்வோர் அஹ்மதி இளைஞரையும், ஆணையும், பெண்ணையும் இவற்றுடன் இணைக்க முயற்சி செய்ய வேண்டும். ஜமாஅத் அமைப்பும் கிளை அமைப்பும் இதற்காக முயற்சி செய்ய வேண்டும். (அல்ஃபஸ்ல், இன்டர் நேஷனல் 30 ஆகஸ்ட், 2013)

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) கூறுகின்றார்கள்:

நம்மிடம் எந்த அளவு தூய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன? எந்த அளவுக்கு நாம் நமது குழந்தைகளையும் ஜமாஅத்துடன் இணைத்து வைக்க முயற்சி செய்கின்றோம்? எந்தளவு நாம் திருக்குர்ஆனின் போதனைகளின்படி செயல்படுகின்றோம்? இவர்கள் நம்மை விட நல்ல முஸ்லிம்கள் என்று நம்மைக் குறித்து பிறரும் உயர்வாக உணரும் அளவுக்கு திருக்குர்ஆனின்படி செயல்படுகின்றோம்? இஸ்லாத்தின் எதிரிகள் நம்மைப் பார்த்து இஸ்லாத்தின் பக்கம் ஈர்க்கப்படுகின்ற வகையில் நமது முன்மாதிரி இருக்கின்றதா? என்று நாம் நம்மை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். நாம் இந்த இலக்குகளை அடைந்து கொண்டிருக்கின்றோம் என்றால் இன்ஷா அல்லாஹ் இவை நாம் இறைவனின் நெருக்கத்தைப் பெற காரணமாக அமைகின்ற அதேவேளையில் நம்மை எண்ணிக்கையிலும் அதிகரிக்கக் காரணமாக அமையும். மேலும் ஜமாஅத்திற்கு எதிரான வன்முறைகள் எல்லாம் ஒருநாள் காற்றில் பறந்து விடும். அல்லாஹ் தஆலா உங்கள் அனைவருக்கும் மேலும் எனக்கும் ஈமானிலும் உறுதியான நம்பிக்கையிலும் வளர்ச்சியை வழங்குவானாக. ஒவ்வொரு நொடியும் உங்களை தன் பாதுகாப்பில் வைப்பானாக. மேலும் எதிரிகளின் ஒவ்வொரு திட்டத்தையும் மண்ணோடு மண்ணாக்குவானாக. (ஜுமுஆ குத்பா, டிசம்பர் 24, 2013)

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ் ) அவர்களின் அனைத்து கட்டளைகளையும் கவனமாக கேட்டு அதன்படி நாமும், நமது சந்ததிகளையும், சந்ததிகளின் சந்ததிகளையும் செயல்பட்டு வர வலியுறுத்திக் கொண்டே இருப்பதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக. ஆமீன்.

தமிழாக்கம் மவ்லவி அப்துல் காதிர்

* * * * *



Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com
my grizzly india
my grizzly india
my grizzly india

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஞானம் நிறைந்த மேற்கோள்களின் ஒளியில் துஆ மற்றும் அது ஒப்புக் கொள்ளப்படுதலின் நுட்பமான ஞானம் மற்றும் தத்துவம்**

**துஆ இறையிருப்பிற்கான வலிமையான சான்றாகும் (ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள்)**

**துஆ என்பது இறைவனிடமிருந்து வருகின்றது. மேலும் இறைவன் பக்கமே செல்கின்றது.**
**(ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள்)**
**துஆ ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது என்பதையும் மேலும் இறைவன் திருப்தி அடைந்துள்ளான் என்பதையும் எவ்வாறு அறிந்து கொள்வது? என்று பெரும்பாலான மக்கள் கேட்கின்றனர். அவர்களுக்கான பதில் இதுவே ஆகும். அதாவது அந்நிலையில் தூய மாற்றம் உருவாகி விடும்.**
**துஆ ஓர் உறுதிப்பாட்டையும், நிரந்தர மனப்பான்மையையும் விரும்புகின்றது.**
**(ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள்)**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 29 மார்ச் 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு **அமான்** மாதம் **29 ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○
وَإِذَا سَأَلَكَ عِبَادِي عَنِّي فَإِنِّي قَرِيبٌ
أُجِيبُ دَعْوَةَ الدَّاعِ إِذَا دَعَانِ
فَلْيَسْتَجِيبُوا لِي وَلْيُؤْمِنُوا بِي لَعَلَّهُمْ يَرْشُدُونَ

என் அடியார்கள் உம்மிடம் என்னைப் பற்றிக் கேட்டால், நான் அருகில் இருக்கின்றேன்; துஆ செய்கின்றவர் என்னை அழைக்கின்றபோது நான் அவருடைய துஆவுக்கு பதில் அளிக்கின்றேன். எனவே அவர்களும் என் கட்டளைக்கு செவிசாய்த்தவாறு என் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும். இதனால் அவர்கள் நேர்வழி பெறுவார்கள் (என்று பதில் அளிப்பீராக).

எல்லாம் வல்ல அல்லாஹ் இந்த வசனத்தை நோன்பின் கட்டளைகளுடன் சேர்த்து வைத்துள்ளான். நடுவில் வைத்துள்ளான் என்றே கூறலாம். ரமலானுடனும், நோன்புகளுடனும் துஆக்களுக்கு ஒரு சிறப்பான தொடர்பு உள்ளது என்பது இதிலிருந்து தெரிய வருகின்றது. ரமலானுக்கும், துஆக்களுக்கும் ஒரு சிறப்பான தொடர்பு உள்ளது என்பதை ஒவ்வொரு முஸ்லிமும் மிக நன்றாக அறிவார். அதனால்தான் ரமலானில் குறிப்பாக தொழுகைகள், நஃபில்கள், தஹஜ்ஜுத் மற்றும் தராவீஹ் ஆகியவற்றின் பக்கம் சிறப்பான கவனம் ஏற்படுகின்றது.

இந்த நாட்களில் இறைவனின் சிறப்பான அன்பான பார்வை தன்னுடைய அடியார்கள் மீது இருக்கிறது என்ற இந்த உணர்வு ஒவ்வோர் உண்மையான முஸ்லிமுக்கும் இருக்கிறது. அல்லாஹ்வோ சாதாரண நாட்களிலும் தன்னுடைய அடியார்கள் மீது அன்பான பார்வையை செலுத்துகிறான்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்: அல்லாஹ் கூறுகின்றான்: எனது அடியார் நினைப்பதற்கு ஏற்ப நான் அவருடன் நடந்து கொள்கிறேன். எப்பொழுது அடியார் என்னை நினைவு கூர்கின்றாரோ அப்பொழுது நான் அவருடன் இருக்கின்றேன். அவர் என்னைத் தனது உள்ளத்தில் நினைவு கூர்ந்தால் நானும் அவரை எனது உள்ளத்தில் நினைவு கூர்கின்றேன்.

அவர் என்னை சபையில் நினைவு கூர்ந்தால் நானும் அவரை சபையில் நினைவு கூர்கின்றேன். அவர் என் பக்கம் ஒரு ஜான் அளவுக்கு வந்தால் நான் அவர் பக்கம் ஒரு முழம் அளவிற்கு செல்வேன். அவர் என் பக்கம் ஒரு முழம் அளவிற்கு வந்தால் நான் அவர் பக்கம் இரண்டு முழம் அளவுக்கு செல்வேன். அவர் என் பக்கம் நடந்து வந்தால் நான் அவர் பக்கம் ஓடி வருவேன்.

எனவே அல்லாஹ்வோ சாதாரண நிலைகளிலும் அடியாருடன் இவ்வாறு நடந்து கொள்கிறான். அல்லாஹ்வின் பக்கம் முன்னேறுவதற்காகவே சிறப்பாக இருக்கக் கூடிய மாதமான ரமலான் மாதம் இருக்கும்போது, முழு சூழலுமே மனிதன் அல்லாஹ்வின் நினைவு கூரக்கூடியவனாக இருக்கும் நிலையில் ஆக்கி விடுகின்றது. பிறகு அல்லாஹ் எந்த அளவுக்கு கருணையாளனாக இருப்பான் என்பதை நாம் கணித்துக் கூட பார்க்க முடியாது.

ஆனால், இந்த அனைத்து விஷயங்களும் உள்ளத்தின் ஆழத்திலிருந்து இருக்க வேண்டும்; ஈமான் உறுதியாக இருந்தவாறு இருக்க வேண்டும் என்பது நிபந்தனையாகும். அதுவன்றி மேலோட்டமாக இருக்கக் கூடாது. பிறகு அல்லாஹ் தன்னுடைய அடியார்கள் மீது கருணை புரிவதற்கான உதாரணத்தை வழங்கியவாறு ஒரு சந்தர்பத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள இவ்வாறு கூறினார்கள்:

அல்லாஹ் மிகவும் நாணமுள்ளவன் ஆவான். பெரும் கருணையாளனும், வள்ளலும் ஆவான். அடியார் அவனுக்கு முன்னால் இரண்டு கைகளையும் ஏந்தும் பொழுது, அவன் அவற்றை காலியாகவும், தோல்வி அடைந்தவையாகவும் திருப்பி அனுப்புவதற்கு வெட்கப்படுகின்றான். உண்மையான உள்ளத்தோடு கேட்கப்பட்ட துஆவை அவன் மறுப்பதில்லை ; ஏற்றுக் கொள்கின்றான்.

உண்மையான உள்ளத்தோடு மனிதன் கேட்கும்பொழுதும், கை ஏந்தப்படும் பொழுதும்தான் இந்த நிலை கிடைக்கப்பெறுகின்றது. உண்மையான உள்ளத்தோடு கேட்பதற்கு கடந்த பாவங்களில் இருந்து முழுமையாக தவிர்ந்திருந்து, உண்மையான தவ்பாவிற்கான உறுதி எடுத்துக் கொண்டு அல்லாஹ்வின் பக்கம் வருவது அவசியமாகும்.

எனவே நாம் சிலவேளை அவசரப்பட்டு நாங்கள் துஆ செய்தோம்; அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்று கூறிவிடுகின்றோம். ஆனால், எந்த அளவு உண்மையான உள்ளம் இருக்கின்றது? எந்த அளவு உண்மையுடன் அல்லாஹ்வின் மீதான அன்பில் நாம் முன்னேறுகின்றோம்? எந்த அளவு உண்மையுடன் நாம் முந்தைய பாவங்களுக்காக பாவமன்னிப்பு கோரியவாறு, இனி பாவங்களில் இருந்து தப்பிப்பதற்கும் அல்லாஹ் கூறியுள்ள வழிகளில் செல்வதற்கான உறுதியும் எடுத்துக் கொள்கின்றோம் என்று நாம் நமது நிலையை பார்ப்பதில்லை.

அல்லாஹ்வை ஏமாற்ற முடியாது. அவனோ நமது உள்ளத்தின் நிலையை அறிகின்றான். நம்முடைய அதல பாதாளம் வரை அறிந்திருக்கின்றான். எனவே அல்லாஹ்வின் அருட்களை ஈர்ப்பதற்கு திறந்துள்ள அவனுடைய வாசலில் நுழைவதற்கு அதற்கு அவசியமான விஷயங்களையும் முழுமைப்படுத்த வேண்டும். அடியார் மீது அல்லாஹ்வின் கருணையும், பரிவும் எந்த அளவு இருக்கின்றது? என்றால் ஒவ்வோர் ஆண்டும் குறிப்பாக ரமலானில் நம்மை கொண்டு வந்து சாதாரண நாட்களில் ஏதாவது மறதி ஏற்பட்டு விட்டதென்றால், இப்பொழுது இந்த மாதத்தின் அருட்களில் இருந்து பலனடைந்தவாறு என் பக்கம் வாருங்கள்;

---

*திருக்குர்ஆனிலிருந்து...*

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

என்னுடைய அடியார்களில் இணைந்து விடுங்கள் என்று சந்தர்ப்பம் வழங்குகின்றான்.

அல்லாஹ் குறிப்பாக இந்த நாட்களில் தன்னுடைய அடியார்கள் மீது அன்பான பார்வையை செலுத்த விரும்புகின்றான். வழிமாறிப் போனவர்களை நேர்வழிக்குக் கொண்டு வர விரும்புகின்றான். குறிப்பான சூழலால் அடியார்களின் இறை வணக்கங்களின் தரத்தை உயர்த்த விரும்புகின்றான். இந்த வசனத்தில் என்னுடைய அடியார்கள் என்று கூறி இருக்கும்போது, அந்த அடியார்கள் என்பது உண்மையில் அல்லாஹ்வின் அடியார்களாக ஆக விரும்பக் கூடிய உண்மையான தவ்பா செய்ய விரும்பக் கூடிய மற்றும் செய்கின்ற அந்த மக்களைக் குறிக்கின்றது.

எனவே இந்த உண்மையான அடியாராக ஆகுவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். ரமலானில் இந்த நெருக்கத்தைப் பெறுவதற்கும் உண்மையான அடியார் ஆகுவதற்கும் சிறப்பான சூழல் கிடைக்கப் பெற்றிருக்கின்றது. அல்லாஹ்வின் மீதான அன்பில் நாம் முன்னேற முயற்சி செய்தால் தான் நம்மால் அவனுடைய உண்மையான அடியார்களாக ஆக முடியும். இந்த நிலை ஏற்படும்பொழுது பிறகு அல்லாஹ் கூறுகின்றான்:

என்னுடைய இப்படிப்பட்ட அடியார்கள் மற்றும் என்னை நேசிக்கக் கூடியவர்களுக்கு நான் அவர்களுடைய துஆக்களைக் கேட்கவும் செய்கின்றேன்; பதிலும் அளிக்கின்றேன் என்று கூறிவிடுவீராக.

எனவே நம்முடைய துஆக்கள் வெறும் நம்முடைய சுய நோக்கங்களுக்காக மட்டும் இருக்கக் கூடாது. மாறாக, அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்காகவும், அவனுடைய அன்பைப் பெறுவதற்காகவும் இருக்க வேண்டும். அல்லாஹ்வின் அன்பைப் பெறுவதற்காக நாம் அவன் பக்கம் ஒரு ஜான் அளவுக்கு ஒரு முழம் அளவுக்கு மற்றும் வேமாக நடந்து செல்லக்கூடியவர்களாக ஆகும்போது, பிறகு அல்லாஹ் நம் பக்கம் இதை விட அதிகமாக கவனம் செலுத்துவான். நமக்கு உதவி செய்ய ஓடி வருவான். துஆக்களைக் கேட்பான்.

ஆனால் அல்லாஹ் தெளிவாக இவ்வாறு கூறிவிட்டான்: வெறும் வாயளவிலான வாதங்கள் உங்களுக்கு இந்தத் தரத்தை அளித்திராது. அவ்வாறு இல்லை ; மாறாக நீங்கள் நான் கூறுபவற்றைக் கேட்க வேண்டும். என்னுடைய கட்டளைகள்படி அமல் செய்ய வேண்டும். அல்லாஹ்வுக்கான உரிமைகள் மற்றும் அடியார்களுக்கான உரிமைகளை நிறைவேற்ற வேண்டும். பிறகு அத்துடன் ஈமானில் உறுதித் தன்மையையும் உருவாக்க வேண்டும். அது ஒருபோதும் ஆட்டம் காணாத ஈமானாக இருக்க வேண்டும்.

இது இருக்கும் பொழுதுதான் என்னுடைய அடியார்களில் உண்மையான அடியார்களில் நீங்கள் கணக்கிடப்படுவீர்கள். எவர்கள் நாங்கள் பெரும் துஆ செய்தோம்; பல ஸஜ்தாக்கள் செய்தோம்; பல நஃபில்கள் தொழுதோம்; ஆனால் எங்களுடைய நோக்கம் நிறைவேறவில்லை என்று கூறுகிறார்களோ அந்த மக்கள் தம்மைத்தாமே சுய ஆய்வு செய்து கொள்ளட்டும். அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைகள் படி அமல் செய்து விட்டார்களா? அவர்கள் எந்த ஒரு சூறாவளியும் அவர்களை அசைக்க முடியாத அளவிலான இந்தத் தரம் வரை தங்களுடைய ஈமானின் எட்ட வைத்து விட்டார்களா?

பெரும்பாலும் இத்தகைய மக்களின் நிலை எப்படி இருக்கின்றது? என்றால், தம் அன்பிற்குரியவனின் ஆசைகளை நிறைவேற்றுவதற்கு பதிலாக தம்முடைய தேவைகளின் பட்டியலை முன்வைத்து விட்டு பிறகு அல்லாஹ் இவற்றை நிறைவேற்றவில்லை. பிறகு துஆக்களின் பலன் என்ன? என்று கேட்கிறார்கள். பிறகு அல்லாஹ்வின் இருப்பைப் பற்றி, துஆக்களின் நுட்பங்கள் குறித்து, துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுதல் தொடர்பாக கேள்விகள் கேட்க ஆரம்பித்து விடுகிறார்கள்.

இவை அல்லாஹ்வின் அடியார்களின் அடையாளம் அல்ல. இவை எவர்களின் கைகளை அல்லாஹ் காலியாக திருப்பி அனுப்புவதற்கு வெட்கப்படுகின்றானோ அப்படிப்பட்ட மக்களின் அடையாளமும் அல்ல. எனவே நாம் அல்லாஹ்வைப் பற்றி கேள்வி கேட்பதற்கு முன்னால், நாம் எந்த அளவு அல்லாஹ்வின் விஷயங்களை ஏற்று அதன்படி அமல் செய்கின்றோம். எந்த அளவு நாம் நம்முடைய ஈமானில் உறுதியாக இருக்கின்றோம் என்று நம்முடைய நிலைமைகளை ஆய்வு செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தம்முடைய பல்வேறு நூல்களில் இது தொடர்பாக வழிகாட்டல்கள் வழங்கியுள்ளார்கள். துஆவின் நுட்பம், அது ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான நுட்பம் மற்றும் தத்துவம் ஆகியவற்றை மிகவும் விளக்கமாக எடுத்துரைத்துள்ளார்கள். மேலும் எப்பொழுது துஆவை உண்மையான துஆ என்று கூறலாம் என்ற அந்தத் தரத்தை கூறியுள்ளார்கள். இது தொடர்பாக நான் ஹுஸுர் (அலை) அவர்களின் சில மேற்கோள்களையும் முன்வைப்பேன்.

அல்லாஹ்வின் உண்மையான அடியார்கள் யார்?

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: அல்லாஹ் கூறுகின்றான்:

இறைவனின் இருப்பிற்கான சான்றுகள் என்ன இருக்கின்றது? என்று என்னுடைய அடியார்கள் என்னைப் பற்றிக் கேட்டால் அதற்கான பதில்; நான் மிகவும் அருகில் இருக்கின்றேன் என்பதாகும். அதாவது, எந்த ஒரு பெரிய சான்றுகளின் தேவையும் இல்லை. எனது இருப்பை மிகவும் நெருக்கமான முறையில் புரிய முடியும். மிகவும் எளிமையாக எனது இருப்பிற்கு சான்று உருவாகின்றது.

அந்த சான்றாவது, துஆ செய்யக் கூடிய ஒருவர் என்னை அழைக்கும்பொழுது நான் அவருடைய துஆவைக் கேட்கின்றேன்; எனது இல்ஹாம் மூலமாக அவருடைய வெற்றிக்கான நற்செய்தியை வழங்குகின்றேன். அதன் மூலமாக எனது இருப்பின் மீது மட்டும் உறுதியான நம்பிக்கை ஏற்படுவதில்லை ; அதையும் தாண்டி, நான் வல்லமை பெற்றவனாக இருப்பதும் உறுதியான நம்பிக்கையை எட்டி விடுகின்றது. ஆனால், நான் அவர்களது குரலைக் கேட்கும் அளவுக்கு மக்கள் இறையச்சம் மற்றும் இறைவனுக்கு அஞ்சக் கூடிய நிலையை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

இது மிகவும் முக்கியமான நிபந்தனையாகும். கேட்கின்றேன்தான்; ஆனால், முதலில் இறையச்சத்திற்கான நிலையை உருவாக்கிக் கொள்ளுங்கள்; இறைவனுக்கு அஞ்சக் கூடிய நிலையை உருவாக்கிக் கொள்ளுங்கள். பிறகு நான் குரலைக் கேட்பேன். மேலும் அல்லாஹ் கூறுகின்றான்: மேலும், என் மீது ஈமான் கொள்ள வேண்டும்; இறைவன் இருக்கின்றான். அவன் எல்லா ஆற்றல்களையும், வல்லமைகளையும் கொண்டு இருக்கின்றான் என்று முழுமையான இறைஞானம் கிடைப்பதற்கு முன்னால் ஒப்புக் கொள்ள வேண்டும். அதாவது அல்லாஹ்வைப் பற்றிய இந்த முழுமையான ஞானம் கிடைத்து, துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதால் அவனுடைய அடையாளங்களும் கிடைத்து விடுவதற்கு முன்னதாக இறைவன் இருக்கின்றான் என்பதில் உறுதியான நம்பிக்கையும் ஈமானும் இருக்க வேண்டும்.

முதலில் அல்லாஹ்வின் மீது ஈமானை வலுப்படுத்துங்கள். மறைவானவற்றின் மீதான ஈமான் இருக்க வேண்டும். பிறகு அவன் எல்லா ஆற்றல்களையும், வல்லமைகளையும் கொண்டிருக்கின்றான் என்ற ஈமான் இருக்க வேண்டும். ஏனெனில், எந்த நபர் ஈமான் கொள்கிறாரோ அவருக்கு இறைவனைப் பற்றிய ஞானம் வழங்கப்படுகின்றது. ஈமான் முதலில் இருந்தால், பிறகு இறைஞானமும் கிடைக்கும். எனவே ஈமானின் உயர்தரம் இருக்கும் பொழுதுதான் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான காட்சிகளும் இருக்கும். அது இல்லாமல் ஏதோ ஒரு சோதனையால் மனிதனின் எண்ணம் சீர்கெட்டு விடக் கூடாது.

அல்லாஹ் துஆவைக் கேட்கிறேன் என்பதைத் தான் இருக்கின்றான் என்பதற்கான சான்றாகக் கூறியிருக்கின்றான். எனவே துஆ கேட்கப்படவில்லை என்றால், இரு நண்பர்களுக்குள் இருக்கக் கூடிய அந்தத் தொடர்பில் குறை இருக்கின்றது என்பது பொருளாகும். அந்தக் குறையை நிறைவு செய்வதற்கான வழியையும் இவ்வாறு கூறிவிட்டான்: தக்வாவின் நிலையை உருவாக்குங்கள்: இறைவன் இருக்கின்றான் என்ற விஷயத்தில் முழுமையான உறுதியான நம்பிக்கை இருக்க வேண்டும். மேலும் அதற்கு சாட்சி பகர வேண்டும். அவனது இருப்பில் மறைவானவற்றின் மீதான நம்பிக்கை இருக்க வேண்டும்.

பிறகு மூன்றாவது விஷயம் என்னவென்றால், அல்லாஹ் எல்லா ஆற்றல்களையும் சக்திகளையும் கொண்டுள்ளான் என்றும் அவனைத் தவிர



எல்லா ஆற்றலும் படைத்தவர் வேறு இல்லை என்றும், அவன் மீது முழுமையான உறுதியான நம்பிக்கை இருக்க வேண்டும். எனவே துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு இவை குறைந்தபட்ச தரமாகும்.

பிறகு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: என்னுடைய அடியார்கள் என்னைப் பற்றி எவ்வாறு அவனுடைய இருப்பு நிரூபணமாகிறது; இறைவன் இருக்கின்றான் என்று ஏன் புரிந்து கொள்ள வேண்டும் என்று கேள்வி கேட்டால், அதற்கான பதில் நான் மிகவும் அருகில் இருக்கின்றேன்; நான் என்னை அழைக்கக் கூடியவருக்கு பதில் அளிக்கின்றேன்.அவர் என்னை அழைக்கும் பொழுது நான் அவருடைய குரலைக் கேட்கிறேன்; அவரோடு உரையாடுகின்றேன் என்பதாகும்.

எனவே நான் அவர்களோடு உரையாடக் கூடிய வகையில் அவர்கள் தம்மை ஆக்கிக் கொள்ளட்டும். அதாவது அல்லாஹ்வுடன் உரையாடும் அளவுக்கு உங்களுடைய நிலைமைகளை முதலில் சரி செய்து கொள்ளுங்கள். மேலும், அவர்களுக்கு என்னுடைய வழி கிடைக்கும் பொருட்டு, அவர்கள் என் மீது முழுமையான உறுதியான ஈமான் கொள்ள வேண்டும். நேர்வழிக்கான பாதை அப்பொழுதுதான் கிடைக்கும். எனவே இந்த முழுமையான நம்பிக்கையை உருவாக்க வேண்டிய அவசியம் இருக்கின்றது.

முதலில் கூறப்பட்ட, நான் இப்பொழுது கூறிய அந்த வழிமுறைப்படி செயல்படுவதும், அந்த நிலைமைகளின்படி நடப்பதும் அவசியமாகும். அதாவது, ஒன்று தக்வாவின் நிலை உருவாக வேண்டும். இறைவனுக்கு அஞ்சுதல் உருவாக வேண்டும். இரண்டாவது, இறைவன் இருக்கின்றான் என்பதில் முழுமையான ஈமான் இருக்க வேண்டும். அனுபவம் இருக்கிறதோ, இல்லையோ மறைவானவற்றின் மீதான ஈமான் இருக்க வேண்டும். இறைவன் இருக்கின்றான் என்ற முழுமையான ஈமான் இருக்க வேண்டும். மூன்றாவது, அவன் முழுமையான ஆற்றல்களையும், வல்லமைகளையும் கொண்டிருக்கின்றான் என்ற விஷயத்தில் முழு நம்பிக்கை இருக்க வேண்டும்.

அது அல்லாமல், ஒரு வேலை நடக்கவில்லை என்றால், அவனுக்கு ஆற்றல் இல்லை என்று கூறுவதோ முறையிட ஆரம்பித்து விடுவதோ இருக்கக் கூடாது. அவன் முழுமையான ஆற்றல்களையும், வல்லமைகளையும் கொண்டிருக்கின்றான் என்ற விஷயத்தில் உறுதியான நம்பிக்கை இருக்க வேண்டும். எனவே துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டதன் காரணமாக அவநம்பிக்கையான விஷயங்களைப் பேசக் கூடியவர்கள் மற்றும் இறைவனின் இருப்பின் மீது சந்தேகம் கொள்ளக் கூடியவர்கள் முதலில் தங்களை சுய ஆய்வு செய்து கொள்ளட்டும்.

இந்த மூன்று நிலைகளும் அவர்களிடம் இருக்கின்றனவா? எந்த சூழ்நிலை ஏற்பட்டாலும் அவர்கள் உறுதியாக நிலைத்து நிற்பார்களா? ஈமானின் இந்த நிலையும் இருந்து, அல்லாஹ்வின் இருப்பின் மீது சந்தேகமும் இருப்பது சாத்தியமே அல்ல.

பிறகு, ஓரிடத்தில் அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: وَإِذَا سَأَلَكَ عِبَادِي عَنِّي فَإِنِّي قَرِيبٌ

அதாவது, இதன் பொருள் இதுவே ஆகும். இறைவனைப் பற்றிய ஞானத்தை எவ்வாறு பெற முடியும்? என்ற கேள்வி எழுப்பினால் இஸ்லாத்தின் இறைவன் மிகவும் அருகில் இருக்கின்றான். ஒருவர் அவனை உண்மையான உள்ளத்தோடு அழைத்தால் அவன் பதில் அளிக்கின்றான்.

மற்ற பிரிவுகளில் அதாவது மற்ற மதங்களின் கடவுள்கள் நெருக்கமாக இல்லை. மாறாக, அவர்களைப் பற்றிய தகவலே தெரியாத அளவுக்குத் தொலைவில் இருக்கின்றார்கள்.

இறை வணக்கம் செய்பவர், இறைவனை வணங்குபவரின் உயர்விலும் உயர்வான நோக்கம் அவனுடைய நெருக்கத்தைப் பெற வேண்டும் என்பதே ஆகும். ஒரு சரியான இறை வணக்கம் செய்பவரின் உயர்வான நோக்கமாக, அவருக்கு அல்லாஹ்வின் நெருக்கம் கிடைக்கப் பெற வேண்டும் என்பதுவே இருக்க வேண்டும். அவன் மீதான அன்பு உள்ளத்தில் உருவாக வேண்டும். அதனால் அவனுடைய இருப்பின் மீது உறுதியான நம்பிக்கை கிடைக்கப் பெறுகிறது. أُجِيْبُ دَعْوَةَ الدَّاعِ إِذَا دَعَانِ

என்பதற்கும் அவன் பதிலளிக்கின்றான்: ஊமை அல்ல என்பதே பொருளாகும். மற்ற அனைத்து ஆதாரங்களும் அவனுக்கு முன் ஒன்றுமற்றவையாகும். உரையாடுதல் என்பது எப்படிப்பட்ட ஒன்று என்றால், அது பார்த்தலுக்கு மாற்றாக இருக்கின்றது. எனவே உண்மையான உள்ளத்தோடு அழைப்பது அவசியமாகும். உண்மையான உள்ளத்தோடு அழைப்பது என்றால் என்ன? அவன் கூறக் கூடியதை ஏற்றுக் கொள்ள வேண்டும். அவன் மீதான ஈமான் உறுதியாக இருக்க வேண்டும். அன்னார் (அலை) கூறினார்கள்:

என்னுடைய அடியார் என்னைப் பற்றி கேள்வி கேட்டால், நான் மிகவும் அருகில் இருக்கின்றேன். நான் அழைக்கக்கூடியவர் அழைக்கும் பொழுது அவருடைய துஆவை ஏற்றுக் கொள்கிறேன்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: சில மக்கள் அவனது இருப்பின் மீது சந்தேகம் கொள்கின்றார்கள். எனவே என்னுடைய இருப்பிற்கான அடையாளம் என்னவென்றால், நீங்கள் என்னை அழையுங்கள் ; என்னிடம் துஆ கேளுங்கள். நான் உங்களை அழைப்பேன்; மேலும் பதிலளிப்பேன். மேலும் உங்களை நினைவு கூர்வேன்.

இது தொடர்பாக ஹதீஸிலும் இவ்வாறு வந்துள்ளது: அல்லாஹ் கூறுகின்றான்: நான் உங்களை நினைவு கூர்கின்றேன். நீங்கள் என்னை நினைவு கூர்கின்றீர்கள். உள்ளத்தில் அல்லது சபையில், அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: நாங்கள் அழைக்கின்றோம் ; ஆனால், அவன் பதில் அளிப்பதில்லை என்று கூறுவீர்களாயின் இந்தக் கேள்வி எழுகின்றது. முன்னரும் கூறப்பட்டு விட்டது. நாங்கள் அழைக்கின்றோம். பதில் அளிப்பதில்லை என்றால், பாருங்கள்! நீங்கள் ஓரிடத்தில் நின்று கொண்டு உங்களை விட்டு மிகவும் தூரத்தில் இருக்கக் கூடிய ஒருவரை அழைக்கின்றீர்கள் என்றால், அப்பொழுது உங்களுடைய காதில் ஏதோ குறை இருக்கின்றது. ஆக, முதல் விஷயம் என்னவென்றால், தூரத்தில் நிற்பதால் எந்த ஒரு பலனும் இல்லை. அருகில் வாருங்கள். அன்பினால் நெருக்கம் கிடைக்கின்றது. உள்ளத்தில் அல்லாஹ்வின் மீதான அத்தகைய அன்பை உருவாக்குங்கள். உங்களுடைய காதுகளில் ஏதோ குறை இருக்கின்றது. ஈமானிலும் பலவீனமும், காதுகளில் குறையை ஏற்படுத்துவதுதான். இந்த ஈமானிய பலவீனத்தை அகற்றி ஈமானை வலுப்படுத்துங்கள். பிறகு நெருக்கம் கிடைக்கும். அந்த நபரோ உங்களுடைய ஓசையை கேட்டு உங்களுக்கு பதில் அளிப்பார். அன்னார்(அலை) உதாரணத்தைக் கூறியிருக்கின்றார்கள்: நீங்கள் தூரத்திலிருந்து குரல் சென்றடைந்து விட்டது அல்லது நன்றாகவே சென்றடைந்து விட்டது என்றால், அவர் உங்களுக்கு பதில் அளிப்பார். ஆனால், அவர் தூரத்திலிருந்து பதில் கூறும் பொழுது உங்களுடைய செவிட்டுத்தனம் காரணமாக உங்களால் கேட்க முடியாது.

அல்லாஹ் பதில் அளித்து விட்டாலும், உங்களுடைய ஈமான் வலுவானதாக இல்லாத காரணத்தினாலும் உங்களுடைய அன்பில் குறை இருப்பதனாலும், அவன் கூறிய விஷயங்களின்படி நீங்கள் அமல் செய்யாததனாலும் உங்களுடைய காதுகளில் இந்த செவிட்டுத்தனம் இருப்பதனாலும், இதன் காரணமாக உங்களால் அவனுடைய ஓசையைக் கேட்க முடியாது. இப்பொழுது அல்லாஹ் பதில் அளித்து விட்டாலும், நீங்கள் எங்களுக்கு பதில் அளிக்கவில்லை என்றே கூறுவீர்கள்.

ஆனால் அவன் இவ்வாறு பதில் அளித்தான்: நீங்கள் உரத்தக் குரலைக் கேட்க வேண்டுமென்றால், உங்களுடைய நிலையை சீரமைத்துக் கொள்ளுங்கள். ஆனால், நீங்கள் செவிட்டுத்தனத்தால் அந்தக் குரலையும் கேட்பதில்லை. எனவே அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: உங்களுக்கு இடையில் உள்ள திரைகள், அந்தத் தடை மற்றும் தொலைவு அகல. அகல நீங்கள் கண்டிப்பாக ஓசையைக் கேட்பீர்கள். தக்வாவில் முன்னேறிச் செல்வீர்களாயின், ஓசையைக் கேட்பதன் பக்கம் கவனம் ஏற்பட்டுக் கொண்டே செல்லும்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: உலகம் தோன்றியதிலிருந்து அவன் தன்னுடைய சிறப்பான அடியார்களுடன் உரையாடுகின்றான் என்ற இந்த விஷயம் சான்றாக இருந்து வருகின்றது. அவ்வாறு இல்லாமல் இருந்திருந்தால் அவன் ஒருவன் இருக்கின்றான் என்ற விஷயமே சிறிது சிறிதாக முற்றிலும் மறைந்து போயிருக்கும். எனவே இறையிருப்புக்கான சான்றிற்கான மிக அருமையான வழிமுறையாவது, நாம் பார்ப்பதன் மூலமாகவோ அல்லது உரையாடலின் மூலமாகவோ அவனுடைய

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL MERCHANT
Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

குரலைக் கேட்க வேண்டும். சிலவேளை அல்லாஹ் வழிகாட்டி விடுகின்றான். சிலவேளை அல்லாஹ் குரலை மட்டும் கேட்கச் செய்கின்றான்.

எனவே இன்றைய நாட்களின் உரையாடல் பார்த்தலின் மாற்றாக இருக்கின்றது. இன்றைய நாட்களில் அல்லாஹ்வின் தரப்பிலிருந்து கிடைத்து விடுகின்ற சைகையே அல்லாஹ்வைப் பார்ப்பதற்கு பகரமாக உள்ளது. எனினும், இறைவனுக்கும் அவனிடம் யாசிக்கக் கூடியவருக்கும் இடையில் ஏதாவது திரை இருந்தால், அப்பொழுது வரை நம்மால் கேட்க முடியாது. உரையாடலும் இருந்தாலும் கேட்க முடியாது. ஏனெனில், தடை இருக்கின்றது; திரை இருக்கின்றது. இடைப்பட்ட திரை அகன்று விடும்பொழுது, அவனுடைய குரல் கேட்கும்.

எனவே அருகில் வாருங்கள். களங்கமற்ற அன்பை உருவாக்கிக் கொள்வீர்களாயின் இந்த நெருக்கம் கிடைக்கும் ; திரை அகன்று விடும். பதிலோ அளிக்கின்றான். அல்லாஹ் கூறுகின்றான்; நான் பதில் அளிக்கின்றேன். ஆனால் உங்களால் கேட்க முடியாது. முதல் பதில், அன்பில் முன்னேறுங்கள் என்பதாகும். அன்பில் முன்னேறினீர்கள் என்றால், செவிட்டுத்தனமும் அகன்று விடும்.

பிறகு, ஹுஸூர் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: துஆ இறையிருப்பிற்கு அருமையான சான்றாகும். ஆக, எல்லாம் வல்ல இறைவன் ஓரிடத்தில் கூறுகின்றான்:

وَاِذَا سَاَلَكَ عِبَادِیۡ عَنِّیۡ فَاِنِّیۡ قَرِیۡبٌ

اُجِیۡبُ دَعۡوَۃَ الدَّاعِ اِذَا دَعَانِ

அதாவது என்னுடைய அடியார்கள் உம்மிடம் இறைவன் எங்கு இருக்கின்றான்? அதற்கான சான்று என்ன? என்று கேட்டால், மிகவும் அருகில் இருக்கின்றான் என்று கூறிவிடுவீராக. அதற்கான சான்றாவது, துஆ செய்யக் கூடிய ஒருவர் என்னை அழைக்கும் பொழுது நான் அவருடைய துஆவிற்கு பதில் அளிக்கின்றேன். இந்த பதில் சிலவேளை உண்மையான கனவு என்ற வகையில் கிடைக்கின்றது. உண்மையான கனவுகள் வந்து விடுகின்றன. அவற்றின் மூலமாக பதில் கிடைத்து விடுகின்றது. சிலவேளை ஆன்மிகக் காட்சி மற்றும் இறையறிவிப்பு மூலமாக கிடைத்து விடுகின்றது.

இவை மட்டும் இன்றி, துஆக்கள் மூலமாக இறைவனின் வல்லமைகள் மற்றும் ஆற்றல்களும் வெளிப்படுகின்றன. அது அல்லாமலும், துஆக்கள் மூலமாக இறைவனின் வல்லமைகளும் ஆற்றல்களும் வெளிப்பட்டு விடுகின்றன. அல்லாஹ் நம்முடைய குரலைக் கேட்டு விட்டான்; நம்முடைய துஆவை ஏற்றுக் கொண்டான் ;அதன் விளைவாக இந்த விஷயங்கள் உருவாகின்றன என்று தானாகவே தெரிய ஆரம்பித்து விடுகின்றது.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: அவன் சிரமங்களைத் தீர்த்து விடக் கூடிய ஆற்றல் படைத்தவன் என்பது தெரிய வருகின்றது. சுருக்கமாக, துஆ மிகப் பெரும் செல்வமும், ஆற்றலுமாகும். திருக்குர்ஆனில் ஆங்காங்கே அதைப் பற்றி எழுச்சியூட்டியுள்ளான். மேலும், துஆவின் மூலமாக தங்களுடைய கஷ்டங்களிலிருந்து விடுதலையடைந்த மக்களின் நிலைமைகளை எடுத்துக் கூறியுள்ளான்.

நபிமார்கள் (அலைஹிஸ்ஸலாம்) உடைய வாழ்வின் வேர் மற்றும் அவர்களுடைய வெற்றிகளின் அசல் மற்றும் உண்மையான வழிமுறை இந்த துஆவே ஆகும்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்; எனவே நான் அறிவுரை கூறுகின்றேன். உங்களுடைய ஈமானிய மற்றும் அமலின் ஆற்றலை அதிகரிப்பதற்காக துஆக்களில் ஈடுபட்டிருங்கள். துஆக்களின் மூலமாக எப்படிப்பட்ட மாற்றம் உருவாகும் என்றால், அது இறைவனின் அருளால் நன்மையான முடிவைத் தரும்.

இவை பழைய விஷயங்கள் அல்ல. இன்றைய காலத்திலும் இதற்கான உதாரணங்கள் கிடைக்கின்றன. பல மக்கள் தங்களுடைய துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட சம்பவங்களை எழுதுகின்றார்கள். பல்வேறு சந்தர்ப்பங்களில் அந்த சம்பவங்களை எடுத்துக் கூறியும் வருகின்றேன். இறையிருப்பின் மீது ரிவ்யூவ் ஆஃப் ரிலீஜியன்ஸின் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. அதிலும் பல மக்கள் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட சம்பவங்களை எடுத்துக் கூறியுள்ளார்கள்.

இன்னும் கூறுவதாயின், அல்லாஹ் எந்த அளவுக்கு வழங்குகின்றான் என்றால், சிலவேளை ஈமானை வலுப்படுத்துவதற்காகவும், துஆக்களை ஏற்றுக் கொண்டு அவற்றிற்கு ஏற்றுக் கொள்ளப்படுதல் என்ற தரத்தை வழங்கி அழைப்பவரின் குரலைக் கேட்டு, பிறகு தன்னுடைய ஆற்றலின் தோற்றத்தைக் காட்டி விடுகின்றான். எவர்கள் பலவீனமான ஈமான் உடையவர்களாக இருக்கின்றார்களோ அவர்களுக்கும் ஈமானில் உறுதியை உருவாக்குவதற்காக சிலவேளை காட்டி விடுகின்றான்.

நூற்றுக்கணக்கான எத்தகைய மக்களும் இருக்கின்றார்கள் என்றால், அவர்கள் எனக்குக் கடிதம் எழுதி வருகின்றார்கள். என்னிடம் வந்து எனக்குக் கூறவும் செய்கிறார்கள்.

துஆவைப் பற்றிய ஞானத்தின் உண்மைத்துவத்தை எடுத்துரைத்த வண்ணம் அன்னார் (அலை) ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: ஞானம் அருள் மூலமாக கிடைக்கப் பெறுகின்றது. பிறகு அருள் மூலமாகவே எஞ்சியிருக்கின்றது. ஞானத்தை அருள் மிகவும் தூய்மையானதாகவும் ஒளி பொருந்தியதாகவும் ஆக்கி விடுகின்றது. நடுவிலிருந்து திரைகளை அகற்றி விடுகின்றது. அதிகமாக கட்டளையிடக் கூடிய ஆன்மாவுக்கு தூசி துகள்களை அகற்றி விடுகின்றது. ஆன்மாவுக்கு ஆற்றலையும், வாழ்வையும் வழங்குகின்றது. நஃப்ஸே அம்மாராவை அதிகமாகக் கட்டளையிடுதல் என்ற அந்த சிறையில் இருந்து வெளியே கொண்டு வருகின்றது. அதாவது நஃப்ஸே அம்மாரா எனப்படும் பாவங்களின் பக்கம் தூண்டக் கூடிய ஆன்மாவை அந்த சிறையில் இருந்து வெளியே கொண்டு வருகின்றது. தன்னுடைய நஃப்ஸின் சிறையிலிருந்து வெளியேற்றுகின்றது. தீய ஆசைகளின் அசுத்தங்களை விட்டும் தூய்மைப்படுத்துகின்றது. மனஇச்சைகள் எனும் பெருக்கெடுத்து ஓடும் வெள்ளத்திலிருந்து வெளியே கொண்டு வருகின்றது. எவ்வாறு தண்ணீரின் வெள்ளம் வருகிறதோ அவ்வாறே மனஇச்சைகள் எனும் ஒரு வெள்ளம் இருக்கின்றது ; பாவங்களின் வெள்ளம் இருக்கின்றது. அதிலிருந்து மனிதனை வெளியே கொண்டு வருகின்றது.

அப்பொழுது மனிதனிடம் ஒரு மாற்றம் உருவாகின்றது. அவனும் அசுத்தங்களை விட்டு இயல்பாகவே விலகி இருந்து விடுகின்றான். அதற்குப் பிறகு அருளின் மூலமாக ஆன்மாவில் உருவாகக் கூடிய முதல் அசைவு துஆவாகும். நாமும் அனுதினமும் துஆ செய்கின்றோம் ; நாம் தொழக் கூடிய இந்தத் தொழுகை முழுவதும் துஆவே ஆகும் என்று நினைக்காதீர்கள். ஏனெனில், இறைஞானத்திற்குப் பிறகு அருளின் மூலமாக உருவாகக் கூடிய அந்த துஆ வேறு விதமான நிறத்தின் தன்மையைக் கொண்டிருக்கின்றது. நாம் இந்த வெளிப்படையான தொழுகைகளைத் தொழுது விட்டோம். வந்தோம்; வேக வேகமாக ஐந்து நிமிடத்தில் தொழுது விட்டோம். தொழுகையில் இருந்து வெளியேறி விட்டோம் என்ற இவை தொழுகைகள் அல்ல ; இவை துஆக்கள் அல்ல. இதற்காக இறைஞானம் தேவை.

அந்த இறைஞானம் உருவான பிறகு, அந்த துஆவின் இன்பமே வேறு விதமாக இருக்கும். அந்த தொழுகையின் இன்பம் வேறு விதமாக இருக்கும். அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: அது வேறு ஒரு நிறத்தையும், தன்மையையும் கொண்டிருக்கின்றது. அது மாய்த்து விடக் கூடிய பொருளாகும். அது உருக்கி விடக் கூடிய நெருப்பாகும். அது கருணையை ஈர்க்கக் கூடிய ஒரு காந்த விசையாகும். அது மரணமாகும். ஆனால், கடைசியில் உயிர்ப்பிக்கின்றது. அது ஒரு பெருக்கெடுத்து ஓடும் வெள்ளமாகும். ஆனால், இறுதியில் கப்பல் ஆகிவிடுகின்றது.

ஒரு வெள்ளமாகும். ஆனால் அந்த வெள்ளமும் கப்பலாகி விடுகின்றது. மேலும் நம்முடைய சேருமிடத்தில் நம்மை கொண்டு சேர்த்து விடுகின்றது. சீர்கெட்ட ஒவ்வொரு விஷயமும் அதனால் சீர் அடைந்து விடுகின்றது. ஒவ்வொரு விஷமும் கடைசியில் அதனால் விஷமுறிவாக ஆகிவிடுகின்றது. எனவே இந்த இறைஞானத்தைப் பெறுவதற்கு முயற்சி செய்யக் கூடியவர்கள் நம்மில் நற்பேறு பெற்றவர்கள் ஆவர்.

பிறகு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: துஆ இறைவனிடமிருந்தே வருகின்றது. மேலும் இறைவன் பக்கமே செல்கின்றது. உங்களுடைய உயிர் உங்களுக்கு அருகில் இருக்கும் அளவுக்கு துஆவால் இறைவன் அருகில் வந்து விடுகின்றான். துஆவின் முதல் அருட்கொடையாவது, மனிதனிடம் தூய மாற்றம் உருவாகின்றது; துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டது ; அல்லாஹ் திருப்தி அடைந்து விட்டான் என்பது எப்படித் தெரிய வரும் என்று பெரும்பாலான மக்கள் கேட்கின்றார்கள்.

தூய்மையான மாற்றம் உருவாகி விடுகின்றது என்பது அவர்களுக்கு பதிலாகும். தூய மாற்றம் உருவகும் பொழுதுதான் அல்லாஹ்வுடனான தொடர்பில் ஒரு மனிதன் அதிகரிப்பான். தூய மாற்றம் உருவாகும் பொழுது, துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான அடையாளங்களும் கிடைக்கும்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: மனிதனிடம் தூய மாற்றம் உருவாகின்றது. பிறகு அந்த மாற்றத்தினால் இறைவனும்

தன்னுடைய பண்புகளில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றான். அவனுடைய பண்புகள் மாறாதவையாகும். ஆனால், மாறிய நபருக்காக அவனுடைய ஒரு தனித் தோற்றம் இருக்கின்றது. அதை உலகம் அறிந்திருப்பதில்லை. அல்லாஹ்வின் பண்புகள் மாறிவிடுகின்றன என்பதன்று. அவை மாற முடியாது.

ஆனால், இத்தகைய மாற்றங்களை உருவாக்கிக் கொள்ளக் கூடியவருக்காக அல்லாஹ் எத்தகைய நிலைமைகளை உருவாக்கி விடுகிறான் என்றால், அவனுடைய பண்புகள் ஏதோ மாறி விட்டதைப் போன்று அவருக்குத் தோன்றுகிறது. ஆனால், பண்புகளோ அவையே தான். ஆனால், அவற்றின் வெளிப்பாடு இப்பொழுது ஆரம்பமாகி விட்டது.

அன்னார் (அலை) கூறுகிறார்கள்: அது வேறு ஓர் இறைவன் போன்று தெரிகிறது. ஆனால், வேறு ஓர் இறைவன் கிடையாது. மாறாக, புதிய தோற்றம், புதிய நிறத்தில் அவனை வெளிப்படுத்துகின்றது. அப்பொழுது இந்த சிறப்பான தோற்றத்தின் மேன்மையில் மற்றவருக்காக செய்யாத செயலை அந்த மாற்றத்தை ஏற்படுத்திக் கொண்டவருக்காக அவன் செய்கின்றான். இவையே அந்த அற்புதங்களாகும்.

பிறகு ஹுஸூர் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: மேன்மை பொருந்திய அல்லாஹ் தன்னுடைய படைப்பினங்களின் நன்மைக்காக திறந்துள்ள கதவு ஒன்றே ஒன்றாகும். அதாவது, துஆ. ஒருவர் அழுது மன்றாடி அந்தக் வாசலில் நுழையும் பொழுது அந்த கருணையுள்ள எஜமானன் அவருக்குத் தூய்மை மற்றும் பரிசுத்தம் எனும் ஆடையை அணிவித்து விடுகின்றான். மேலும் தன்னுடைய மகத்துவத்தை எந்த அளவு அவர் மீது மேலோங்கச் செய்து விடுகின்றான் என்றால் தேவையற்ற பணிகள் மற்றும் அசுத்தமான செயல்களில் இருந்து அவர் பல மைல் தூரம் விலகி ஓடி விடுகின்றார். மிக அதிக தொலைவில் பல மைல்கள் தூரம் சென்று விடுகின்றனர்.

எனவே உண்மையான துஆவின் சிறப்பாவது வீணான விஷயங்கள் மற்றும் வீணான செயல்களில் இருந்து அவர் விலகி விடுகின்றார். தூய்மை அவருடைய இயல்பில் வந்து விடுகின்றது. அவர் உலக நோக்கங்களுக்காக மட்டும் துஆ செய்வதில்லை. மாறாக, தன்னுடைய மார்க்கம் மற்றும் தக்வாவில் முன்னேறுவதற்காகவும் துஆ செய்கின்றார். இறைவனின் அன்பை பெறுவதற்காக துஆ செய்கின்றார்.

இதுவே உண்மையான நம்பிக்கை கொண்டவர்களின் ஓர் அடையாளம் ஆகும்; இதுவே ஈமானில் முழுமை பெறுவதற்கான அடையாளமாகும்; இதுவே ஈமானில் முன்னேறுவதற்கான அடையாளமாகும்.

பிறகு துஆவின் ஆழத்தை மேற்கொண்டு திறந்தவாறு அன்னார் (அலை) ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:

அருளைப் பெறுவதற்கான மிக நெருக்கமான வழிமுறை துஆவாகும். முழுமையான துஆவிற்கு அவசியமான விஷயங்கள் இவையாகும்.

அதில் உருக்கம் இருக்க வேண்டும். அழுது மன்றாடல் இருக்க வேண்டும். உருகுதல் இருக்க வேண்டும். எந்த துஆ பணிவு, மன்றாடுதல் மற்றும் உடைந்த உள்ளத்தால் நிறைந்திருக்கிறதோ அது இறைவனின் அருளை ஈர்த்து வருகின்றது. அளவற்ற பணிவோடு உருக்கம் உருவாகி அழுதழுது மனிதன் துஆ கேட்க வேண்டும். அது ஏற்றுக் கொள்ளப்பட்டு அசல் நோக்கம் வரை கொண்டு சேர்க்கின்றது. ஆனால், இதுவும் இறைவனின் அருள் இல்லாமல் கிடைக்கப் பெற முடியாது என்பதே சிரமம் ஆகும்.

இதற்கும், இந்த நிலையை உருவாக்குவதற்கும் அல்லாஹ்வின் அருளைக் கேட்க வேண்டும். பிறகு துஆ செய்து கொண்டே இருப்பதுதான் இதற்கான சிகிச்சையாகும். எந்த அளவு அவநம்பிக்கையும், ஆர்வமின்மையும் ஏற்பட்டாலும் சரி. ஆனால், மனம் நிறைந்து விடக் கூடாது. சிரம் மேற்கொண்டும் (செயற்கையாக) உருவாக்கியும் செய்து கொண்டே இருக்க வேண்டும். உண்மையான மற்றும் அசலான துஆவுக்கும் கூட துஆவின் தேவையே இருக்கின்றது.

தொடர்ச்சியாக ஈடுபட்டிருக்க வேண்டும். அல்லாஹ்வை விடாமல் இருக்க வேண்டும். எப்பொழுது வரை அந்த நிலை உருவாகாதோ அதுவரை நான் நிறுத்த மாட்டேன் என்று இருக்க வேண்டும். அப்பொழுது இந்த நிலை உருவாகி விடும். மேலும் அவனுடைய அருள் இறங்க ஆரம்பித்து விடும். பல மக்கள் துஆ செய்கின்றார்கள். அவர்களுடைய மனம் நிறைந்து விடுகின்றது. சிறிது நேரம் துஆ செய்த பிறகு மனம் நிறைந்து விடுகின்றது. எதுவும் நடப்பதில்லை என்று கூற ஆரம்பித்து விடுகிறார்கள். ஆனால், நம்முடைய அறிவுரை என்னவென்றால், அந்த மண்ணைத் தோண்டுவதிலேயே பரக்கத் உள்ளது.

வெளிப்படையாகப் பார்க்கும் பொழுது மண்ணைத் தோண்டுவதற்காகத் தெரிகின்றது. ஆனால், மண்ணைத் தோண்டுவதிலேயே பரக்கத் இருக்கின்றது. கடைசியில் இதில் பரக்கத் ஏற்பட்டு விடுகின்றது. ஏனெனில், கடைசியில் நோக்கம் என்னும் மாணிக்கம் அதிலிருந்தே வெளியே வருகின்றது. மேலும், ஒருநாள் வருகின்றது. அப்பொழுது அவருடைய அந்த உள்ளம் நாவோடு ஒத்துப் போய் விடுகிறது. கிடைக்கவிருந்த அந்த நோக்கம் கடைசியில் அவருக்குக் கிடைத்து விடுகின்றது அல்லது பெற விரும்பும் அந்த நோக்கம் அவருக்குக் கிடைத்து விடுகின்றது.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: அவருடைய அந்த உள்ளம் நாவோடு ஒத்துப் போக ஆரம்பித்து விடுகின்றது. பிறகு சுயமே அந்தப் பணிவு, உருக்கம் மற்றும் துஆவுக்கு அவசியமான விஷயங்கள் உருவாகி விடுகின்றன. அதாவது, அவர் நாவால் கூறிக் கொண்டிருப்பது உள்ளத்தின் நிலையாக மாறி விடுகின்றது. ஒன்றாக ஆகிவிடும்பொழுது பிறகு துஆவிற்கு அவசியமான விஷயங்களும் உருவாகி விடுகின்றன.

எவர் இரவில் எழுகின்றாரோ அவர் எந்த அளவு முன்னால் நிற்காத வகையிலும், பொறுமை இழந்தவராகவும் இருந்தாலும் சரி! அவர் அந்த நிலையிலும் **இறைவா! உள்ளம் உன்னுடைய பிடியிலும் ஆதிக்கத்திலும் இருக்கின்றது; நீ அதனைத் தூய்மையாக்கி விடுவாயாக!** என்று துஆ செய்கிறாரோ மேலும் சரியாக மன இறுக்கத்தின் நிலையில் அல்லாஹ்விடம் மனம் இலகுவதற்காக துஆ கேட்கின்றார் என்றால், அவருடைய உள்ளம் மிகவும் இறுகி விடுகின்றது; அவருடைய நிலையில் ஓர் இலகு ஏற்பட வேண்டும் ; அல்லாஹ்வின் பக்கம் கவனம் ஏற்பட வேண்டும் ; ஈர்ப்பு உருவாக வேண்டும் ; அவன் மீதான அன்பு அதிகரிக்க வேண்டும் என்று விரும்புகின்றார் என்றால் அப்பொழுது அந்த இறுக்கத்தில் இருந்து மனம் விரிவடையும்.

வெளிப்படையாக உள்ளத்தின் இந்த நெருக்கடி இருக்கின்றதே அதிலிருந்தும் மனிதனுடைய மனம் திறந்து விடுகின்றது. மேலும் உருக்கம் உருவாகி விடும். உள்ளம் திறப்பது என்றால் என்ன? பிறகு துஆக்களில் உருக்கம் உருவாகி விடும். உள்ளம் திறப்பது என்றால் என்ன? அதாவது துஆக்களில் உருக்கம் உருவாகி விடுவதாகும். மனிதனுக்கு அழுகை வரும். இந்த நேரம்தான் துஆ ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய தருணம் என்று அழைக்கப்படுகின்றது. இப்படிப்பட்ட நிலை உருவாகி விடும் பொழுது, இது (துஆ) ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான நேரம் ஆகிவிட்டது என்று புரிந்து கொள்ளுங்கள். அந்த நேரத்தில் அவர் ஆன்மாவை இறைவனின் சன்னிதானத்தில் தண்ணீரைப் போன்று வழிந்து ஓடக் காண்கின்றார். அது மேலிருந்து கீழே விழக்கூடிய ஒரு துளியாகும்.

இந்த நிலை இருக்கும்பொழுது, இப்பொழுது துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான நேரம் என்று தானாகவே மனிதன் உணர ஆரம்பித்து விடுகின்றான். மேலும் இப்பொழுது இறைவன் எனக்காக என்ன செய்வானோ அதுவே எனக்கு சிறந்ததாக இருக்கும் என்ற விஷயத்திலும் உறுதியான நம்பிக்கை ஏற்பட்டு விடுகின்றது. நான் கூறியதே நடக்க வேண்டும் என்று இருக்காது. மாறாக, இந்த உறுதியான நம்பிக்கை உருவாகி விடுகின்றது.

பிறகு உருக்கத்திற்கு பிறகு இந்த ஆறுதல் கிடைக்கின்றது. அதாவது இப்பொழுது இறைவன் இந்த துஆவிற்கு பிறகு அதன் விளைவாக எதை எனக்காக செய்தாலும், அதுவே எனக்குச் சிறந்தாகும். இந்த ஈமான் அதிகரித்து விடுகின்றது. உள்ளத்தில் எந்த ஒரு முறையீடும் இருப்பதில்லை. எனவே இந்த நிலையைத்தான் நாம் நம்முன் உருவாக்குவதற்கு முயற்சி செய்ய வேண்டும். இதற்காக நாம் நம்மை ஆய்வும் செய்ய வேண்டும்.

பிறகு, இதை மேற்கொண்டு விளக்கியவாறு அன்னார் (அலை) ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: துஆ எத்தகையது என்றால், அது எல்லா சிரமங்களையும் எளிமையாக்கி விடுகின்றது. சிரமத்திலும் சிரமமான பணியும் துஆவால் எளிமையாகி விடுகின்றது. எந்த மக்களுக்கு துஆவின் மதிப்பும், மரியாதையும் தெரிவதில்லையோ அவர்கள் மிகவும் விரைவாகச் சோர்ந்து விடுகின்றார்கள். துணிவிழந்து உட்கார்ந்து விடுகின்றார்கள். ஆனால், துஆ ஓர் உறுதித் தன்மையையும் நிரந்தத் தன்மையையும் எதிர்பார்க்கின்றது. மனிதன் முழு துணிவோடு ஈடுபட்டிருக்கும் பொழுது, ஒரு தீய ஒழுக்கம் என்ன! ஆயிரம் தீய ஒழுக்கங்களையும் கூட அல்லாஹ் அகற்றி விடுகின்றான். அவரை முழுமையான நம்பிக்கை கொண்டவராக ஆக்கி விடுகின்றான்.

ஆனால் அதற்காக களங்கமற்றத் தன்மை மற்றும் கடும் உழைப்பு நிபந்தனையாக இருக்கின்றது. அது

துஆவின் மூலமாகவே உருவாகின்றது. அதாவது, ஒரு களங்கமற்றத் தன்மை இருக்க வேண்டும். ஒரு போராட்டம் இருக்க வேண்டும். தொடர்ச்சியான முயற்சி இருக்க வேண்டும்.

ஆக, இதுவே நிபந்தனையாகும். இதையே உருவாக்க வேண்டிய தேவை இருக்கின்றது. இதற்காக நாம் நம்முடைய உள்ளத்தைத் தட்டிப் பார்க்க வேண்டிய அவசியம் இருக்கின்றது. இந்த களங்கமற்றத் தன்மை மற்றும் போராடும் நிலை நம்மில் உருவாகி விட்டதா அல்லது நாம் உருவாக்குவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கின்றோமா?

போராடுதல் என்பதன் பொருளே தொடர்ச்சியாக முயற்சி செய்து கொண்டே இருப்பது மற்றும் களைப்படையாமல் இருப்பதற்கும் உலகப் பணிகளில் நாம் முயற்சி செய்கின்றோம்; களைப்படைவதில்லை என்றால், பிறகு இறைவனுடைய நெருக்கத்தைப் பெறுவதில் ஏன் களைப்படைய வேண்டும்.

அடுத்து, அதிலுள்ள தத்துவத்தை எடுத்துரைத்தவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

மனிதன் இந்த வாழ்வை மிகவும் அருவருப்பானதாகக் கருதி அதிலிருந்து வெளியேறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். துஆவால் செயல்பட வேண்டும். ஏனெனில், அவர் திட்டங்களுக்கான உரிமையை நிறைவேற்றும் பொழுது, பிறகு உண்மையான துஆவால் செயல்படும்போது, கடைசியில் அல்லாஹ் அவருக்கு ஈடேற்றத்தை வழங்கி விடுகின்றான். மேலும் அவர் பாவம் எனும் வழியில் இருந்து வெளியே வந்து விடுகின்றார்.

ஏனெனில், துஆவும் ஒன்றும் சாதாரண விஷயம் அல்ல. மாறாக, அதுவும் ஒரு மரணமே ஆகும். அந்த மரணத்தை மனிதன் ஏற்றுக் கொள்ளும் பொழுது, பிறகு அல்லாஹ் மரணத்திற்குக் காரணமாக இருக்கக் கூடிய அந்தக் குற்றமுள்ள வாழ்விலிருந்து அவரைக் காப்பாற்றி விடுகின்றான். மேலும் அவருக்கு ஒரு தூய வாழ்வை வழங்குகின்றான். குற்றமான வாழ்வும் கூட ஒரு மரணமே ஆகும். அடுத்த உலகத்தில் சென்று எந்த தண்டனைகள் கிடைக்க இருக்கின்றனவோ அல்லது இந்த உலகத்தில் சிலவேளை கிடைத்து விடுகின்றனவோ அதிலிருந்து அல்லாஹ் காப்பாற்றி விடுகின்றான்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: பல மக்கள் துஆவை ஒரு சாதாரண விஷயமாகக் கருதுகிறார்கள். துஆ என்பது சாதாரண முறையில் தொழுது விட்டு, கையை ஏந்திக் கொண்டு உட்கார்ந்து விட்டோம்; என்ன வாயில் வந்ததோ அதைக் கூறிவிட்டோம் என்பது அல்ல. இந்த துஆவால் எந்தவொரு பலனும் ஏற்படுவதில்லை. ஏனெனில், இந்த துஆ வெறும் ஒரு மந்திரத்தைப் போன்று இருக்கின்றது. எவ்வாறு சில மதங்களைச் சேர்ந்தவர்கள் மந்திரம் ஓதுகின்றார்களோ அதுபோன்று இது ஒரு மந்திரமே ஆகும். அதில் உள்ளமும் இணைந்திருப்பதில்லை ; அல்லாஹ்வுடைய வல்லமைகள் மற்றும் ஆற்றல்கள் மீது எந்த ஒரு ஈமானும் இருப்பதில்லை.

உள்ளத்திலிருந்து ஓசையே வராமல் இருக்கும். அல்லாஹ் எல்லா ஆற்றல்கள் மற்றும் வல்லமைகளுக்கு எஜமானன் ஆவான் என்பதும் வெளிப்படாமல் இருக்கும். நினைவில் கொள்ளுங்கள். துஆ ஒரு மரணம் ஆகும். எவ்வாறு மரண நேரத்தில் அழுது மன்றாடுதல் மற்றும் மன உளைச்சல் இருக்கின்றதோ அவ்வாறே துஆவுக்காகவும் அதேபோன்று மன உளைச்சலும், உத்வேகமும் இருப்பது அவசியமாகும். எனவே துஆவுக்காக முழுக்க முழுக்க அழுது மன்றாடுதல் மற்றும் உருகுதல் இல்லாத வரை அது பயன் தராது.

எனவே இரவுகளில் எழுந்து, எழுந்து மிகவும் அழுது புலம்பி மன்றாடி இறைவனுக்கு முன்னால் தம்முடைய சிரமங்களை முன் வைக்க வேண்டும். ஒரு மரணத்தைப் போன்ற வடிவம் உருவாகி விடுகின்ற அளவுக்கு அந்த துஆவை எட்ட வைக்க வேண்டும். அப்பொழுது துஆ ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய தரத்தை எட்டுகிறது.

அன்னார் (அலை) கூறினார்கள்: இதையும் நினைவில் கொள்ளுங்கள்! எல்லாவற்றிலும் தலையாய மற்றும் அவசியமான துஆவாவது, மனிதன் தன்னைப் பாவங்களிலிருந்து தூய்மையாக, பரிசுத்தமாக ஆக்கிக் கொள்வதற்கான துஆ செய்ய வேண்டும். மிகவும் முக்கியமான விஷயமாகும். முதலில் மனிதன் தன்னை பாவங்களில் இருந்து தூய்மையாக, பரிசுத்தமாக ஆக்கிக் கொள்வதற்காக துஆ செய்ய வேண்டும்.

அன்னார் (அலை) கூறுகிறார்கள்: எல்லா துஆக்களின் அசல் மற்றும் சாராம்சம் இதுவே ஆகும். துஆக்களின் வேர் இதுவே ஆகும். ஏனெனில், இந்த துஆ ஒப்புக் கொள்ளப்படும் பொழுது, மனிதன் எல்லா விதமான அசுத்தங்கள் மற்றும் மாசுகளை விட்டும் தூய்மையாகி, பரிசுத்தமாகி எல்லாம் வல்ல இறைவனின் பார்வையில் தூய்மையானவன் ஆகிவிடுவான்.

இதுவும் மிக முக்கியமான விஷயமாகும். நாம் தூய்மையாகி விட்டோம் என்று நாம் புரிந்து கொண்டோம் என்பதல்ல. எல்லாம் வல்ல இறைவனின் பார்வையில் தூய்மையானவராக ஆகிவிடுவார். எனவே இறைவன் என்னைத் தூய்மையாக, பரிசுத்தமாக ஆக்கி விட்டான். நான் அவனது பார்வையில் தூய்மையாகி விட வேண்டும் என்ற திருப்தி ஏற்படாத வரை துஆ செய்து கொண்டே இருக்க வேண்டும்.

இதன் பொருளாவது, பிறகு மீண்டும் தீமைக்கான சிந்தனையே வரக் கூடாது. பிறகு அவருடைய அவசியமான தேவைகள் தொடர்பாக இருக்கக் கூடிய மற்ற துஆக்களை அவர் கேட்க வேண்டியது கூட வருவதில்லை ; அவை தானாகவே ஏற்றுக் கொள்ளப்பட்டு விடுகின்றன. இந்த நிலை ஏற்பட்டு விடும் பொழுது, பிறகு அல்லாஹ்வும் நட்புக்கான உரிமையை நிறைவேற்றுகின்றான். பிறகு அவருடைய தேவைகளை நிறைவேற்றிக் கொண்டே இருக்கின்றான்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: அவர் பாவங்களிலிருந்து தூய்மையாகி விட வேண்டும் என்பதே கடுமையான விடா முயற்சி இருக்க வேண்டிய துஆவே ஆகும். இது ஒன்றும் சாதாரண துஆ அல்ல. பாவங்களை விட்டு தவிர்ந்திருப்பதற்கான இந்த துஆ மாபெரும் துஆவாகும். மேலும், அல்லாஹ்வின் பார்வையில் இறையச்சம் உடையவராகவும் உண்மையாளராகவும் நிலை நிறுத்தப்பட வேண்டும். அல்லாஹ்வின் பார்வையில் இறையச்சம் உடையவராகவும், தூய்மையானவராகவும் இருக்க வேண்டும். தன்னைத்தானே கருதிக் கொள்ளக் கூடாது அல்லது மக்கள் மட்டும் நம்மை அவ்வாறு கருதக் கூடாது. அதாவது, ஆரம்ப கட்டத்தில் மனிதனின் உள்ளத்தில் உள்ள திரைகள் விலகுவது அவசியமாகும். அவை அகன்ற பிறகு மற்ற திரைகளை அகற்றுவதற்கு அந்த அளவு கடினமாக விடா முயற்சி செய்ய வேண்டியது வராது.

ஏனெனில், எல்லாம் வல்ல இறைவனின் அருள் அந்த நபருக்குக் கிடைத்து ஆயிரக்கணக்கான சீர்கேடுகள் தானாகவே விலக ஆரம்பித்து விடுகின்றன. உள்ளுக்குள் தூய்மையும், பரிசுத்தத் தன்மையும் உருவாகி விடும்பொழுது அல்லாஹ்வுடன் உண்மையான தொடர்பு உருவாகி விடும்பொழுது, பிறகு இறைவன் தானே அவரை கவனித்துக் கொள்பவனாகவும், அவருக்குப் பாதுகாவலனாகவும் ஆகி விடுகின்றான்.

அவர் அல்லாஹ்விடம் தன்னுடைய ஏதாவது ஒரு தேவையைக் கேட்பதற்கு முன்னதாகவே அல்லாஹ் தானே அதை நிறைவேற்றி விடுகின்றான். அவை உலகத் தேவைகளாக இருந்தாலும் சரியே! அவையும் நிறைவேறி விடுகின்றன. இது ஒரு நுணுக்கமான ரகசியமாகும். மிக நுட்பமான ரகசியமாகும். மனிதன் அந்தத் தரத்தை அடைந்து விடும்போதுதான் இது திறக்கின்றது. இதற்கு முன்னர் அதைப் பற்றி புரிய வருவது மிகவும் சிரமமாகும். ஆனால் இது ஒரு மாபெரும் போராட்டம் கொண்ட வேலையாகும். ஏனெனில், துஆவும் ஒரு போராடுதலை எதிர்பார்க்கின்றது.

எவர் துஆவில் கவனக் குறைவாக இருக்கின்றாரோ, அதை விட்டு விலகி இருக்கின்றாரோ அல்லாஹ்வும் அவரை பொருட்படுத்துவதில்லை. அவரை விட்டு விலகி விடுகின்றான். விரைவை மேற்கொள்ளுதலும், அவசரப்படுதலும் இங்கு பலனளிப்பதில்லை. அவசரத் தன்மை பலனளிக்காது. இறைவன் தன்னுடைய அருளாலும், கருணையாலும் என்ன விரும்புகின்றானோ அதை வழங்கட்டும். எப்பொழுது விரும்புகின்றானோ அப்பொழுது வழங்கட்டும். என்ன விரும்புகின்றானோ வழங்கட்டும். எப்பொழுது விரும்புகின்றானோ வழங்கட்டும் என்ற இந்த விஷயம் எப்பொழுதும் சிந்தனையில் இருக்க வேண்டும்.

உடனடியாக வழங்கப்படாததனால் கேட்பவர் முறையிடுவதும், தப்பெண்ணம் கொள்வதும் கூடாது. மாறாக, உறுதிப்பாடு மற்றும் பொறுமையுடனும் கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும்.

எனவே நிரந்தரத் தன்மை நிபந்தனையாகும். தன்னைத் தானே தூய்மையாக்கிக் கொள்வதற்கான துஆவே எல்லாவற்றையும் விட பொதுவான துஆ ஆகும். இறைவனின் பார்வையில் தூய்மையாக இருக்கின்ற தூய்மையை மேற்கொள்ள வேண்டும்.

துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு என்ன நிலை இருக்க வேண்டும்? என்ற விஷயத்தை எடுத்துரைத்தவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்;

துஆ உச்சகட்ட தரமான மன்றாடுதல் வரை எட்டி விடும்போதுதான் துஆவுக்குள் ஏற்றுக் கொள்ளப்படுதலின் தாக்கம் உருவாகிறது. உச்சகட்ட தரமான மன்றாடுதல் உருவாகி விடுகின்றபொழுது அல்லாஹ்வின் தரப்பிலிருந்து அது ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான தடயங்களும், வழிவகைகளும் உருவாக்கப்படுகின்றன.

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 9 Thursday 09 - 16 May 2024 Issue No. 19- 20

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

முதலில் விண்ணில் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. பிறகு மண்ணில் தாக்கங்களைக் காட்டுகின்றன.

இது சிறிய விஷயமல்ல. அல்லாஹ் துஆவை ஏற்றுக் கொள்கிறான். அப்பொழுது அங்கிருந்து அதற்கான கட்டளை பிறப்பிக்கப்பட்டு விடுகிறது. பிறகு அதன் தாக்கங்கள் மண்ணில் வர ஆரம்பித்து விடுகின்றன. இது சிறிய விஷயமல்ல. மாறாக, ஒரு மகத்துவம் மிக்க உண்மைத்துவமாகும். இன்னும் சொல்வதாயின், எவருக்கு இறைவனின் தோற்றத்தைப் பார்க்க வேண்டுமோ அவர் துஆ செய்ய வேண்டும் என்பதே உண்மை ஆகும்.

சில மக்கள் அல்லாஹ் என்ன தீர்மானித்து விட்டானோ அது நடக்கத்தான் போகிறது. இது நடக்கும் என்பதை அல்லாஹ் அறிந்திருக்கின்றான் எனும் போது, பிறகு துஆவின் தேவை என்ன? என்று கேள்வி கேட்கின்றார்கள். இந்தக் கேள்விகளும் எழுகின்றன.

எனவே துஆ ஏன் அவசியமானது? என்பதை விளக்கியவாறு அன்னார் (அலை) ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:

துஆ தனது கட்டுப்பாட்டில் இருந்திருந்தால் மனிதன் விரும்பியதை செய்து கொள்வான். எனவே இந்த நண்பர் அல்லது உறவினருக்காக கண்டிப்பாக இன்ன விஷயம் நடந்தே தீரும் என்று நம்மால் கூற முடியாது.

சில மக்கள் துஆவுக்காக கூறுகிறார்கள்: அது கண்டிப்பாக நடந்தே ஆக வேண்டும் என்பது அவசியமல்ல. இது நம்முடைய கட்டுப்பாட்டில் ஒன்றும் இல்லையே! எப்படி அதை அல்லாஹ் ஏற்றுக் கொள்வான் என்பது அவன் விருப்பமாகும்.

சிலநேரத்தில் கடுமையான தேவையை உணர்த்தும் துஆ வருவதில்லை. துஆவுக்காக கூறவும்படுகிறது. கடுமையான தேவையும் உணரப்படுகிறது. ஆனால், உள்ளத்தின் அந்த நிலை உருவாவதில்லை. உள்ளம் கடினமாகி விடுகிறது. ஏனெனில், அதன் ரகசியத்தை மக்கள் அறியாதவர்களாக இருக்கின்றார்கள். அதன் ரகசியத்தைப் பற்றி மக்கள் அறிந்திருப்பதில்லை. எனவே வழிதவறிப் போகிறார்கள். நிலை உருவாகவில்லை என்றால், பிறகு துஆ செய்வதன் பலன் என்ன என்று கேட்கிறார்கள்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: அதில் ஓர் ஐயம் ஏற்படுகிறது. பிறகு ஜஃப்புல் கலம், அதாவது நியதி எனும் விஷயம் எந்த வகையில் புரியப்பட்டுள்ளதோ அதுசரிதான். அதாவது எந்த நியதி நமக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதோ அதுவே நடக்கப் போகிறது. பிறகு, துஆ செய்ய வேண்டிய அவசியம் என்ன? அந்த முயற்சி செய்ய வேண்டிய அவசியம் என்ன?

அன்னார் (அலை) கூறுகிறார்கள்: ஆனால், இதற்கான பதிலாவது, இறைவன் அனைத்தையும் கண்டிப்பாக அறிந்திருக்கிறான்தான். இது நடக்கும் என்பதைக் கண்டிப்பாக அல்லாஹ் அறிந்திருக்கின்றான்தான். ஆனால் இதன் மூலமாக இன்ன பணியைக் கண்டிப்பாக செய்தே ஆக வேண்டும் என்பதற்கு அல்லாஹ் (நிர்பந்தத்ததிற்குள்ளாகி) ஆற்றல் படைத்தவன் இல்லை என்பது அவசியமாதில்லை. அவன் அறிந்திருப்பது, அந்த விஷயம் கண்டிப்பாக அப்படியே நடக்கும் என்பது அல்லாஹ்வுடைய ஆற்றல்களுக்கு அப்பாற்பட்டுவிட்டது என்பதற்கு சான்று அல்ல.

என்ன நடக்கவிருந்ததோ அது அனைத்தும் நடந்தும் விட்டது ; பிறகு நம்முடைய கடின உழைப்பு மற்றும் முயற்சி மூலம் பலன் கிடைக்காது என்பதே அந்த மக்களுடைய கொள்கையாக இருக்கின்றது என்றால் பிறகு அன்னார் (அலை) உலக உதாரணம் ஒன்றைக் கொடுத்துள்ளார்கள். தலையில் வலி இருந்தால், தலைவலியின்போது ஏன் சிகிச்சை பக்கம் போகிறோம்? சிறிது நேரத்திற்கு பிறகு தலைவலி தன்னாலேயே நீங்கி விடும். அல்லது வலிக்க வேண்டும் என்றால் வலிக்கத்தான் செய்யும் ; பிறகு மருந்து சாப்பிட வேண்டிய அவசியம் என்ன? தாகத்திற்காக குளுமையான நீரை ஏன் அருந்துகிறீர்கள்? ஒரு நேரம் வருகின்றது. அதில் எப்படிப்பட்ட மக்களும் இருக்கின்றார்கள் என்றால், அவர்கள் தண்ணீர் அருந்தவில்லை என்றாலும், தாகம் தன்னாலேயே தணிந்து விடுகின்றது. ஆனால், உடனடியாக தண்ணீர் அருந்தப்படுகின்றது. ஆனால், ஒவ்வொருவரின் தாகமும் தணிய வேண்டும் என்பது அவசியமல்ல. தாகத்தால் மக்கள் மரணித்தும் விடுகின்றார்கள். எனவே தாகத்துக்காக குளுமையான நீரை ஏன் அருந்துகின்றீர்கள்? தாகம் தணிய வேண்டும் என்பதற்காக.

மனிதனுடைய தயக்கத்தில் ஏதுாவது ஒரு விளைவு வெளிப்படுகின்றது. மனிதன் முயற்சி செய்யும்போது கடினமாக உழைக்கும் போது, துஆ செய்யும் போது, பிறகு அதன் விளைவும் வெளிப்படுகின்றது. எனவே அல்லாஹ் இதை அறிந்திருக்கின்றான். எனவே இது நடக்கும் என்பது அவசியம் அல்ல. ஆனால், அல்லாஹ் துஆக்களின் மூலமாக தன்னுடைய நியதியை மாற்றியும் விடுகின்றான்.

ஒருவர் மரணிக்கும் நோயில் இருக்கின்றார். அவருடைய மரணத்தைப் பற்றி அவர் இப்பொழுது மரணிக்கப் போகின்றார் என்று மருத்துவர்கள் கூறிவிட்டார்கள்; ஆனால், துஆக்களின் காரணமாக அவருக்கு ஒன்பது ஆண்டுகள், நான்கு ஆண்டுகள், பத்து ஆண்டுகள் (கூடுதல்) ஆயுள் கிடைத்து விடுகின்றது. ஆக, அல்லாஹ் அந்த நியதியை மாற்றி விட்டான். ஒவ்வொரு மனிதனும் மாய்ந்து போக இருக்கின்றான் என்பது சரிதான். ஆனால், அவனுக்கான நீண்ட வாழ்வை அல்லாஹ் வழங்கி விடுகின்றான். மேலும் ஆரோக்கியமான வாழ்வை வழங்கி விடுகின்றான்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: துஆ மிகவும் உன்னதமான விஷயமாகும். நல்வாய்ப்பு இருந்தால், பாவமன்னிப்புக்கான வழியாக ஆகிவிடுகிறது. வேறு ஒன்றுமே நடக்கவில்லை என்றாலும் கூட, இந்த துஆ பாவமன்னிப்பிற்கான வழியாகவே ஆகிவிடுகின்றது. எதற்காக துஆ செய்யப்படுகின்றதோ அந்த நோக்கம் நிறைவேறவில்லை என்றாலும் அல்லாஹ் அந்த துஆவை சீர்தூக்கி விடுகின்றான். மேலும், அது இந்த உலகத்தில் அல்லது மறுவுலகில் அவருக்கு பாவமன்னிப்பிற்கான வழியாக ஆகிவிடுகின்றது. அவருக்காக எளிமைகளை உருவாக்குவதற்கான வழியாக ஆகிவிடுகிறது. அவருக்குப் பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கான வழியாக ஆகிவிடுகிறது.

இதன் மூலமாகவே சிறிது சிறிதாக இறைவன் கருணையாளன் ஆகிவிடுகின்றான். பிறகு இறைவனின் கருணைகளும் ஆரம்பித்துவிடுகின்றன. பாவமன்னிப்பு எனும் அந்தப் பரிசு இந்த வாழ்வில் கிடைக்க ஆரம்பித்து விட்டால் பிறகு இறைவனின் கருணையின் தோற்றத்தையு;ம மனிதன் பார்க்க ஆரம்பித்து விடுகின்றான்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: துஆ செய்யாமல் இருப்பதால் முதலில் இதயம் துருப்பிடிக்கிறது. துஆ செய்யாமல் இருப்பதால் உள்ளம் துருப்பிடிக்க ஆரம்பித்து விடுகிறது. பிறகு, இரக்கமின்மை உருவாகிறது. பிறகு, துஆ செய்ய வேண்டிய அவசியம் என்ன இருக்கின்றது? என்று உள்ளத்தில் கடினம் உருவாகி விடுகின்றது. மனிதன் தூர விலகிக் கொண்டே செல்கிறான். பிறகு, இறைவனிடம் அந்நியத் தன்மை உருவாகி விடுகின்றது. அல்லாஹ்விடமிருந்து தொலைவு உருவாகி விடுகின்றது. அல்லாஹ்வை அந்நியனாக கருத நினைக்கிறான். பிறகு பகைமை உருவாகி விடுகின்றது. பிறகு அதன் விளைவாக ஈமான் பறிபோய் விடுகின்றது. பிறகு கடைசியில் அல்லாஹ்வின்

**இதன் தொடர்ச்சி 11-ம் பக்கம்...**

**National Watch Company**

**Sales & Service**



**B. Mohamed Adil**
93632 06679
99433 38000

**196, Trichy Road, Sulur - 641 402.**
**Somanur, Anuparpalayam, Karumathampatti.**

O.A. NIJAM
99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT
99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

**5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,**
**{ opp. Karuna Clinic } Tirunelveli-627005**

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad